# உதயன்




www.onlineuthayan.com

24: பக்கங்கள் சுடர் 27 கதிர் 310 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 15 திங்கட்கிழமை (01/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00


# நாங்கள் இப்போது அகதி இல்லையா?

## கோத்தாவிடம் கேப்பாபிலவு, வலி.வடக்கு மக்கள் கேள்வி



இன்னும் அகதிகளாக அவல வாழ்வுக்குள் கேப்பாபிலவு மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 1

எங்களது சொந்த நிலங்களில் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டு இன்னமும் அகதி முகாம்களிலேயே, வேறு இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளோம். இப்போதும் நாங்கள் அகதிகள்தான். எங்களுக்கான எந்த வசதிகளும் கிடையாது. இவ்வாறான நிலையில் அகதிகள் என்று இலங்கையில் யாரும் கிடையாது என்று அரசு கூறியிருப்பது உலகை ஏமாற்றவே.

இவ்வாறு வேதனையோடு தெரிவித்தனர் வலி. வடக்கு மற்றும் கேப்பாபிலவு மக்கள்.

ஏறக்குறைய 25 வருடங்களுக்கும் மேலாக சொந்த இடங்களில் இருந்து துரத்தப்பட்ட 1,208 குடும்பங்களைச் சேர்ந்த வலி.வடக்கு மக்கள் இன்னமும் மீள்குடியமர அனுமதியின்றி அகதி முகாம்களிலேயே தங்கியுள்ளனர். இதுகுறித்து தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பார்க்க பக்கம் 4

## அகன்ற தமிழகமே புலிகளின் கனவாம்

சென்னை, ஒக்.1

ஈழத்தையும் தமிழகத்தையும் இணைத்து அகன்ற தமிழகத்தை அமைக்கும் எண்ணத்துடன் விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியான, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் தமிழகத்தில் இருப்பதால் விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து தடை செய்ய வேண்டும்- இவ்வாறு தமிழகக் கியூ பிரிவுப் பொலிஸார் நீதிபதி ஜெயின் தலைமையிலான ஆணைக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்து டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி ஜெயின் தலைமையிலான ஆணைக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த வெள்ளி மற்றும் சனிக் கிழமைகளில் நடைபெற்ற விசாரணைகளின் போது முன்னிலையான தமிழக அரச சார்பு சட்டத்தரணிகள் விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், புலிகளின் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பித்தனர்.

இந்த ஆவணங்கள் 2 பெரிய தொகுப்புகளாக சீல் வைக்கப்பட்ட உறைகளில் அளிக்கப்பட்டன.

அதில் விடுதலைப்புலிகளும், அதன் ஆதரவு அமைப்புகளும் மேற்கொண்ட சட்ட

பார்க்க பக்கம் 4

## நோர்வே உறவில் புதிய யுகம்

கொழும்பு, ஒக். 1

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் புதிய யுகமொன்று மலர்ந்துள்ளது. இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளா

பார்க்க பக்கம் 4

**8** கூடங்குளம் அணு மின் நிலையத்தை உடனடியாகச் செயற்படுத்தக்கோரி நாளை மறுதினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்கிறார் தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் ஞானதேசிகன்.

**9** ஈரான் அணு குண்டு தயாரிக்க போதுமான யுரேனிய செறிவூட்டலை அடைய உள்ள நிலையில் அதைத் தடுத்து நிறுத்துமாறு இஸ்ரேலிய பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

**10** பாகிஸ்தானில் உள்ள அரச மருத்துவமனையில் தொடர்ச்சியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் 10 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தன.

## வடக்குத் தேர்தலை உடன் நடத்துங்கள்

### அமெ. மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 1

வடக்கு மாகாணசபைத் தேர்தலை உடன் நடத்துதல், போர்க்குற்றம் உள்ளிட்ட குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதித்தல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடை

பார்க்க பக்கம் 4

## 500 மில். டொலரை சீனா இலங்கைக்கு வழங்கியது

கொழும்பு, ஒக். 1

இலங்கையின் பாதை அபிவிருத்திக்காக சீனா, பெரியளவிலான கடனுதவியாக 500 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது.

நாட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளின் பாதைகளை அமைப்பதற்கான இரண்டாம் கட்ட கடன் உதவியாக சீனா, 500 மில்லியன் டொலர்களை இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளது.

இதற்கான அனுமதி கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

## இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு இந்தியாவிடம் கூட்டமைப்பு முறையிடும்

கொழும்பு, ஒக். 1

தமிழர் தாயகப்பகுதிகளில் அசுர வேகத்தில் அரங்கேற்றப்பட்டுவரும் இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு குறித்து டில்லி விஜயத்தின்போது இந்தியாவிடம் தமிழ்க் கூட்டமைப்பு முறையிடும் எனத் தெரிய வந்துள்ளது.

இந்திய மத்திய அரசு விடுத்த அழைப்பையேற்று, எதிர்வரும் 10 ஆம் திகதி இந்

பார்க்க பக்கம் 4

## திருமலையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிப்பு?

கொழும்பு, ஒக்.1

திருகோணமலை மாவட்டத்தில் வழமைக்கு மாறாக முஸ்லிம்களின் எண்ணிக்கை வீதம் உயர்வாகக் கணக்கிடப்பட்டால் அங்கு 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை மற்றும் குடியிருப்புகள் தொடர்பான கணக்கெடுப்புகளை மீளாய்வு செய்ய புள்ளிவிவரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்

பார்க்க பக்கம் 4

## கிழக்கு மாகாணசபையில் ‘திவிநெகும’ கூட்டமைப்பு கால அவகாசம் கோரும்

கொழும்பு, ஒக். 1

‘திவிநெகும’ சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் கிழக்கு மாகாணசபை நாளை செவ்வாய்க்கிழமை விவாதிக்கவுள்ள சூழ்நிலையில் இது விடயத்தில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு கால அவகாசமொன்றைக் கோருவதற்கு கிழக்கு மாகாணசபையின் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுத் தீர்மானித்துள்ளது.

‘திவிநெகும’ சட்டமூலத்தில் உள்ள சாதக பாதகங்கள் குறித்து நாம் விரிவாக ஆராய வேண்டியுள்ளது. எடுத்த எடுப்பிலேயே இதற்கு ஆதர

பார்க்க பக்கம் 4

## இந்தியா அழுத்தம் கொடுத்தாலும் படைமுகாம்கள் அகற்றப்படாது

கொழும்பு, ஒக்.1

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசு மூலம் அழுத்தம் கொடுத்தாலும் ஒருபோதும் அங்குள்ள படை முகாம்களை அகற்றப் போவதில்லை என இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பின் பிரதிநிதிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி இந்தியா

பார்க்க பக்கம் 4

## இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வேண்டும்

### ரவிசங்கர் சுவாமி வலியுறுத்து

கொழும்பு, ஒக். 1

அகதிகள் முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய மத்திய அரசு, இந்தியக் குடியுரிமையைக் கட்டாயம் வழங்க வேண்டும். அவர்களுக்கு அனைத்து சுதந்திரமும் வழங்கவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் வாழும் கலை அமைப்

பார்க்க பக்கம் 4

## நல்லிணக்கத்தை இந்தியாவே சீர்குலைக்கிறது

### குற்றம்சாட்டுகிறது இலங்கை

கொழும்பு, ஒக். 1

இலங்கையில் போருக்குப் பின்னரான நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைக்க இந்தியா தொடர்ந்தும் முயற்சித்து வருவதாக இலங்கை அரசு குற்றஞ் சுமத்தியுள்ளது.

இந்திய ஊடகங்களே இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக இலங்கை அரசு சுட்டிக்காட்டியுள்ளது. இதுகுறித்து இலங்கை அரசு சார்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். ஜனாதிபதியின் முயற்சியை கடந்த கால முயற்சிகளுடன்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கல் வீசித் தாக்கியது இலங்கை!

கொழும்பு,ஒக்.1

இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர் என தமிழக நாளேடுகள் தெரிவித்துள்ளன.

**மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை அங்கிருந்து செல்லும்படி கூறியதுடன் கருங்கற்களை சரமாரியாக மீனவர்கள் மீது வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.**

அதன்படி குறித்த மீனவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து கடந்த சனிக்கிழமை காலை 800 படகுகளில் இலங்கைக் கடல் எல்லையில் அன்றைய தினம் மாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை அங்கிருந்து செல்லும்படி கூறியதுடன் கருங்கற்களை சரமாரியாக மீனவர்கள் மீது வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதனையடுத்து தொடர்ந்தும் தமிழக மீனவர்களின் வலைகளை அறுத்து கடலில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

இதில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 10 படகுகளின் உரிமையாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையினரின் இந்தச் செயலினால் தமது தொழிலையும் இடை நடுவே விட்டு விட்டு தாக்குதலிலிருந்து தப்பி இரவோடு இரவாக மீனவர்கள் இராமேஸ்வரம் வந்தடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்தச் செயலானது நீண்டகாலமாக நடைபெற்று வருகின்ற ஒரு விடயமாக காணப்பட்டு வருகின்றது. ஆனாலும், பல தடவைகள் 2 நாடுகளும் பேச்சுகளை நடாத்தியும் இறுதியான முடிவு எதனையும் எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# கடத்தப்பட்ட மூன்று சிறுமிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டனர்

மட்டக்களப்பு,ஒக்.1

மட்டக்களப்பு கிரான் குளம் கிராமத்தில் அறநெறி பாடசாலைக்கு சென்ற மூன்று சிறுமிகள் கடத்தப்பட்ட நிலையில் மாமாங்கம் அமிர்தகழிப் பிரதேசத்தில் அன்று இரவே மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

**காலையில் பாடசாலைக்கு சென்றவர்கள் இரவாகியும் வீடுதிரும்பாததால் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு**

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிரான் குளம் விநாயகர் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் சர்மிளா, திவ்வியா, பௌமீகா ஆகிய மூன்று சிறுமிகளுமே நேற்றுக் காணாமல் போய் பின்னர் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலையில் அறநெறிப் பாடசாலைக்கு சென்ற மாணவிகள் இரவாகியும் வீடுதிரும்பாத நிலையில் பெற்றோர் காத்தான் குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாடசாலைக்கு காலையில் மாணவிகள் அங்கு அறநெறி பாடம் இடம் பெறவில்லை. எனினும் சிறுமிகள் வீடுகளுக்கு திரும்பிச் செல்லாது, ஆரையம்பதி பிரதேசத்தில் உள்ள தனியார் வகுப்பிற்கு சென்றுள்ளனர். அப்போது வான் ஒன்றில் வந்தவர்கள் அவர்களைப் பிடித்து வாயைக்கட்டி கடத்தி சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் அந்த சிறுமிகளை மாமாங்கம் பிரதேசத்தில் விட்டுச் சென்றுள்ளனர். பின்னர் அருகில் உள்ளவர்களின் உதவியுடன் சிறுமிகள் வீடுகளுக்கு தொலைபேசி மூலம் தாங்கள் இருக்கும் இடத்தை தெரிவித் ததாகவும் ஆரம்ப விசாரணை யில் இருந்து தெரியவந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக சம்பவ இடத்திற்கு காத்தான் குடி பொலிஸார் சென்று சிறுவர்களை மீட்டுள்ள துடன் இது தொடர்பான விசாரணைகளை காத்தான் குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (16)

# காந்தி ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரால் மகாத்மா காந்தி ஜெயந்தி தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த இதில் முற்பகல் 10 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கு முன்னால் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

பிற்பகல் 5 மணிக்கு திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவரும் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருமான எஸ்.இராசநாயகம் தலைமையில் நடைபெற வுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கவிஞர் சோ. பத்மநாதன் கலந்து கொண்டு "காந்தி வழி" என்ற தலைப்பிலும், யாழ்.பல்கலைக்கழக மெய் யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் "யுகபுருஷர் காந்தி" என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்துவார். அத்துடன் சைவ வித்தியா விருத்திச் சங்க மாணவர்களின் கலைநிகழ் வுகளும் இடம்பெறும். (16)

# 150 இலங்கை அகதிகளுடன் சென்ற படகு பிடிபட்டது

கொழும்பு,ஒக்.1

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 150 பேர் அடங்கிய படகொன்றை ஆஸ்திரேலிய கடற்பரப்பில் வைத்து அந்த நாட்டு கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாக அஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 135 பேர் ஆஸ்திரேலியாவின் டாவின் பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் அந்தத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அத்துடன், ஏனைய 15பேரையும் தென் பசுபிக் தீவான நௌறுவுக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மேற்படி ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (16)



உலக இதய தினம்நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதன் தேசிய நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மஹிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார் சிரந்தி ராஜபக்ஷ மற்றும் பிரமுகர்கள் ஊர்வலமாக பவனி வருவதைக் காணலாம்.

# அரசைத் தட்டிக் கேட்காவிட்டால் மீண்டும் புலிகள் தோன்றுவார்கள்

## சம உரிமைகளுக்கான அமைப்பு கூறுகிறது

கொழும்பு,ஒக்.1

இன்று இலங்கை அரசு வாய்களை மூடிக் கொண்டிருந்தாலும் இன்னும் 15 வருடங்களில் விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் உருவாகும் என சம உரிமைகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பின் அங்குரார்ப்பணம் அண்மையில் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அதில் உரையாற்றிய செயற்பாட்டாளர்கள் இதனை கூறியுள்ளனர்.

தற்போது வடக்கு, கிழக்கில் தமிழர்கள் வாழும் கிராமங்களுக்கு சிங்கள பெயர்களை சூட்டுகின்றனர். விகாரைகளை அமைக்கின்றனர். வெசாக், பொசோன் பௌர்ணமி நாட்களில் தானம் வழங்குகின்றனர். நாம் முன்னர் இருந்த காலத்தில் இருந்த பெயர்கள் அந்த கிராமங்களில் இல்லை. சிங்களவர்கள் எவரும் இல்லாத கிராமங்களுக்கு சிங்கள பெயர்களை சூட்டுவதை அரசாங்கம் ஏற்றுக் கொள் ளுமானால், விகாரைகளை அமைப்பதை ஏற்றுக் கொள்ளுமானால், தம்புள்ளை முஸ்லிம் பள்ளிவாசல் இருப்பதை ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது?. அப்படியானால் அதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இங்கு (தெற்கில்) போல் அல்ல வடக்கு கிழக்கில், அங்கு ஆட்சி செய்வது இராணுவம். ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், காவற்துறைக்கு அல்ல இராணுவ முகாமுக்கு சென்றே முறையிட வேண்டும். இராணுவத்தினால் தீர்க்க முடியாது போனால் மாத்திரமே காவற்துறையினரிடம் செல்ல வேண்டும்.

அடுத்தது, வீட்டில் இருப்பவர்கள் அனைவரும் புகைப்படம் ஒன்றை எடுத்து வீட்டில் மாட்டி வைக்க வேண்டும். இராணுவ அதிகாரி வந்தால், அவர் எங்கே இவர் எங்கே என விசாரிப்பார். இந்த மக்கள் இவ்வாறு இருப்பதை விட வெளிநாடுகளுக்கு செல்வது மேலென நினைக்ககூடும்.

தற்போது, இந்த பிரச்சினையை சிங்களவர், தமிழர், முஸ்லிம் என தனித்தனியாக தீர்க்க முடியாது. அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அனைவரும் இணைந்து இந்த பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும். இப்படி பேசுவதால் என்னையும் அச்சுறுத்தக் கூடும். எனினும் நாங்கள் இதனை பேச வேண்டும்.

இன்று நாம் வாய்களை மூடி கொண்டிருந்தால், இந்த நிலைமை தொடரும். இன்னும் 15 வருடங்களில் நாங்கள் இருக்க போவதில்லை. அப்போது இருக்கும் பிள்ளைகளுக்கு விடுதலைப்புலிகள் யார் என்பது தெரியாது. போர் இருந்ததா என்பதை கூட அறிந்திருக்க மாட்டார்கள். இந்த பிரச்சினை தெரியாது. இன்று நாம் வாய்களை மூடிக் கொண்டிருந்தால், இன்னும் 15 வருடங்களில் விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகுவார்கள் எனவும் அந்த நிகழ்வில் தெரிவிக்கப் பட்டது (16)

# புத்த தர்ம பாடசாலை யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்ப்பாணத்தில் புத்ததர்ம அறநெறிப் பாடசாலையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று யாழ். நாகவிகாரையில் தமிழ் பௌத்த சங்கத் தலைவர் ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களை புத்த தர்ம பாடசாலையில் இணைந்து கல்வி கற்பிப்பதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம்அருமைநாயகம், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோர் கலந்து கொண்டு அறநெறிப் பாடசாலையில் இணைந்து பௌத்த மதத்தைக் கற்பிப்பதற்காக மாணவர்களை [illegible] (14)

# எங்களுக்கு இங்கு உரிய வழிகாட்டல்கள் இல்லை

## வர்த்தக சங்க நடவடிக்கை போதாது என்கிறார் யாழ். வர்த்தகர்

யாழ்ப்பாணம்,ஒக்.1

கடன் சுமையில் மூழ்கியுள்ள யாழ்.நகர் வர்த்தகர்களுக்கு ஆலோசனைகளை வழங்கவோ, வழிகாட்டவோ யாழ்.மாவட்ட வர்த்தக சங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள பின்தங்கி நிற்பதாக யாழ்.நகரின் பிரபல வர்த்தகர் நடராஜா ரவிதரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திசைகாட்டி முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.நகர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கீடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

யாழ்.நகரைச் சேர்ந்த 90 வீதத்துக்கும் மேலான வர்த்தகர்கள் யாழ்.வர்த்தக சங்கத்தில் இணைந்துள்ளார்கள். இவர்கள் தமது கடன் சுமைகள் தொடர்பாக வர்த்தக சங்கத்திடம் முறைப்பாடு செய்யச் சென்றால், உங்களால் எப்படி கடனை அடைக்க முடியும் என எம்மிடமே திருப்பி கேள்வி கேட்கிறார்கள் வர்த்தக சங்கத்தினர். இதனால் வர்த்தகர்கள் தகுந்த ஆலோசனைகள் இல்லாமல் வர்த்தக நிலையங்களை மூடிவிட்டு கடன் சுமையில் ஒளித்து ஓடித்திரிவதுடன் தற்கொலை செய்யவும் முயல்கின்றனர். இவர்கள் உளரீதியான பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கிறார்கள்.

அத்துடன் தென்னிலங்கையில் இருந்து தரம் குறைந்த பொருள்கள் வர்த்தகர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளதால் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாமல் கொள்வனவுக்கான பணத்தை மட்டுமே மீளச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைப்பதுடன், வர்த்தகர்கள் வங்கி மூலம் உடனடியாக கடன் பெறக்கூடிய ஒழுங்குகளை வர்த்தக சங்கம் மேற்கொண்டால் மட்டுமே நாம் மீளவும் வியாபார நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (16-14)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விதை நெல்லைப் பெறுவதில் கிளிநொச்சி விவசாயிகள் சிரமம்

## அதிகரித்த விலையில் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம்

*கிளிநொச்சி, ஒக்.1*

*கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.*

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை வறட்சி காரணமாக அழிவடைந்ததையடுத்து விதை நெல்லுக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. தற்போது ஒரு மூடை விதை நெல்லைச் சுமார் 2 ஆயிரத்து 350 ரூபா முதல் 2 ஆயிரத்து 700 ரூபா வரை கொடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். மேலும் அதிக விலை கொடுத்த போதிலும் தரமான விதை நெல்லைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தாம் இருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அநேகமான விவசாயிகள் ஏனைய விவசாயிகளிடமிருந்தே அதிகரித்த விலையில் விதை நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு தற்போது பரவலாக மழை பெய்து வருவதனால் நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். சிறுபோகத்தின் போது ஏற்பட்ட நட்டத்தை இந்தப் பெரும் போகத்திலாவது ஈடுசெய்யலாமென அவர்கள் நம்பினார்கள். ஆனால் தரமான விதை நெல் கிடைக்காததால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

விவசாய திணைக்களத்தினர் தமது அவல நிலையை உணர்ந்து தமக்குத் தரமான நெல்லை நியாயமான விலையில் வழங்க வேண்டுமென இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இல்லாவிட்டால் தாம் தொடர்ந்தும் நட்டத்தை எதிர்கொள்வதுடன் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருக்குமெனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். (க-6)



நெடுங்கேணி ஆலடிக் கிராமத்தில் மீள்குடியமர்ந்த குடும்பம் ஒன்றின் இன்றைய அவல நிலையையே இங்கு காண்கிறீர்கள். (க-18)

## இழுத்தடிக்கப்பட்டு வரும் வீதி வேலைகள்

திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன் வன்னேரிக்குளம் வரையான 14 கிலோ மீற்றர் தூரமான வீதியின் புனரமைப்பு வேலைகள் நீண்ட காலமாக நிறைவு பெறாமல் இழுத்தடிக்கப்படுவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இவ் வீதியின் புனரமைப்பு வேலைகள் நிறைவு பெறாததால் அமதிபுரம், அக்கராயன் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து வசதியியை இழந்த நிலையில் உள்ளனர்.

இவ் வீதி புனரமைக்கப்படுமானால் 20 நிமிடங்களில் அக்கராயன் மருத்துவமனையின் அம்புலன்ஸ் கிளிநொச்சி மருத்துவமனையைச் சென்றடையக் கூடிய நிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## மழை வந்தது கவலை பறந்தது

நெடுங்கேணி, ஒக்.1

நெடுங்கேணிப் பகுதியில் கடந்த வாரம் முதல், மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இங்கு மழை பொய்த்தமையால் கடும் வறட்சி நிலவியது. இதனால் விவசாயச்செய்கைகள் பாதிக்கப்பட்டன. விவசாயிகளும் கடும் நட்டத்தை எதிர்கொண்டதோடு, தமது எதிர்காலம் தொடர்பான கவலையிலும் ஆழ்ந்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வாரம் தொடக்கம் மழை பெய்து வருவதால் நெற்செய்கை, மரக்கறிச் செய்கைகள், சிறுதானியச் செய்கைகள் என்பவற்றில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக சேனைப் பிளவு, ஒலுமடு, கீரிசுட்டான், கற்குளம், மருதோடை, மாறா இலுப்பை, பட்டிக்குடியிருப்பு, குளவிசுட்டான் ஆகிய பகுதிகளில் விவசாயச் செய்கைகள் தீவிரமடைந்துள்ளன.

(க-435)

## நிலாக்கால கருத்தரங்கு

நெடுங்கேணி, ஒக்.1

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் நிலாக்கால கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு ஊரியான் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-14)

# பொலிஸார் நடத்திய போட்டிகள்; கனகராயன் ம.விக்கு இரு முதலிடம்

மாங்குளம், ஒக்.1

மாங்குளம் பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான விவாதம் மற்றும் ஓவியப் போட்டிகளில் கனகராயன்குளம் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மாங்குளம் பொலிஸ் நிலைய பிரதேசத்துக்கு உட்பட்ட க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள் இடையே விவாதப் போட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ''இனப் பிரச்சினையின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி சாதகமா? பாதகமா? என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதப் போட்டியில் 'பாதகம்' என வாதிட்ட கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியினர் முதலாம் இடத்தையும், சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணியினர் 2 ஆம் இடத்தையும் பெற்றனர்.

சிறுவர்களுக்கான ஓவியப் போட்டியிலும் கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவன் லக்சுமிகாந்தன்-அபிசன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர்களுக்கான சான்றிதழ்களை மாங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி வழங்கினார். (க-422)

# வீதி புனரமைப்பு வேலைகளில் வயது குறைந்த சிறுவர்கள்

கிளிநொச்சி, ஒக்.1

கிளிநொச்சிப் பகுதியில் வீதி புனரமைப்புப் பணிகளில் வயது குறைந்த சிறுவர்கள் ஈடுபடுவதைக் காண முடிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏ-9 வீதி மற்றும் ஏ-35, ஏ-32 ஆகிய வீதிகளில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த வேலைகளில் தற்போது 18 வயதுக்கும் குறைவான சிறுவர்களைத் தொழிலாளர்களாக பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு சிறுவர்களைத் தொழிலாளர்களாக பயன்படுத்துவதனால் பாடசாலை செல்லுகின்ற சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீதி புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு சிறுவர்களைத் தொழிலாளர்களாகப் பயன்படுத்துவதை ஏ-35, ஏ-32 வீதிகளில் அதிகம் காண முடிகின்றது. இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டுமெனவும் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# சட்டவிரோத மண் அகழ்வினால் கடல் நீர் உட்புகும் அபாயம்

## கண்டாவளைப் பிரதேசத்தில்

கிளிநொச்சி, ஒக்.1

கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேசத்தில் மணல் அகழ்வுக்கென ஒதுக்கப்படாத இடங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதனால் எதிர்காலத்தில் கடல் நீர் கிராமங்களுக்குள் புகும் அபாயநிலை ஏற்படுமென இங்கு வசிக்கும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது கண்டாவளையில் மணல் அகழ்வதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர குடியிருப்பாளர்களின் காணிகளில் அவர்கள் இல்லாத நிலையில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக மடுக்கரை, உப்பாறு, ஆவரஞ்சாட்டி, செட்டித்துறை ஆகிய கிராமங்களிலேயே இச்சட்டவிரோத மணல் அகழ்வுகள் பெருமளவில் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக மடுக்கரை,
உப்பாறு,
ஆவரஞ்சாட்டி,
செட்டித்துறை ஆகிய
கிராமங்களிலேயே
இச்சட்டவிரோத மணல்
அகழ்வுகள் பெருமள
வில் இடம்பெற்று
வருகின்றன.

இதனால் எல்லையோரமாக உள்ள வடமராட்சி கிழக்குப்பகுதியில் கடல்நீர் மற்றும் ஆனையிறவு கடல் நீர் என்பன எதிர்காலத்தில் கிராமங்களினுள் உட்புகும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு கடல் நீர் உட்புகுமாக இருந்தால், தற்போது நன்னீர்க் கிணறுகள் உள்ள பகுதிகளும் உவர் நீராக மாறுவதுடன், குடிதண்ணீரைக்கூட வேறு இடங்களிலிருந்துதான் பெறக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-6)

## மன்னார் பாடசாலைகளின்
# ஐந்து புத்தாக்கங்கள் தேசிய கண்காட்சியில்

மன்னார் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள ஐந்து புத்தாக்கங்கள் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள புத்தாக்க கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

இந்தக்கண்காட்சி நேற்றைய தினம் ஆரம்பமாகி நாளை வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைவாக மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. ஆர். விஸ்டம் பிறைற் இன் இயற்கைத் தலைக்கவசம், அதே கல்லூரியைச் சேர்ந்த செல்வி. எஸ் . ஆன்ஜிகாவின் இயற்கைப் பாதணி, வங்காலை புனித ஆனாள் மத்தியமகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி. ஜே.எம். ஆனஸ்ரிகா சோசையின் நீர்வடிகட்டி, சிலாவத்துறை அ.மு.க. பாடசாலையைச் சேர்ந்த செல்வன் எஸ். சச்சினின் வரம்பு வெட்டும் கருவி, மா அரிக்கும் கருவி ஆகிய ஐந்து புத்தாக்கங்களே கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. (க-12)

# மழை தொடர்ந்தால் மட்டுமே வறட்சியின் தாக்கத்தில் மாற்றம்

## கிளிநொச்சி அரச அதிபர் கூறுகிறார்

அக்கராயன், ஒக்.1

தொடர்ந்து மழை பெய்யும் போது தான் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சியின் தாக்கத்தில் மாற்றங்கள் ஏற்படும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தின் வறட்சி நிலை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தார் அரச அதிபரான திருமதி றூபாவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாகப் பிரதேச செயலகங்கள் ஊடாக விவரங்கள் திரட்டப்படுவதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு நிலவிய கடும் வறட்சியினால் குளங்கள் வற்றியுள்ளன. கிணறுகளிலும் நீரைக்காண முடியவில்லை. இதனால் மக்கள் தமக்குத் தேவையான நீரைப் பெறுவதில் கடும் அவலங்களை எதிர்கொண்டனர்.

விவசாயப் பயிர்களும் கடுமையான அழிவுகளை எதிர்கொண்டன. இந்த நிலையில் தற்போது இங்கு பெய்து வரும் மழையினால் நிலத்தடி நீர் நிலைகளில் மாற்றம் ஏற்படாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# குளத்திலிருந்து மண் அகழ்வதால் உயிராபத்தை எதிர்கொள்ளும் மக்கள்

நெடுங்கேணி, ஒக். 01

நெடுங்கேணி ஈட்டி முறிஞ்சான் கிராமத்திலுள்ள குளத்திலிருந்து தொடர்ந்து மண் அகழப்படுவதால் எதிர்காலத்தில் பெரும் உயிராபத்துக்களைச் சந்திக்க நேரிடுமென மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குளத்தை ஆழமாக்குதல் என்ற பெயரில் சீனநிறுவனமொன்று தமது தேவைக்கு இந்த மண்ணை எடுப்பதாகத் தெரியவருகின்றது . சுமார் 20 அடிக்கு மேலான ஆழத்தையுடைய குழிகள் குளத்தின் நடுவிலே ஆங்காங்கு கிணறுகள் போன்று காணப்படுகின்றன.

குளத்தில் நீர் நிரம்பும் போது இங்கு குளிப்பதற்குச் செல்பவர்களும், மீன்பிடிக்கச் செல்பவர்களும் பெரும் உயிராபத்துக்களை எதிர்கொள்ளும் நிலை தற்போது உருவாகியுள்ளது.

இது தொடர்பாக கிராம மக்களும், நெடுங்கேணி கமநலசேவை அதிகாரியும் எதிர்ப்புத் தெரிவித்து தடுத்து நிறுத்த முற்பட்ட போதிலும், பயன் எதுவும் கிடைக்கவில்லை. தற்போதும் மண் அகழ்வு தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. இதனைத் தடுத்து நிறுத்துமாறு கமக்கார அமைப்புக்களும், அப்பகுதி மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நாங்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தநிலையில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை கிளிநொச்சி ஜெயந்தி நகரில் சிறுவர் இல்லத்தை திறந்து வைத்துப் பேசிய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வடக்கு, கிழக்கில் இடம் பெற்ற போர் காரணமாக தமது சொந்த நிலங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்த அனைத்து மக்களும் மீள் குடியேற்றப்பட்டு விட்டார்கள். இப்போது இலங்கையில் அகதி என்று எவருமே கிடையாது என்று கூறியிருந்தார். இன்னமும் அகதி முகாம்களிலும், சொந்த இடங்களற்ற வேறு பகுதிகளிலும் அல்லல்படும் ஆயிரக்கணக்கான மக்களை கோத்தபாயவின் இந்த அறிவிப்பு அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியுள்ளது.

''அகதிகள் எல்லோரும் மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டனர் என்று அரசு தெரிவித்திருக்கிறது. அப்படியானால் எங்களுடைய மீள்குடியேற்றம் கிடப்பில் போடப்பட்ட விடயமாகிவிட்டதா? உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் எங்களது நிலங்களை நிரந்தரமாகத் தனது பிடிக்குள் வைத்திருக்க படைத்தரப்பு நினைக்கிறது. அதனாலேயே எல்லோரும் மீள்குடியேற்றப்பட்டு விட்டதாக உலகுக்குக் கூறி, மீளக் குடியேற வேண்டிய எங்களது பிரச்சினையை அரசு மூடி மறைத்துள்ளது.'' - என்று வலி.வடக்கு மக்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று, தமது சொந்த நிலத்தில் குடியேற கேப்பாபிலவைச் சேர்ந்த 110 குடும்பங்களுக்கும் அரசு அனுமதி மறுத்து அவர்களை எந்தவித அடிப்படை வசதிகளும் அற்று சூரியபுரம், சீனியா மோட்டை போன்ற வேற்றிடங்களிலேயே தங்க வைத்துள்ளது. குறித்த பகுதிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. குளியல், சமையல் முதலான தேவைகளுக்குக் கூட இங்கு தண்ணீரைப் பெறமுடியாதுள்ளது. இதனால் நாலைந்து நாள்களுக்கு மேலாக குளிக்காமலேயே இந்த மக்கள் அவலப்படுவதாகத் தெரிவித்தனர்.



''எங்களை இருமாதங்களுக்கு தற்காலிகமாகவே இங்கு தங்கியிருக்குமாறும் அதன்பின்னர் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுவோம் என்றும் உறுதி மொழி வழங்கப்பட்டிருந்தது. இப்போது அரசு சொல்வதைப் பார்க்கும்போது எங்களுடைய மீள்குடியேற்றமும் அதோகதிதான் என்றே படுகிறது. மழைக்கும் வெயிலுக்கும் நடுவில் ஆயுள் முழுக்க இங்கேயே நாங்கள் அல்லாட வேண்டியதுதான் போலும்.'' இவ்வாறு கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர். இவ்வாறு இன்னமும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக அவலப்பட்டு வரும் நிலையில் உலகை ஏமாற்றுவதற்காகவே அரசு இப்போது அகதிகள் யாரும் இல்லை என்று பொய்ப்பிரசாரம் மேற்கொள்வதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கேப்பாபிலவு பகுதிக்கு நேற்று சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த செ.கஜேந்திரன் ஆகியோர் அங்கு அடிப்படை வசதிகள் எதுவுமின்றித் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பண உதவி மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பவற்றை வழங்கினர். (ங-5)

## திருமலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களின் தொகை 29 வீதத்தில் இருந்து 33 வீதமாக வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளதாக குறித்த கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்தே மீளாய்வு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக அதிகாரிகள் திருமலை சென்றுள்ளனர்.

மீளாய்வின் பின்னரே 2011 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டத்தின் மக்கள் தொகை தொடர்பான முழுமையான விவரம் வெளியிடப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது. (ங)

## 500 மில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தத் திட்டத்தின் கீழ் தென்பகுதிக்கு 337 கோடியே 61 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் வடபகுதிக்கு 401 கோடியே 4 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. இது தொடர்பான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

## நோர்வே...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து..

தார அபிவிருத்திக்கு தமது நாடு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும் என இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறீட் லோச்சன், பஸில் ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை மீன்பிடி மற்றும் சுற்றுலா அபிவிருத்திக்காக நோர்வே, இலங்கைக்கு உதவி வழங்கி வருகிறது. இந்த நிலையில், இலங்கை மற்றும் நோர்வே முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் இடையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வது சிறந்தது எனவும் தூதுவர் கூறியுள்ளார். இதன்பின்னரே பஸில் இருநாட்டு உறவுகளில் புதிய யுகம் பிறந்துள்ளதாகக் கருத்து வெளியிட்டுள்ளார். (ங)

## வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முறைப்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசு உண்மையான அர்ப்பணிப்பை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு மீண்டும் அமெரிக்காவின் தரப்பில் வலியுறுத்தியுள்ளார் தென் மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்ட அமர்வுகளில் கலந்து கொண்டுள்ள இலங்கைத் தொலைக்காட்சி ஊடக மொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சுதந்திரத்துக்கு முன்னைய காலங்களில் இருந்தே இலங்கையுடன் மிகவும் நெருங்கிய நட்புறவை அமெரிக்கா பேணி வருகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை துரித கதியில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசு கூடுதல் முனைப்புக் காட்ட வேண்டும்.

போர்க்குற்றம் உள்ளிட்ட குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதித்தல், வடக்கு மாகாணசபைத் தேர்தல் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையில் நல்லிணக்க முனைப்புகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என நாம் குறிப்பிடவில்லை.

எனினும் போர் மையம் கொண்டிருந்த பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசு இரு வேறு விதமான அணுகுமுறைகளைப் பின்பற்றி வருகிறது. இதனை நாம் அவதானித்துள்ளோம்.

கிழக்கில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஓர் ஆண்டிலேயே மாகாணசபைத் தேர்தலை அரசு நடத்தியது. ஆனால் வடக்கில் போர் முடிவுக்குவந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய வேறுபட்ட அணுகுமுறைகளை போர் நடைபெற்ற பகுதிகளில் இலங்கை அரசு கடைப்பிடிப்பது அதன்மீதான நம்பிக்கையையும், நல்லிணக்கத்தில் ஏற்படுத்துவதில் அது கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் கேள்விக்குறியாக்கும்.

எனவே நல்லிணக்க முனைப்புக்களை துரித கதியில் மேற்கொள்வதன் மூலமே போரால் ஏற்பட்ட காயங்களை ஆற்ற முடியும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு - என்றார் அவர்.

ஜெனிவாவில் மனித உரிமைகள் சபை அமர்வுகள் தொடங்கவுள்ள சூழலில் தொடர்ச்சியாக இலங்கை மீது அமெரிக்கா கொண்டுள்ள அவநம்பிக்கை தொடர்பான கருத்துகள் வெளிவரத் தொடங்கியுள்ளதையே ரொபேர்ட் ஓ பிளேக்கின் கருத்தும் வெளிப்படுத்தியுள்ளது. எனவே இம்முறையும் ஜெனிவா அமர்வில் இலங்கை நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ங-சி)

## இந்தியா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வுக்கு சென்று, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்த உள்ளனர்.

இந்தப் பேச்சின் வடக்கில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தல், கிழக்கு மாகாண சபை ஆட்சி விவகாரம், முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடுகள் தொடர்பாக இந்திய அரசிடம் கூட்டமைப்பு முன்வைக்கவுள்ளதாக ஊகிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்று இந்தியா ஊடாக கூட்டமைப்பு எவ்வகையான அழுத்தங்களைக் கொடுத்தாலும் ஒருபோதும் வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட மாட்டாது என்று அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 1959 ம் ஆண்டு முதல் இராணுவ முகாம்கள் இயங்கி வருவதாகவும் எனவே தேசிய பாதுகாப்பு கருதி இந்த முகாம்களை அகற்ற முடியாது என்றும் இலங்கை பதிலளிக்கும் எனக் கூறப்படுகிறது. (ங)

## அகன்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விரோத நடவடிக்கைகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் ஆவணங்கள் என்று கியூ பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

''விடுதலைப் புலிகளின் அரசியல் அணியான மக்கள் முன்னணி சார்பில் தமிழகத்தையும், ஈழத்தையும் இணைத்து விரிந்த தமிழகம் அமைக்கும் திட்டம் இருப்பதாகவும், அதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ இதை மறுத்து வாதிட்டார்.

''விடுதலைப் புலிகளுக்குத் தமிழகத்தைப் பிரிக்கும் எண்ணம் இருந்ததில்லை. விடுலைப் புலிகள் மக்கள் முன்னணி 1991-லேயே கலைக்கப்பட்டுவிட்டது'' என்றும் வைகோ எடுத்துரைத்தார்.

இதற்கு ''அந்த அமைப்பு கலைக்கப்பட்டதாக இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் விடுதலைப் புலிகள் வெளியிடவில்லை. மேலும் அந்த அமைப்பின் சார்பில் இணையத்தளங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன'' என்று கியூ பிரிவுப் பொலிஸார் வாதிட்டனர்.

இந்த விசாரணைகள் சுமார் அரை மணி நேரம் நடைபெற்றன. இதன் பின் நீதிபதி வி.கே.ஜெயின் அடுத்த விசாரணை கொடைக்கானலில் ஒக்ரோபர் 20, 21ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவித்தார். (ங)

## நல்லிணக்கத்தை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஒப்பீடு செய்வது தவறானது.

80களில் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இந்தியாவே பயிற்சி அளித்தது. அதுவே இன முரண்பாடுகள் தீவிரமடைய வழிவகுத்தது.

2009ஆம் ஆண்டு வன்னியில் புலிகளுக்கு எதிரான போர் முன்நகர்வுகளை தடுத்து நிறுத்த இந்தியா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் தீவிர முயற்சி செய்தன. ஆனால் அவற்றையெல்லாம் தாண்டி இலங்கை வெற்றி பெற்றது.

இன்று பிரபாகரனோ, பொட்டு அம்மானோ அல்லது சூசையோ உயிருடன் இருந்திருந்தால் சர்வதேச சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கவனத்தில் எடுத்திருக்காது. வடக்கில் எப்போது தேர்தல் நடத்த வேண்டும் என்பது பற்றி இந்திய ஊடகங்கள் இலங்கைக்கு போதிப்பது அதிகபிரசங்கித்தனமான செயல் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை விவகாரம் தொடர்பில் இந்து பத்திரிகை உள்ளிட்ட இந்தியாவின் முக்கிய ஊடகங்களில் இலங்கை அரசுக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ங)

## இராணுவத்தினரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தியாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளும் கூட்டமைப்பினர், அரசியல் தீர்வு, மீள்குடியேற்றம், கைதிகள், காணாமற்போனோர் விடயங்கள் குறித்தும் இதன்போது பேசவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இன்று இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே காந்தாவை சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜா மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விஜயத்திற்கான நிகழ்ச்சிநிரல், இன்று கூட்டமைப்பின் கைகளுக்குக் கிடைக்கப்பெறும் என்றும் குறித்த நிகழ்ச்சி நிரலை இந்தியத் தூதுவர் கையளிப்பார் என்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்தின்போது எவ்வாறான விடயங்கள் குறித்து பேசப் போகின்றோம் என்பது குறித்துக் கூற முடியாது. ஏனெனில், இந்திய மத்திய அரசுதான் அழைப்பை விடுத்துள்ளது. அதுதான் நிகழ்ச்சி நிரலை தரவேண்டும்.

எனினும் வழமையான விடயங்களான, அரசியல் தீர்வு, மீள் குடியேற்றம், கைதிகள், காணாமற்போனோர் விடயம், நில ஆக்கிரமிப்பு, இராணுவப் பிரசன்னம் ஆகியவை குறித்து இந்த விஜயத்தின்போது பேசப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ங-சி)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பின் நிறுவுநர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்.

சென்னை கீழ்ப்பாக்கம் பவன்ஸ் ராஜாஜி வித்யாஷ்ரம் பள்ளியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கல்வியின் விழுமியங்களை மேம்படுத்துவது குறித்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அகதிகள் 25-30 ஆண்டுகளாக இந்தியாவில் வசிக்கின்றனர். இதன் காரணமாக இந்தியா பெருமை கொள்ள வேண்டும். அவர்களின் குழந்தைகள் பலர் இந்தியாவில் பிறந்துள்ளனர்.

தமிழின் பெருமைகளை மாணவர்கள் அறிந்து கொண்டால் அவர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

ஜப்பானிய மொழியில் தமிழ் சொற்களின் தாக்கம் அதிகம் உள்ளது. இதேபோல, தென் அமெரிக்க நாடான பெருவுக்கு சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன்னரே திராவிடர்கள் சென்றுள்ளனர் என்பது போன்ற தகவல்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தெரிவிக்க வேண்டும்.

இதனால் மாணவர்களுக்கு மொழியின் மீதான மதிப்பு அதிகரிக்கும். மொழியின் மீதான மதிப்பு அதிகரித்தால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இதன்மூலம், அவர்கள் சொந்த காலில் நிற்கமுடியும் - என்றார் அவர். (ங-சி)

## கிழக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வளித்தோ அல்லது எதிர்த்தோ எமது தீர்மானத்தை அறிவித்துவிட முடியாது. எனவே, இதற்கு கால அவகாசத்தைக் கோரத் தீர்மானித்துள்ளோம் என்று தமிழ்க் கூட்டமைப்பின் முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார்.

''எமது கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் கால அவகாசத்தைத் தரவேண்டும். இல்லையேல், தமிழ் மக்களின் குறிப்பாக கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளை அது புறந்தள்ளுவதாகவே அமையும்'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் 'திவிநெகும' சட்டமூலத்திற்கான அங்கீகாரத்தை மாகாணசபையில் வழங்குவதா இல்லையா என்பது குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று முடிவெடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (ங-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# எங்களவரை வாழவைக்க மனங்கொள்ள முற்படுவோம்...

கிளிநொச்சி மாவட்டத்தில், கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர்ப் பொருள்களை சந்தைப்படுத்த முடியாத நிலை உள்ளதாக அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்; கவலை தெரிவித்துள்ளார். உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான உகந்த பொறிமுறைகள் அவசியம் என்பதனை அவர் இவ்வாறு மறுவளமாகக் கூறியுள்ளார் என்று கொள்ளலாம்.

அனைத்துலக மட்டத்தில் பெருங்கைத்தொழில் யுகம் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, வளர்ச்சி கண்ட நாடுகள் என இப்போது கொள்ளப்படும் மேற்குலக நாடுகளில் தோற்றம் கண்டது. கைத்தொழில் புரட்சி மனிதனின் வாழ்க்கை நிலையை பிரமிக்கும் அளவுக்கு உயர்த்தியது; இப்போது மேன்மேலும் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிறது.

கிராமங்கள், நகரங்கள் சார்ந்த பாரம்பரிய கைத்தொழில்கள் நலிந்தும் மெலிந்தும் போக, பெருங்கைத்தொழில்கள் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தை வளர்த்து உயர்த்தின. அதனூடு அந்த நாடுகள் பூமிப்பந்தின் ஏனைய நாடுகளை விட முந்திச் சென்று முன்னணிக்கு வந்தன.

மேலைநாடுகளின் புதிய தொழில் வளர்ச்சிகள், கிழக்கத்திய நாடுகளையும் ஏனைய கண்டங்களைச் சேர்ந்த நாடுகளையும் கைத்தொழில் யுகம் நோக்கி சிறிதளவேனும் நகரச் செய்தது. ஆயினும் வளர்ச்சி அடையாத நாடுகளும், புதிய மிலேனிய மட்ட உயர்ச்சி பெறாத நாடுகளும், அங்கு வாழும் மக்களும் தமது பாரம்பரிய தொழில்களையும், கிராம மட்டத்திலான சிறு கைத்தொழில்களையும் தமது வாழ்க்கை வருமானத்துக்கும் பொருளியல் ஆதாரத்துக்கும் மிகக் குறிப்பிட்ட வீதத்துக்கேனும் நம்பியிருக்கும் நிலை தொடர்கிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் இது விவசாய உற்பத்தி நாடாகவே இருந்தாலும், கைத்தொழில் துறையிலும் ஓரளவு முன்னோக்கிச் செல்கிறது. தென்னிலங்கையில் சுயதேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டு பல பெரும் தொழிற்சாலைகள் திறம்பட இயங்கி வருகின்றன. அரச, தனியார்துறைகளின் பங்களிப்பு சராசரி என்று கணிக்கும் அளவுக்கேனும் உண்டு.

ஆனால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில், தமிழர் மாவட்டங்களில் பெயர் சொல்ல இருந்த தொழிற்சாலைகளும் அற்றுப்போய் விட்டன; அழிந்துபோயுள்ளன.

போரினால் மிகப் பெரியளவில் பாதிப்புற்று வாழ்க்கையைக் கொண்டு செலுத்தமுடியாமல் அல்லாடும் அவர்கள், விவசாயம், கடற்றொழில் ஆகிய இரண்டையுமே, மிகப் பிரதானமாகத் தமது ஜீவனோபாயத்துக்கு நம்பியிருக்க வேண்டியுள்ளது.

ஒப்பீட்டளவில் ஏனைய மாவட்ட மக்களை விட கிளிநொச்சி, முல்லைத்தீவு , மன்னார், யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தமது வாழ்க்கையின் ஓரத்துக்கே தள்ளிவிடப்பட்டுள்ளனர். எழுபது எண்பது வருடங்களுக்கு பின்தள்ளப்பட்டுள்ளனர் என்று கூறினும் மிகையன்று.

அவர்கள் தமது அடிப்படை வாழ்வாதாரங்களை இழந்து நிற்கும் இப்போதைய அவல நிலையில், அடிமட்ட சிறுகைத்தொழில் முயற்சிகளே ஆரம்பத்தில் ஓரளவேனும் கைகொடுக்கும். சிறுகைத்தொழில்களில் இடப்படும் மூலதனம் திரும்பக் கிடைக்கும் அளவுக்கு அவை சந்தைப்படுத்தப்பட்டால் மட்டுமே அதன் மூலம் சிறு வருவாயேனும் அதில் ஈடுபடுவோருக்குக் கிடைக்க வாய்ப்புண்டு.

சிறுகைத்தொழில் உற்பத்தி பொருள்களுக்கு சந்தைவாய்ப்பை உண்டாக்குவதற்கும் அதிவிசேட முயற்சிகள் தேவைப்படுவதுண்டு. அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான உத்திகளை உரிய முறையில் கையாண்டாலும், நுகர்வோர் தரப்பை கவர்ந்திழுக்க வல்ல செயல்வடிவங்களை காலத்துக்குக் காலம் மாற்றிக்கொள்வது அவசியம்.

கிளிநொச்சியை அண்டிய பகுதிகளில், பரந்தன், சுண்டிக்குளம், கல்லாறு, பூநகரி, கண்டாவளை, வட்டக்கச்சி, கல்மடு, அக்கராயன், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிறுகைத்தொழில் உற்பத்திப் பொருள்களான -

அப்பளம், 'மிக்சர்', தும்புத்தடி, விளக்குமாறு, ஊதுபத்தி, அரிசிமா, மிளகாய்த்தூள், தும்பினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் என்பவற்றுக்கு போதிய அளவில் விற்பனை வாய்ப்பு இல்லை என்று கிளிநொச்சி அரச அதிபர் கவலையுடன் சுட்டிக்காட்டி உள்ளார்.

அவற்றுக்கான புதிய சந்தை வாய்ப்பு உத்திகளில் அனுபவம் உள்ளவர்களை இனங்கண்டு, அவர்களின் உதவியுடன் சிறுகைத்தொழில் துறைகளைத் தொடர்ந்து இயக்குவதற்கு மனம்கொள்வது அவசியம்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களை இனங்கண்டு, ஆரம்பிக்கப்படும் சிறுகைத்தொழில்களுக்கு ஆதரவும் ஊக்கமும் தரும் மனப் பக்குவம் இவ்வேளையில் எமது பிராந்தியத்தைச் சேர்ந்த எல்லோரிடமும் உண்டாகி, வளர வேண்டும்.

கொழும்பு மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து கிடைக்கும் இங்கு உற்பத்தி செய்யப்படும் ஒத்த சிறுகைத்தொழில் பொருள்களை முதன்மைப்படுத்துவதைத் தவிர்த்து, விலைகளில் சிறுசில வேறுபாடுகள் இருப்பினும், உள்ளூர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும் மனோபலம் எம்மிடையே வளர வேண்டும்.

இதனைப்பிரதேச வாதம் என்றோ, வேற்றுமை வேஷம் என்றோ, பொருள் கொள்ள வேண்டியதில்லை. நொந்துபோன வடக்கு மக்களுக்கு வாழ்வாதாரங்களைத் தேடிக்கொடுப்பதில் கொழும்பு அரசாங்கம் இன்னும் விசேட திட்டங்களை முழு அளவில் செயற்படுத்துவதில் முனைப்புக் காட்டியதாக இல்லை. அபிவிருத்தி என்ற பெயர்ப்பலகையோடு தனக்கு விருப்பமான அல்லது நயம் தரும் பணிகளில் கைதொட்டுள்ளது.

ஆகையால், இங்கு கிடைக்கக் கூடிய மூலவளங்களைக் கொண்டு உற்பத்தியாகும் சிறுகைத்தொழில் பொருள்களை வாங்குவதில் முதன்மை இடம் (Priority) வழங்குவது எம்மவருக்குரிய கடமை, பொறுப்புணர்வு என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமிருக்கலாகாது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்த மகாத்மா காந்தியடிகள் தாமே ராட்டினம் சுற்றியவர். நூல்நூற்று சுயதேவையை பூர்த்திசெய்யத் துணியவேண்டும் அவரவரே என்று வழிகாட்டியவர் என்பதனை இங்கே நினைவில் கொள்வது நல்லது.

பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும், தயாரிக்கப்படும் உள்ளூர்ப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்டாதீர்கள். எமது சகோதர, சகோதரிகளுக்கு எங்களால் இயன்ற சிறு உதவியைச் செய்கிறோம் என்ற உணர்வுடன் செயற்படுங்கள்.

வந்தாரை வாழ வைத்துப் பழகியவர்கள் நாம். இப்போது எங்களவரை வாழ வைப்பதற்கு கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் தட்டிக் கழிக்காமல் செயற்பட மனங்கொள்வோமாக.

# யாழ். மாவட்ட கைத்தொழிலாளருக்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி

## யு. எஸ். எயிட் அமைப்பு யாழ். வர்த்தக தொழிற்றுறை மன்றத்திடம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ். மாவட்டத்திலுள்ள கைத்தொழில் முதலீட்டாளர்களுக்கு என்று யு. எஸ். எயிட் அமைப்பு யாழ். வர்த்தக தொழிற்றுறை மன்றத்திடம் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளது என்று மன்றத் தலைவர் கே. பூரணச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் பொதுக்கூட்டம் யாழ். நகர் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்றது. சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுயதொழில் முயற்சியாளருக்கு ஊக்குவிப்புத் தொகை கடந்த மாதம் வழங்கப்பட்டது . தற்போது கைத்தொழில் முதலீட்டாளர்களுக்கு உதவி செய்து கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கென யு.எஸ்.எயிட் அமைப்பு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா,நிதி வழங்கியுள்ளது.

இந்த நிதியில் பெருமளவானோர் கைத்தொழில் முயற்சியை மேற்கொள்ள முடியும் . பிளாஸ்ரிக் பொருள் உற்பத்திக் கைத்தொழில், குடிதண்ணீர் போத்தல்களில் அடைக்கும் கைத்தொழில் உட்பட பலவகையான கைத்தொழில்களை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வாறு நாம் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் போது அரசஅதிகாரிகள் இடையூறாகச் செயற்படுகின்றனர். அரச அதிகாரிகளின் இந்தப் போக்கு நல்லதல்ல. கைத்தொழில் முயற்சிகளுக்குத் தடைபோடும் வகையில் அவர்கள் செயற்படுவதைத் தவிர்த்தல் வேண்டும். இது தொடர்பில் யாழ். மாவட்ட அரசஅதிபருடனும் கலந்துரையாடவுள்ளோம்.

வேலணையில் குடிதண்ணீரைப் போத்தல்களில் அடைக்கும் கைத்தொழிலை ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கின்றோம். ஆனால் அது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது தற்போது கூறமுடியாது . அங்கு எவ்வளவு தண்ணீர் உள்ளது. எவ்வளவு தண்ணீரைப் பெறக்கூடியதாக இருக்கும் உட்பட பல விடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்படவுள்ளது. இதற்கென கொழும்பிலிருந்து விசேடகுழு ஒன்றை சிலநாள்களில் வேலணைக்கு வரவழைக்கவுள்ளோம். ஆய்வின் முடிவில் நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.- என்று பூரணச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

இயற்கை தரும் நீரை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். சிலவருடங்களில் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குழாய் மூலம் நீரைபெறுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் சிறிதுகாலம் சென்ற பின்னர் கிளிநொச்சியில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவாது என்று எப்படி உறுதியாகக் கூறுவது? அதுபற்றி எவரும் சிந்திக்கவில்லை.

கைத்தொழில் முயற்சியில் பெண்களின் பங்கு காத்திரமானதாக அமைய வேண்டும். பெண்களிடம் வெளிப்படையாகக் கதைக்கும் தன்மை குறைவு. அதனை அவர்கள் மாற்றி அமைத்து கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்றும் இங்கு கலந்து கொண்டவர்களால். கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (ம-4)

## உளநல தினம்

தென்மராட்சி, ஒக்.01

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எதிர்வரும் பத்தாம் திகதி உளநல தினம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

ஒக்ரோபர் பத்தாம் திகதி சர்வதேச உளநல தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இதனை முன்னிட்டு மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத் தரங்குகளை தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. பாடசாலைகளின் உளநல ஆசிரியர்களும் சுகாதாரப் பிரிவு உளநல இணைப்பாளரும் இணைந்து கருத்தரங்குகளை நடத்தவுள்ள சர்வதேச உளநல தினமான ஒக்ரோபர் 10 ஆம் திகதி இணைப் பாடசாலைகளின் பங்களிப்புடன் பிரிவுக்கொரு பாடசாலையில் உளநல விழிப்புணர்வு செயற்பாடுகளை விசேட நிகழ்வாக மேற்கொள்ள வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## சிறுவர்களுக்கு நுண்ணறிவு திறன் போட்டி

வடமராட்சி, ஒக்.01

வடமாகாணப் பாடசாலைகளில் கற்கும் ஆரம்பக் கல்வி மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறுவர்களுக்கான நுண்ணறிவுத் திறன் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை வடமாகாண கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்விப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. இந்தப் போட்டியில் ஒரு பாடசாலையில் இருந்து 4 மாணவர்கள் அடங்கிய குழு போட்டியிட முடியும். தரம் ஒன்றில் இருந்து தரம் 5 வரையில் உள்ள பாடத் திட்டத்துக்கு அமைவாக நுண்ணறிவுப் போட்டிக்கு வினாக்கள் கேட்கப்படும். வடமாகாணத்தில் உள்ள 12 வலயங்களுக்குமான மாகாணநிலைப்போட்டி விலகல் முறையில் நடைபெறும் என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-8)

## நாகர்கோவில் வேட்டைத் திருவிழா

பிரசித்தி பெற்ற நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் சுவாமி கோயிலின் வேட்டைத் திருவிழா இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஒன்பதாம் திருவிழாவான நாளை செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் தேர்த் திருவிழாவும் இடம்பெறும். (ம-8)

# வடமராட்சி வலயத்தில் 170 மாணவர்கள் சித்தி

யாழ்ப்பாணம், ஒக்.1

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி வலயத்தில் 170 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் கரவெட்டி கோட்டத்தில் 81 மாணவர்களும், பருத்தித்துறை கோட்டத்தில் 80 மாணவர்களும், மருதங்கேணிக் கோட்டத்தில் 9 மாணவர்களும், சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மாவட்ட மட்டத்தில் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை மாணவர்கள் எட்டாம் இடத்தையும், தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை பாடசாலை, உடுப்பிட்டி மத்திய கல்லூரி, நெல்லியடி மெ.மி. த.க.பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளையும் சேர்ந்த மூன்று மாணவர்கள் ஒரே புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 27 ஆவது இடத்தைப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-8-14)

# நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த ரயில் பாலங்கள் விரைவில் புனரமைப்பு

கொழும்பு, ஒக்.01

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த ரயில் பாலங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் புனரமைப்புத் திட்டம் தொடர்பாக பெல்ஜியத்திடம் இருந்து 4.4 மில்லியன் யூரோக்களைக் கடனாகப் பெறுவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை, அங்குலானை, வெள்ளவத்தை, பொல்கஹவெல, நாரஹேன்பிட்டி மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களிலுள்ள புகையிரதப் பாலங்களைப் புனரமைப்பதற்கே இந்தக் கடன் தொகை பெறப்படவுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது அதிக பட்சமாக 16.5 தொன் பாரத்தைத் தாங்கிக் கொள்ளத் தக்கதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அந்தப் பாலங்களின் தாங்கும் ஆற்றல் 20 தொன்களை தாங்கும் வகையில் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டிருந்ததாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-22)

# வாசிப்பு மாத தொடக்க நிகழ்வு நாவற்குழி பொதுநூலகத்தில்

சாவகச்சேரி, ஒக்.1

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொதுநூலகத்தினரால் நடத்தப்படும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு இன்று நாவற்குழி பொதுநூலக மண்டபத்தில் காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தென்மராட்சிப் படைப் பிரிவின் 72 ஆவது படைப் பிரிவின் கோயிலாக்கண்டி பிரதேச படையணியின் இராணுவ அதிகாரி புளத்கம பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் தளபாட அன்பளிப்புகள், சிறுவர் தின நிகழ்வுகள், சஞ்சிகை, ஆக்க கண்காட்சிகள் என்பன இடம்பெறும் என்று நூலகர் திரு மதி சி.இராணி தெரிவித்தார். (431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகமாலையில் மீள்குடியமர்வு

கிளிநொச்சி , ஒக்.1

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் முகமாலைப்பகுதியின் மீள்குடியமர்வு, இன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலை வடக்குப் பகுதியிலுள்ள பொந்தர் குடியிருப்பு மற்றும் அதனையண்டிய பகுதிகளில் மீள்குடியமர்வு இன்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது. (க-6)

# வாகனத் தரிப்பிடத்தினுள் ஆயுள்வேத மருந்தகம்

### மல்லாவிப் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி

துணுக்காய், ஒக்.1

மல்லாவி மூன்றாம் யூனிட் பகுதியில் இயங்கி வரும் ஆயுள்வேத மத்திய மருந்தகம் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாகனத் தரிப்பிடம் ஒன்றில் (கராஜ்) இயங்கி வருவதால் இங்கு வரும் நோயாளர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



இந்த ஆயுள்வேத மத்திய மருந்தகம், ஆயுள்வேத மூலிகைத் தோட்டத்தில் அமைந்துள்ள அம்புலன்ஸ் தரிப்பிடத்தினுள் இயங்கி வருகின்றது.

இந்த ஆயுள்வேத மத்திய மருந்தகம் ஆயுள்வேத மூலிகைத் தோட்டத்தில் அமைந்துள்ள அம்புலன்ஸ் தரிப்பிடத்தினுள் இயங்கி வருகின்றது. இங்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படாத நிலையே காணப்படுகின்றது.

நோயாளர்கள் இருப்பதற்கான இருக்கை வசதிகள் கூட இங்கு காணப்படவில்லை. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் மின்சாரம், குடிதண்ணீர் வசதிகளும் இங்கு ஏற்படுத்தித் தரப்படவில்லை.

மிகவும் பின் தங்கிய இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இந்த ஆயுள்வேத மருந்தகத்தினால் நல்ல பயனைப் பெற்று வருகின்றனர். ஏழ்மை நிலையிலுள்ள பிரதேச மக்கள் பணத்தைச் செலவிட்டு மருத்துவ வசதிகளைப் பெற முடியாத நிலையில் இருப்பதனால் இதனையே நம்பி வருகின்றனர்.

இந்த நிலையில் எவ்வித அடிப்படி வசதிகளுமின்றி இந்த மருந்துவ நிலையம் இயங்கி வருகின்றமை இப்பகுதி மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிந்தது. (க-415)

## விடுதி இல்லாது அவதியுறும் கனகராயன்குளம் ஆசிரியர்கள்

### வகுப்பறைகளில் படுத்துறங்கும் நிலை

மாங்குளம், ஒக்.1

கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதி இல்லாமையால் இங்கு கடமைபுரியும் ஆசிரியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

போருக்குப் பின்னர் ஏ9 வீதியில் அமைந்துள்ள இப்பாடசாலை 2010 ஆம் ஆண்டு தை மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்கள் முடிவடையும் நிலையில் உள்ள போதும், இன்னமும் ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்படாதமையையிட்டு ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப் பாடசாலையில் 25 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். இதில் 15 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இங்கு தங்கி நின்றே சேவையாற்றுகின்றனர். இதில் எட்டுக்கும் மேற்பட்ட ஆண் ஆசிரியர்கள் தமது உடைமைகளை வைப்பதற்கு ஓர் அறையையும் தமது படுக்கைக்காக வகுப்பறைகளையும் பயன்படுத்துகின்றனர்.

இப் பாடசாலையில் 25 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். இதில் 15 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இங்கு தங்கி நின்றே சேவையாற்றுகின்றனர்.

இதே போன்று பெண் ஆசிரியர்கள் வாடகை செலுத்தி தனியார் வீடுகளில் தங்குகின்றனர். இதனால் பல்வேறு சிரமங்களையும் இவர்கள் எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் தற்போது மழை பெய்து வருவதால் விடுதிகள் இல்லாத நிலையிலுள்ள ஆசிரியர்கள் அவலங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

ஆசிரியர்களுக்கான அனைத்து வசதிகளும் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுமாயின் இதனால் பாதிக்கப்படுவது மாணவர்களின் கல்வியே எனப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-422)

## பாதுகாப்பற்ற மின் இணைப்பு மின்தாக்கி இறந்தது மாடு

### கனகராயன்குளம் ம.வி அருகில்

மாங்குளம்,ஒக்.01

கனகராயன்குளம் பொலிஸ் நிலைய விளம்பரப் பலகையில் ஏற்பட்ட மின் ஒழுக்கால் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் மாடு ஒன்று மின்தாக்கி இறந்துள்ளது.

கனகராயன்குளம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் ஏ-9 வீதியில் கனகராயன்குளம் பொலிஸ் நிலைய விளம்பரப் பலகை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விளம்பரப்பலகை இரவு நேரங்களில் தெளிவாகத் தெரிவதற்காக மின்சார சபையின் உதவியின்றி பொலிஸ் நிலையத்தினரே தற்காலிக இணைப்பு மூலம் வெளிச்சம் கொடுத்துள்ளனர்.

தற்போது பெய்து வரும் மழையால் தண்ணீர் பட்டு மின் ஒழுக்கு ஏற்படுவதாக அப்பகுதியிலுள்ள பொது மக்களால் பல தடவைகள் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால் அவர்கள் அதில் அக்கறையில்லாத போக்கையே காட்டி வந்துள்ளனர்.

குறித்த அந்தப் பகுதியில் நின்றே பஸ்களில் ஏறுவதால் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் உயிராபத்து ஏற்படும் நிலை உள்ளதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால் ஒழுங்கற்ற இந்த மின் பாவனையைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பான மின் வழங்கலுக்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர். (ம-422)

## ஆசிரிய இடமாற்றம் மேன்முறையீடு 15ஆம் திகதிக்குள்

மாங்குளம், ஒக்.1

இடமாற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது மேன்முறையீட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு வவுனியாவடக்குகல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான இடமாற்றம் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடமிருந்து ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் இடமாற்றச்சபை கூட்டப்பட்டது. இதில் இடமாற்றம் பெறுவோரின் பட்டியல் இறுதியாக்கப்பட்டது. அத்துடன் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஏதாவது மேன்முறையீடு தெரிவிக்க விரும்பினால் அதனை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறு வவுனியா வடக்குக் கல்விப் பணிப்பாளர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (க-422)

## மாந்தை கிழக்குக்கு புதிய பிரதேச செயலர்

அக்கராயன், ஒக்.1

மாந்தை கிழக்குப் பிரதேச செயலராக ரி.பிருந்தாகரன் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பிரதேச செயலர் இல்லாத நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் துணுக்காய் பிரதேச செயலாளரான சி.குணபாலன் மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்கும் பதில் பிரதேச செயலராக கடமையாற்றி வந்தார்.

ஆனாலும் நிரந்தரமான பிரதேச செயலர் இல்லாததால் மாந்தை கிழக்கு மக்கள் தமது தேவைகளைப் பூரணமாகப்பெற்றுக்கொள்வதில் இடர்களை எதிர்கொண்டு வந்தனர். தற்போது புதிய பிரதேச செயலர் நியமிக் கப்பட்டமை மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை தமக்குச் சிறந்த சேவையை ஆற்றிய துணுக்காய்ப் பிரதேச செயலாளருக்கும் அவர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (க-18)


## கட்டாக்காலி மாடுகளால் பல்வேறு இடையூறுகள்

கட்டாக்காலி மாடுகளால் கனகராயன் குளம், புளியங்குளம் பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்களும், வர்த்தகர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இரவு நேரங்களில் பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் தங்கி நிற்கும் கட்டாக்காலி மாடுகள், தமது கழிவுகளை வெளியேற்றுவதால் அப்பகுதி துப்புரவு அற்ற நிலையில் காணப்படுகின்றது.

மேலும் தற்போது பெய்து வரும் மழையால் சாணத்துடன் சேறும் கலந்து சகதியாகக் காணப்படுகின்றது. காலை வேளையில் இதனை அப்புறப் படுத்திய பின்னரே மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பல முறை நெடுங்கேணி பிரதேச சபையினருக்கும், பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்ட போதும் பயன் எதுவும் கிட்டவில்லை எனவும் இவர்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (க-422)



எறிகணை வீச்சினால் சேதமடைந்த அக்கராயன் மகாவித்தியாலயத்தின் கட்டடமொன்று இன்னமும் புனரமைக்கப்படாத நிலையில் மாணவர்களுக்கு அச்சுறுத்தும் வகையில் காணப்படுகிறது. (க-18)

### அக்கராயனில் ஒதுக்கப்பட்டுள்ள

## பாடசாலைக் காணியில் குடும்பங்கள் தங்கியுள்ளதால் பிரச்சினைகள்

அக்கராயன், ஒக்.1

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியில் தொடர்ந்தும் சில குடும்பங்கள் தங்கியுள்ளதால் ஒருசில பிரச்சினைகள் உருவாகியுள்ளதாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மனுவொன்றைக் கரைச்சிப் பிரதேச செயலரிடம் ஏற்கனவே கையளித்துள்ளனர். இதில் பாடசாலைக் காணியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு மாற்றுக் காணியை வழங்குவதோடு அவர்களைப் பாடசாலைக் காணியிலிருந்து வெளியேற்று மாறும் கோரப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது இந்தப் பாடசாலைக் காணியைச் சூழ பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக கட்டட வேலைகள் ஆரம்பாகவுள்ளன.

இந்த நிலையில் தமக்கான மாற்றுக் காணியை இனம் காட்டினால் மட்டுமே தாம் பாடசாலைக் காணியிலிருந்து வெளியேறுவோமென இங்கு குடியிருக்கும் குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

எனவே பாடசாலையின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிலையங்களின் சுற்றாடல் சுத்தமாக இருக்க வேண்டியது அவசியம்

## தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.01

டெங்கு நுளம்பு அதிகம் காணப்படும் நேரத்தில், தனியார் கல்வி நிலைய வகுப்புக்கள் நடைபெறுவதால் இதன் தாக்கத்தில் இருந்து மாணவர்களைப் பாதுகாக்க வேண்டியது தனியார் கல்வி நிலையங்களின் பொறுப்பு.

இதற்கமைவாகத் தனியார் கல்வி நிலைய சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக் குமாறு தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பி.நந்தகுமார் தெரிவித்தார்.

வலி. வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் நிறுவன இயக்குநர்களுடனான கலந்துரையாடல் பிரதேச சபையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே சுகாதார வைத்திய அதிகாரி பி.நந்தகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாம் பிரச்சினைகள் தொடர்பில் கதைப்பதுடன் மட்டும் விட்டுவிடாது அதற்குத் தீர்வு காணுதல் வேண்டும். பாடசாலைகளில் சிறுவர்களுக்கு நற்சிந்தனைகள் ஏற்படுத்தக்கூடிய வசதிகள் உள்ளன. தற்போது பாடசாலைகளைப் போலவே, பிள்ளைகள் பல மணி நேரம் தனியார் கல்வி நிலையங்களில் செலவிடுகின்றனர்.

இதனால் பிள்ளைகள் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்கள் என்று வாரத்தில் 7 நாள்களும் ஓய்வின்றி செல்வதால் உள நெருக்கடிகள் ஏற்படக் கூடிய நிலைமை உருவாகின்றது. இதற்காக வெள்ளிக்கிழமைகளில் மாலை நேர வகுப்புக்களை தவிர்த்து ஆன்மிகம் தொடர்பான அறிவைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

கடந்த வருடம் எமது பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. டெங்கு நுளம்பு அதிகம் காணப்படுகின்ற நேரமாகிய காலை 6 மணி முதல் 9 மணிவரை, மாலை 3 மணி முதல் 7 மணிவரையான நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களிலேயே மாணவர்கள் அதிகம் காணப்படுகின்றனர்.

டெங்கு நோயின் தாக்கங்களிலிருந்து மாணவர்களை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வகையில் தங்கள் கல்வி நிலைய வளவுகளைச் சுத்தமாக வைத்திருப்பதுடன், அருகிலுள்ள வளவுகளிலும் பற்றைகள் இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

சுத்தமான குடிதண்ணீர் வசதி, மலசல கூட வசதி, காற்றோட்டமான வகுப்பறை, வசதியான இருக்கைகள் என்பவற்றையும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.- என்றார்.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில் இன்று முதலாம் திகதி தொடக்கம் வெள்ளிக்கிழமைகளில் மாலையில் தனியார் கல்வி நிலையங்களில் சகல வகுப்புக்களுக்கான பாட விதானங்களையும் நிறுத்துவது என்றும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை தரம்-9 இற்குட்பட்ட மாணவர்களுக்கான வகுப்புக்களையும் நிறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-5)

# ஒரு தொகைத் திருட்டுக்கள்

வலி. வடக்கு, ஒக்.01

கைதடி தொழிற்பயிற்சி நிலையம் உடைக்கப்பட்டு அங்கிருந்த கணினி உபகரணங்கள் திருடிச் செல்லப்பட்ட சம்பவம் சம்பந்தமாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நிலையப் பொறுப்பாளரால் முறையிடப்பட்டுள்ளது.

கைத்தொழில் அதிகார சபைக்குச் சொந்தமான சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி நிலையத்திலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-86)

***

யாழ்ப்பாணம், ஒக்.01

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியில் உள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 17 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன என்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இரவு கடையைப் பூட்டிவிட்டுச்சென்று காலையில் கடையைத் திறக்க வந்த கடை உரிமையாளர் தனது கடையின் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த சிகரெட் வகைகள் மற்றும் பிஸ்கட் வகைகள், பால் மாவகைகள் திருடப்பட்டுள்ளதைக் கண்டு யாழ்ப்பாணப் பொலிஸில் முறையிட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (ம-86)

***

வலி. வடக்கு, ஒக்.01

சுதுமலை கிழக்கில் உள்ள கடை ஒன்றில் இருந்து பித்தளைப் பொருள்கள் திருடிச் செல்லப்பட்ட சம்பவம் சம்பந்தமாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடையில் பின்புறமாக உள் நுழைந்த திருடர்கள் கடையில் இருந்து பித்தளைப் பொருள்களை தேடி எடுத்துச் சென்றுள்ளனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மானிப்பாய் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-86)

***

மானிப்பாய், ஒக்.01

தனிமையில் சென்ற இளம் பெண்ணிடம் இருந்து சுமார் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

மானிப்பாய் வைத்திய சாலை வீதியில் தனிமையில் நண்பகல் நேரம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் இவ்வாறு சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பெண் சத்தமிட்டதைக்கேட்டு அயலவர்கள் வந்தபோதிலும் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர். மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இது சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது. (ம-86)

***

வலி.வடக்கு, ஒக்.01

தனித்து இருந்த பெண்ணின் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம், நகைகளைத் திருடிச்சென்ற சம்பவம் மல்லாகத்தில் இடம் பெற்றுள்ளது.

மல்லாகம் சோடாக்கம் பனி ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது என்று தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பெண் தனது பிள்ளைகளுடன் வீட்டில் உறங்கிய வேளையில் வீட்டின் கதவைத் திறந்து உள்நுழைந்த திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த இருந்த சுமார் ஆறரைப் பவுண் தங்க நகைகளையும் மற்றும் ஒரு தொகை பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு சம்பந்தமாக தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

***

சுன்னாகம், ஒக்.01

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் உள்ள வீடு ஒன்றை உடைத்து உள் புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்து சுமார் இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் நகைகள் மற்றும் பணம் என்பவற்றைத் திருடிச்சென்றுள்ளனர்.

குப்பிளான் கிழக்கில் உள்ள வீடு ஒன்றில் பட்டப் பகல் வேளை யன்னல் ஊடாக நுழைந்த திருடர்கள் இந்தத் துணிகரத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டில் இருந்த நகைகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள், பணம் என்பன திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

# பாலங்கள் புனரமைப்பு

வரணி, ஒக்.01

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் முள்ளி இராணுவ பரிசோதனை முகாமுக்கு அண்மையில் அமைந்திருக்கும் மிகப் பழமை வாய்ந்த இரண்டு பாலங்களின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதற்கு முன்னோடியாக இரண்டு பாலங்களுக்கும் அண்மித்ததாக தற்காலிக போக்குவரத்துப் பாதைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாலங்களுள் ஒன்று சுமார் 2 வருடங்களுக்கு முன்பே அதன் ஒரு பகுதி உடைந்த நிலையில் இருந்து வந்தது. கட்டட இடிபாடுகள் போடப்பட்டு போக்குவரத்து சீர்செய்யப்பட்டிருந்தது. தற்சமயம் அருகருகே உள்ள இரு பாலங்களும் புனரமைக்கும் பணி ஆரம்பமாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-122)

# கீரிமலையில் சிரமதானம்



வலி. வடக்கு, ஒக்.01

இந்து மகா சபையின் சைவ மங்கையர் அமைப்பால் பௌர்ணமி தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய சுற்றாடலில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்தச் சிரமதானப் பணியில் வலி. வடக்கு தெல்லிப்பழை கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட நகுலேஸ்வரம் மக்களும் நகுலேஸ்வராக் கல்லூரி மாணவர்களும் இவர்களுடன் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தச் சிரமதானப் பணி நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் உள்ள போரால் அழிந்து காணப்படும் சிறாப்பர் மடம் பகுதி, ஆலயச் சுற்றாடல் போன்ற இடங்களில் இடம்பெற்றது. (ம-86)

# அரிசி ஆலை அமைக்க ஏற்பாடு

வரணி, நாவற்காடு பிரதேசத்தில் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் அரிசி ஆலை ஒன்று அமைப்பதற்கான செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்றது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதனின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்டு குறித்த நிறுவன அதிகாரிகளின் ஊடாக நடத்திய கலந்துரையாடல் மூலம் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாவற்காடு கிளை இல. 10 இல் பெரிய கட்டடத் தொகுதி உள்ளமையும் இங்கு அரிசி ஆலை நிறுவுவதற்கு காரணியாக உள்ளதுடன் இந்தக் கிளையை நிறுவுவதற்கு யு.என்.டி.பி. பகுதியளவில் நிதி உதவி வழங் கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-122)

# தபால் பெட்டி விஷமிகளால் உடைப்பு

வரணி, ஒக்.01

வரணி வடக்கு கருக்காய் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த உப அஞ்சலக தபால் பெட்டி விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பகுதி மக்கள் தபால்களை சேர்ப்பதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இங்குள்ள பாடசாலை ஒன்றின் முன்பாக உள்ள பயணிகள் தரிப்பிடத்தில் இந்தப் பெட்டி அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சம்பந்தப்பட்டோர் இந்தப் பெட்டியை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்கின்றனர். (ம-122)

# முன்பள்ளி ஆசிரியருக்கு பயிற்சி



வலி. வடக்கு, ஒக்.01

சிவமானிட விடியற் கழகத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி தினமான சனிக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இடம் பெற்றது.

ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமி விடுமுறையில் பண்ணிசை, யோகாசனம், நடனம், இசைக் கருவிகளைப் பயன் படுத்தல் போன்ற விடயங்கள் சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் முன்பள்ளி ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பு கீரிமலை சிவபூமி அறக் கட்டளை மண்டபத்தில் இடம் பெற்றமி.

இந்தப் பயிற்சி வகுப்பை சிவமானிட விடியற் கழகத்தின் செயலாளர் மருத்துவர் நந்தகுமார் பிரார்த்தனையுடன் ஆரம்பித்து வைத்தார். (ம-86)

# நெல்லியடியில் போக்குவரத்துக்கு மாற்றுவழி ஏற்படுத்தக் கோரிக்கை

வடமராட்சி, ஒக்.1

நெல்லியடி நகரில் வீதி அகலிப்பு வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகளைப் போக்க மாற்று நடவடிக்கைகளை தாமதமின்றி எடுக்குமாறு பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாற்றுப் பாதை ஒன்றை ஏற்படுத்துவதில், நடை முறைப்படுத்துவதில் கரவெட்டி பிரதேச செய லகம் கரவெட்டிப் பிரதேச சபை பொலிஸார் மற்றும் வீதி அபிவிருத்தி அதி[illegible] நடவடிக் கைகளையும் எடு[illegible] கவலை தெரிவிக் கப்படுகின்றது.

பயணிகளை ஏற்றி இறக்கும் இ.போ.ச. மினிபஸ்களைத் தவிர ஏனைய வாகனங்களை மாலிசந்தி, வதிரிச் சந்தி, நவிண்டில் சந்தி ஊடான மாற்றுப் பாதை ஊடாகச் சென்று வர ஏற்பாடுகள் செய்வ தன் மூலம் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கலாம் எனக் கூறப்படுகின்றது.

நகரில் வீதி அகலிப்புப் பணிகள் நிறைவடைய இன்னமும் இருவாரங்கள் பிடிக்கும் என எதிர்பார்க் கப்படுவதால் மாற்றுப் பாதைக்கு ஏற்பாடு செய்து நகரில் போக்குவரத்து நெருக் [illegible]ப்பட்ட தரப்பினர் முன் [illegible] பொதுமக்கள் தரப்பில் கேட்கப்படுகின்றது. (ம-8)

# கைதடி முதியோர் இல்ல சுற்றாடலில் சிரமதானம்

தென்மராட்சி, ஒக்.1

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை படையினரால் படையினரால் இந்தத் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டும் மற்றும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்குடனும் இந்த சிரமதானம் இடம் பெற்றது.(ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் ஆதரவுப் போராட்டம்

## அணுமின் நிலையத்தைச் செயற்படுத்தக்கோரி நாளை மறுதினம் தமிழக காங்கிரஸ் ஏற்பாட்டில்

சென்னை, ஒக்.1

கூடங்குளம் அணு மின் நிலையத்தை உடனடியாகச் செயற்படுத்தக்கோரி நாளை மறுதினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் ஞான தேசிகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் நிலையில் சிலர் வேண்டும் என்றே தடைகளை ஏற்படுத்தி வரு கின்றனர். இந்தச் செயல் கண்டிக்கத் தக்கது. தமிழகத்தில் சுமார் 3000 மெகாவாற்றுக்கு மேல் மின் பற்றாக்குறை உள்ள இந்தக் காலக்கட்டத்தில் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.



தமிழகத்தில் சுமார் 3000 மெகா வாற்டுக்கு மேல் மின் பற்றாக் குறை உள்ள இந்தக் காலக் கட்டத்தில் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்தநிலையில் கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தியாகும் 2 ஆயிரம் மெகாவாற் மின்சாரத்தையும் தமிழகத்துக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். இதை மத்திய அரசும் பரிசீலனை செய்து வருகின்றது.

மேலும் மத்திய அரசின் நிபுணர் குழுவினர், முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் ஆகியோர் கூடங்குளம் அணு மின் நிலையம் பாதுகாப்பானது என்று உறுதிபடத் தெரிவித்தனர்.

ஆனால் சிலர் வேண்டும் என்றே வேறு நோக்கத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அப்பாவி மக்களை திசை திருப்பி வருகின்றனர்.

எனவே, கூடங்குளத்தின் அவசியம் மற்றும் அவசரம் குறித்து உணர்த்தும் வகையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் நாளை மறுதினம் புதன்கிழமை தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் - என்று அவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# இந்தியாவின் மிக உயரமான 33 அடி உயர யேசுநாதர் சிலை

## கேரளா பொறியியல் கல்லூரியில்



இந்தியாவிலேயே மிக உயரமான யேசுநாதர் சிலை கேரளாவில் உள்ள பொறியியல் கல்லூரி ஒன்றில் நிறுவப்பட்டுள்ளது.

தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு பொறி யியல் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள இந்த யேசுநாதர் சிலை 33.5 அடி உயரத்தில் வெள்ளை நிறத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. கேரளாவைச் சேர்ந்த பிரபல கலை இயக்குநரும், சிற்பியுமான பிரேமசந்திரன் என்பவர் இந்தச் சிலையை உருவாக்கி உள்ளார்.

பைபர், மெழுகு உட்பட பல்வேறு பொருள்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சிலையை 35 நாள்களில் 30 தொழிலாளர்கள் துணையுடன் இந்த சிற்பி வடிவமைத்துள்ளார்.

சிலை 22.5 அடி உயர பீடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சிலையை ஆர்ச் பிஷப் மோரான் மார் திறந்து வைத்தார்.

இந்தக் கல்லூரியில் படித்த மிதுன் என்ற மாணவர் சாலை விபத்தில் உயிரிழந்ததை அடுத்து அவரது பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங் கவே இந்த யேசுநாதர் சிலை உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள அல்டாமஸ் கபீருக்கு, ராஷ்டிரபதி பவனில், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

# முதலாவது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் காலமானார்



இந்தியாவின் முதலாவது தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரஜேஷ் மிஷ்ரா நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

இந்தியாவில் அடல் பிகாரி வாஜ்பாய் பிரதமராக இருந்த போது, வெளியுறவுக் கொள்கையை சிறப்பாக வடிவமைக்க பிரஜேஷ் மிஷ்ரா உதவியாக இருந்தார்.

இவர் இந்தோனேஷியாவுக்கான இந்தியத் தூதராகவும் பதவி வகித்தார். இருப்பினும் இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சகச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்றார்.

1998 ஆம் ஆண்டு இந்தியா அணு ஆயுத சோதனை நடத்தியபோது, வளர்ச்சி அடைந்த நாடுகளிடம் இருந்து வந்த எதிர்ப்பின் போது அதனை சரி செய்யும் பணியில் முக்கிய இடம் வகித்தவர் பிரஜேஷ் மிஷ்ரா. (வ)

# உண்ணாவிரதத்தில் ஈடுபடேன் இனி போராட்டங்கள் மட்டுமே

## ஹஸாரே தெரிவிப்பு

புனே, ஒக்.1

''கோரிக்கைகளை வலியுறுத்தி, இனிமேல், உண்ணாவிரதம் இருக்கப்போவதில்லை. போராட்டங்களை மட்டுமே நடத்துவேன்'' என்று சமூக சேவகர் அன்னா ஹஸாரே தெரிவித்தார்.



மகாராஷ்டிரா மாநிலம், புணேயில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில்பங்கேற்க வந்திருந்த அவர் தெரிவித்ததாவது:-

ஊழலை ஒழிப்பதற்காக, ஏராளமான உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்திவிட்டேன். அண்மைக்காலமாக உண்ணாவிரதப் போராட்டங்களை மத்திய அரசு, அலட்சியப் படுத்துகிறது. எனவே, இனிமேல், கோரிக்கைகளை வலியுறுத்தி, உண்ணாவிரதம் இருக்கப்போவது இல்லை; அந்த முடிவை கைவிட்டு விட்டேன். அதேநேரத்தில், ஊழலை ஒழிப்பதற்காக, தொடர்ந்து போராட்டங்களை நடத்துவேன்.

ஊழல் கறைபடியாத நபர்களை, நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதே என் விருப்பம். அதற்காக, தொடர்ந்து பாடுபடுவேன். ஓய்வுபெற்ற, ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் பலர், ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளனர்; அது, மகிழ்ச்சி அளிக்கிறது.

தற்போதுள்ள இளைஞர்கள், நாட்டின் எதிர்காலம் பற்றி, நம்பிக்கை இன்றி உள்ளனர். இது தவறான போக்கு; இளைஞர்கள் அவ்வாறு நினைக்கக்கூடாது. நாட்டுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதில், இளைஞர்களின் பங்கு, மிகவும் முக்கியமானது- என்றார். (வ)

# 'ஜெ' மீதான சொத்துக் குவிப்பு வழக்கு ஒத்திவைப்பு

பெங்களூர், ஒக்.1

தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு பிற்போட்டுள்ளது.

வழக்கு மீதான விசாரணை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் வந்த போது, சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பான ஆவணங்களைப் பார்க்க சசிகலாவுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித் துள்ளது.

ஆனால் ஆவண நகல்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று சசிகலா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி குறிப்பிட்டார். இதையடுத்து, ஆவணங்களை வழங்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ)

# தமிழக சட்டசபை சபாநாயகர் காரணமின்றி ராஜினாமா

தமிழ்நாடு சட்டசபைத் தலைவராக இருந்து வந்த டி.ஜெயக்குமார் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு மே மாதம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியமைத்த வேளையில் சட்டமன்ற சபாநாயகராக இவர் தெரிவாகியிருந்தார்.



சென்னை ராயபுரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து நான்கு முறை சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜெயக்குமார் 1991 ஆம் ஆண்டு அமைந்த அ.தி.மு.க. ஆட்சியில் மீன் வளத்துறை, பால்வள அபிவிருத்தித்துறை, கால்நடை வளத்துறை, காட்டு அமைச்சின், முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை, சிறுபான்மையினர் நலத்துறை உள்ளிட்ட துறைகளுக்கான அமைச்சராக இருந்துள்ளார்.

2001ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் சட்டத்துறை, தகவல்தொழில்நுட்பம், மின் விநியோகம் ஆகிய துறைகளுக்கு இவர் அமைச்சராக இருந்துள்ளார்.

ஜெயக்குமார் ராஜினாமாச் செய்ததற்கான காரணங்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஜெயக்குமார் பதவி விலகலை அடுத்து சபாநாயகரின் பணிகளை துணை சபாநாயகர் பி.தனபால் கவனிப்பார் என்று சட்டமன்றச் செயலாளர் ஜமாலுதீன் அறிவித்துள்ளார். (வ)

# தமிழகத்துக்கு தண்ணீர் விட்டது கர்நாடகா

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று நேற்று முன்தினம் இரவோடு இரவாக காவிரியிலிருந்து கர்நாடக அரசு தமிழகத்துக்கு தண்ணீரைத் திறந்து விட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் காவிரி நதிநீர் ஆலோசனைக் கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றது.


இந்தக்கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தமிழகத்துக்கு தினமும் விநாடிக்கு 9 ஆயிரம் கன அடிநீர் திறந்து விட உத்தரவிட்டும் கர்நாடக அரசு திறந்து விட வில்லை.

பின்னர், காவிரி நதி நீர் தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் கடந்த வெள்ளிக் கிழமை தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை நடைபெற்ற போது பிரதமரின் ஆணைப்படி கர்நாடக அரசு தினமும் வினாடிக்கு 9 ஆயிரம் கன அடிநீர் திறந்து விடவேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி ஆலோசனை நடத்திய கர்நாடக முதல்வர் ஜகதீஷ் ஷெட்டர், கூட்டத்தில் பிரதமர் தமது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று 'பக்ஸ்' அனுப்பப்போவதாகவும், உச்ச நீதிமன்றத்துக்கு ஆணையை தற்போது நிறுத்தி வைக்க கேட்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால் கர்நாடக ஆளுநர், உச்சநீதிமன்றத்தின் உத்தரவை மீறக் கூடாது என்று அறிவுறுத்தியதால் கர்நாடக முதல்வர் ஜகதீஷ் ஷெட்டரின் ஆணைப்படி நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 9 ஆயிரம் கன அடிநீர் திறந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசு முறைப் பயணமாக கியூபாவுக்குச் சென்ற கபோன் நாட்டு ஜனாதிபதி அலி போங்கோ ஒண்டிம்பா, தலைநகர் ஹவானாவில் ஜனாதிபதி ரவுல் கேஸ்ட்ரோவைச் சந்தித்துப் பேசினார்.

## ஈராக் சிறை மீது தீவிரவாதிகள் தாக்குதல்
### 13 பொலிஸார் சாவு

ஈராக்கில் உள்ள திக்ரித் நகரில் சிறை மீது தீவிர வாதிகள் தாக்குதல் நடத் தியதில் 13 பொலிஸார் உயிரிழந்தனர். 83 கைதிகள் சிறையிலிருந்து தப்பி விட்டனர்.

ஈராக்கில் உள்ள அல்குவைதா தீவிரவாதிகள் சிறைக்கு வெளியே இருந்து சுட்டனர். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சிறைக் கைதிகள் அங்கு காவலுக்கு இருந்த காவலர்களின் துப்பாக்கிகளைப் பிடுங்கி தாக்குதல் நடத்தினர். இதில் 13 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

# செக் ஜனாதிபதி மீது ரப்பர் ரவை தாக்குதல்



செக் குடியரசின் ஜனாதிபதி வெல்கெவ் க்ளோசு மீது ரப்பர் ரவை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பாலமொன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தபோதே ஜனாதிபதியை நோக்கி செக் பிரஜையொருவர் இந்த ரப்பர் ரவை துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சாதாரண பொதுமக்களின் குரல்களுக்கு ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை என்பதனாலேயே தாம் இவ்வாறு செயற்பட்டதாக பொலிஸாரிடம் அவர் தெரிவித்துள்ளார்.

ரப்பர் ரவைகளால் தாக்கப்பட்ட செக் ஜனாதிபதி சிறு காயங்களுக்கு உள்ளானதுடன், அதற்கு சிகிச்சை பெற்றும் திரும்பியுள்ளார்.

# 10 லட்சம் அரியவகை உயிரினங்கள் கண்டுபிடிப்பு
### பிரான்ஸ் ஆய்வாளர்கள் சாதனை

பரிஸ், ஒக்.1

பல்வேறு வகையைச் சேர்ந்த 10 லட்சம் நுண் ணுயிர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் ஆய்வு கப்பல் டரா, உலகம் முழுவதும் கடலில் பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இந்தக்கப்பல் அட்லாண்டிக், பசிபிக், சதர்ன் மற்றும் வங்காள விரிகுடா கடலில் இதுவரை சுமார் 1,12,654 கி.மீ பயணத்தை நிறைவு செய்துள்ளது.

ஆய்வுக் குறித்து குழுவின் தலைவர் க்ரிஸ் பவுலர் தெரிவித்ததாவது :-

இந்த ஆய்வை ஆரம்பித்த போது 5 லட்சம் புதிய கடல் வாழ் உயிரினங்கள் கண்டறியப்படலாம் என்று கருதப்பட்டது. அதுவே எங்களது இலக்காகவும் இருந்தது.

ஆனால் 3 ஆண்டு கால ஆய்வில் 10 லட்சம் உயிரி னங்கள் கண்டறியப்பட் டுள்ளன. குறிப்பாக சிபோனோபோர் எனப்படும் வளைந்து நெளிந்த குழாய் போன்ற வடிவத்தில் சுமார் 150 அடி நீளத்தில் அரிய உயிரினம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதுதான் உலகிலேயே அதிக நீளம் கொண்டதாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

எனவே புதிய மற்றும் பழைய கடல்வாழ் உயிரினங்களையும் சேர்த்து இந்த கண்டுபிடிப்பு 15 லட்சத்தை தாண்டும் - என்றார். (வ)

# யுரேனிய செறிவூட்டலில் இறுதியை நெருங்கும் நிலையில் ஈரான்
### அணுகுண்டு தயாரிப்பு குறித்தும் இஸ்ரேலிய பிரதமர் ஐ.நாவில் எச்சரிக்கை

தெஹ்ரான், ஒக்.1

ஈரான் அணு குண்டு தயாரிக்க போதுமான யுரேனிய செறிவூட்டலை விரைவில் அடைய உள்ள நிலையில் அதைத் தடுத்து நிறுத்துமாறு ஐக்கிய நாடுகளுக்கு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெட்டான்யாஹு வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான கூட்டத்தில் கலந்து கொண்ட போது இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெட்டான்யாஹு இந்த விடயத்தை தெரிவித்தார்.

யுரேனிய செறிவூட்டலை நிறுத்துமாறு அமெரிக்கா, ஐரோப்பா உட்பட பல நாடுகள் ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்தன.

ஈரான் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டும் கூட தன்னுடைய நடவடிக்கைகளை ஈரான் நிறுத்திக் கொள்ளவில்லை.

தன் நாட்டுக்கு தேவையான மின்சாரத்தைத் தயாரிக்கவே யுரேனிய செறிவூட்டலில் ஈடுபடுவதாக ஈரான் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஈரான் 70 சதவீதம் யுரேனிய செறிவூட்டலை அடைந்து விட் டதாக கூறிய நெட்டான் யாஹு, 90 சதவீத யுரேனிய செறிவூட்டலை அபாய நிலையாக ஐ.நா. கூட்டத்தில் உறுப்பினர்களுக்கு மத்தியில் சிவப்புப் பேனாவால் அவர் கோடிட்டுக் காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்குள் ஈரானின் யுரேனிய செறிவூட்டல் வீதமானது நடுத்தர செறிவூட்டலைக் கடந்து இறுதிக் கட்டத்தை அடையும் சாத்தி யமுள்ளது.

இது, எதிர்வரும் சில மாதங்களிலோ வாரங்களிலோ தனது முதலாவது அணு குண்டைத் தயாரிப்பதற்கு போதுமான யுரேனியத்தை ஈரான் பெற்று விட்டது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட் டத்தில் உரையாற்றுகையில், ஈரான் அணு ஆயுதங்களைப் பெறுவதை தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான அனைத்தையும் அமெரிக்கா மேற்கொள்ளும் என்று தெரிவித்திருந்தார். (வ)

# மியன்மாரின் ஜனாதிபதியாக சூகி நியமனம் பெறுவார்

மியன்மாரின் ஜனாதிபதியாக ஆன் சான் சூகியை ஏற்றுக்கொள்வதாக, தற்போதைய ஜனாதிபதி தென் செயின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பி.பி.சிக்கு அவர் கருத்துத் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாடுகள் மியன்மாருக்கு பொருத்தமான ஜனாதிபதி ஆன் சான் சூகியே என்று கருதுகின்றன. இதனை நானும் ஏற்றுக்கொள்கின்றேன்.

மக்கள் வாக்களித்து அவரை ஜனாதிபதியாகத்தெரிவு செய்தால், அதனை நான் ஒப்புக் கொள்கின்றேன்.

மியன்மாரில் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

எவ்வாறாயினும், ஆங் சாங் சூகி எதிர்க்கட்சியில் இருந்தபோதும், நாட்டின் மீளமைப்பு நடவடிக்கைகளில் எங்களுடன் இணைந்து செயற்படுகின்றார்-என்றார்.

# சாகஸ நிகழ்வில் விபரீதம் விமானம் வீழ்ந்து இருவர் சாவு



ஜகார்த்தா, ஒக்.1

இந்தோனேசியாவின் மேற்கு ஜாகா மாகாணத்தில் உள்ள பேண்டங் விமான நிலையத்தில் விமானப் படையின் விமான சாகஸ நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்போது பிராவோ ஏ.எஸ்-202 என்ற இலகுரக பயிற்சி விமானம் அந்தரத்தில் சாகஸம் செய்துகொண்டிருந்தபோது, திடீரென விமானப்படை வளாகத்தில் விழுந்து நொறுங்கியது.

இதில் விமானத்தில் சென்ற பைலட் நூர்மன் லூபிஸ், பயிற்சியாளர் டோனி ஹரிடோனா ஆகியோர் உயிரி ழந்தனர்.

ஆனால் அதிர்ஷ்ட வசமாக தரையில் இருந்த எவருக்கும் காயம் ஏற்பட வில்லை.

இந்தப் பயிற்சி விமானம் கீழே விழுவதற்கு முன்பு மிகவும் தாழ்வாக பறந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (வ)

## அமெ. தேர்தல் • பிரசாரத்தில் 'ஆபாச அசிங்கம்'

வோஷிங்டன், ஒக்.1

ஒபாமாவின் தாய் நிர்வாணமாக இருக்கும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக் காலம் முடிவடைவதைத் தொடர்ந்து, எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் குடியரசு கட்சியின் வேட்பாளராக மிட் ரோம்னியும், ஜனநாயக கட்சி சார்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் போட் டியிடுகின்றனர்.


ஒபாமாவுக்கு எதிராக பிரசாரம் மேற்கொள்ளும் வகையில் மிட் ரோம்னி போட்டியிடும் ஒஹியோ மாகாணம் மற்றும் நிவேதா, நியூ ஹாம்ஷைர் ஆகிய மாகாணங்களில் லட்சக் கணக்கான வாக்காளர்களுக்கு இறுவட்டுகள் அனுப்பப்பட்டுள்ளன.

அதில் ஒபாமாவின் தாயான ஆன் டன்ஹாம் இளம் வயதில் நிர்வாண நிலையில் காட்சி கொடுத்துள்ள புகைப் படங்கள் அடங்கியுள்ளன.

இதுகுறித்து ஜனநாயகக் கட்சியின் ஆலோசகர் ஸ்டீவ் மர்பி கூறுகையில், எதிர்க் கட்சி வேட்பாளர் ஒருவரை எந்தவித ஆதாரமும் இல்லாமல் தரம் தாழ்ந்த வகையில் குற்றம்சாட்டுவம் சரியல்ல என்று கூறியுள்ளார்.

மேலும் இத்தகைய [illegible] பாகுபாடு மற்றும் புனை அதிகாரம் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமெ. வர்த்தக நிறுவனம் மீது துப்பாக்கிச் சூடு; 5 பேர் சாவு




அமெரிக்காவில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் மினசோட்டா மாகாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றில் 25 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த நிறுவனத்தில் பணியாற்றிய நபர் ஒருவர், முதலாளி மீதிருந்த வெறுப் பின் காரணமாக, கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதில் வர்த்தக உரிமையாளர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர், நான்கு பேர் காயமடைந்தனர்.

இறுதியில் துப்பாக்கிச் சூடு நடத்திய நபர், தன்னைத் தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண் டார்.

இந்தச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## ஜப்பான் சீன தூதரகத்துக்கு வந்த மர்ம பொதி

ஜப்பானில் உள்ள சீன தூதரகத்துககு துப்பாக்கிக் குண்டுகள் அடங்கிய பொதி ஒன்று வந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தப் பொதியை அனுப்பியவரின் முகவரியில் ஜப்பான் பிரதமரின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அதில் கடிதம் எதுவும் இல்லை. எனவே இதை ஜப்பான் பொலிஸாரிடம் சீன தூதரக அதிகாரி ஒப்ப டைத்தார்.

இவை அனைத்துமே உண்மையான துப்பாக்கி குண்டுகள் தான் என்பது சோதனையில் தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் இதற்கும், பிரதமர் அலுவல கத்துக்கும் எவ்வித தொடர் பும் இல்லை என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து தீவிர விசாரணை இடம்பெற்று வருகின்றது. (வ)

# முஜாஹிதீன் ஈ கால்க் அமைப்பு தீவிரவாத பட்டியலிலிருந்து நீக்கம்
### அமெரிக்கா அறிவிப்பு

முஜாஹிதீன் ஈ கால்க் என்ற ஈரானின் அரச கொள்கை எதிர்ப்புக் குழுவை தமது தீவிரவாத பட்டியலில் இருந்து அமெரிக்கா நீக்கியுள்ளது.

1997 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவின் தீவிரவாத பட்டியலில் குறித்த குழு உள்ளடக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1970 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் பின்புலத்துடனான ஈரானின் மன்னருக்கு எதிராக கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளை முஜாஹிதீன் ஈ கால்க் இயக்கம் முன்னெடுத்திருந்தது.

பொது வன்முறைகளில் இருந்து விலகுதல், ஒரு தசாப்தத்திற்கும் அதிக காலம் தீவிரவாத செயலில் ஈடுபடாமை மற்றும் ஈராக்கிலுள்ள தமது இராணுவ தளத்தை மூடுவது தொடர்பான ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். மருத்துவமனையில் 10 குழந்தைகள் சாவு

### தொடர் மின் துண்டிப்பால்

பாகிஸ்தானில் உள்ள அரச மருத்துவமனையில் தொடர்ச்சியாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் 10 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தன.

லர்கானா மாகாணத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் குழந்தைகள் விடுதியின் அவசர கிகிச்சைப் பிரிவில் ஏராளமான குழந்தைகள் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்த நிலையில் திடீரென மருத்துவமனையில் மின்சாரம் துண்டிக்க பட்டது. மருத்துவமனையில் உள்ள ஜெனரேட்டரை இயக்க டீசலும் இருக்கவில்லை.

இதனால் அவசர சிகிச்சைப் பிரிவை இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டதுடன் ஓட்சிசன் விநியோகமும் பாதிக்கப்பட்டது.

இதன்காரணமாக அங்கு சிகிச்சை பெற்று வந்த குழந்தைகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதில் 10 குழந்தைகள் உயிரிழந்தன.

6 குழந்தைகள் மிக மோசமாக உடல்நலம் பாதிக்கப்பட்டன.

தற்போது பாகிஸ்தானில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள இந்த விவகாரத்துக்கு அந்த மாகாண முதல்வர் இது பற்றி விசாரணை நடத்த உத்தர விட்டுள்ளார். (வ)

## காணாமற்போன இந்திய சிறுவன் சடலமாக மீட்பு

### அமெரிக்காவில் பரபரப்பு



அமெரிக்காவின் இல்லினாய்ஸ் புறநகரில் காணாமற்போன இந்திய சிறுவன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இல்லினாய்ஸ் புறநகரில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரசாத் மாதுலாவின் மகன் ஹர்ஷா (வயது 18) சிக்காகோவில் உள்ள நார்த் வெஸ்டர்ன் பல்கலைக் கழகத்தில் படித்து வந்தார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை வகுப்புகள் முடிவடைந்ததும் இரவு விருந்து கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்.

மறுநாள் காலை சிக்காகோ கடற்கரையில் ஹர்சாவின் கைபேசி கண்டெடுக்கப்பட்டது.

அன்று முதல் எப்.பி.ஐ பொலிஸார் ஹர்ஷாவை தேடிவந்த நிலையில் அவரது உடல் வில்மெட் துறைமுகம் அருகே மீட்கப்பட்டுள்ளது.

ஹர்சா தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. ஆனால் ஹர்சா தற்கொலை செய்து கொண்டிருக்கமாட்டான் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

தற்போது ஹர்சாவின் மரணம் குறித்து அமெரிக்க எப்.பி.ஐ. பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (வ)

## ரஷ்யாவில் தீ விபத்து 8 பேர் சாவு

மொஸ்கோ, ஒக்.1

ரஷ்யாவின் மேற்குப் பிராந்தியத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

இந்த தீ விபத்தில் மேலும் சிலர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எரி காயங்களுக்கு உள்ளானவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அரசாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிச் சம்பவத்தை அடுத்து தீ பரவியதாகக் கூறப்படுகின்றது.

எனினும் தொழிற்சாலையில் உரிய பாதுகாப்பு வசதிகளின்மையால் தீ விரைவாக பரவியதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து தொடர்பான விசாரணைகளை ரஷ்ய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## சீன நிறுவனத்துக்கு ஒபாமா தடை

அமெரிக்காவில் சீன நிறுவனத்துக்கு ஜனாதிபதி பராக் ஒபாமா தடை விதித் துள்ளார்.

சீனாவைச் சேர்ந்த ரால்ஸ் கார்ப்பரேஷன், அமெரிக்காவின் ஆரேகான் மாகாணம் போர்ட்மனில் 4 காற்றாலை மின்சார திட்டங்களைச் செயற்படுத்த ஒப்பந்தம் செய்தது.

இந்த நிலையில் சீன நிறுவனத்தின் ஒப்பந்தம் காரணமாக பாதுகாப்பு பிரச்சினை ஏற்படக் கூடும் என்று அமெரிக்காவின் வெளிநாட்டு முதலீட்டுக்குழு (சி.எப்.ஐ.யு.எஸ்.) தெரிவித்தது.

## அமெ. தூதரக அதிகாரி மீதான தாக்குதல் திட்டமிட்ட செயல்

### அமெரிக்க புலனாய்வுப் பிரிவு கூறுகிறது

லிபியாவின் பென்ஹாசி நகரில் தமது தூதரக அதிகாரிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் திட்டமிடப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்று என்று அமெரிக்க புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி இரண்டு அமெரிக்க கட்டடங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் லிபியாவுக்கான அமெரிக்க தூதர் உள்ளிட்ட ஐவர் கொல்லப்பட்டிருந்தனர்.

இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அமெரிக் காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படமொன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்தத் தாக்குதலை யார் மேற்கொண்டனர் என்பது இதுவரை தெரியவர வில்லை என்று அமெரிக்க தேசிய புலனாய்வு அலுவலகப் பணிப்பாளரின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## நடுக்கடலில் கப்பலில் தீ; 12 சீனரை மீட்டது ஜப்பான்

டோக்கியோ, ஒக்.1

நடுக்கடலில் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த கப்பலிலிருந்து 12 சீன பணியாளர்களை ஜப்பான் கடலோரக் காவல் படையினர் காப்பாற்றினர்.

பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட 1999 தொன் எடை கொண்ட சரக்குக் கப்பல் தெற்கு ஜப்பானில் உள்ள ககோஷிமா நகரிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை புறப்பட்டது. பின்னர் அது ஜப்பானில் உள்ள மேலும் 2 துறைமுகங்களுக்குச் சென்று விட்டு சீனாவுக்குப் பயணத்தை ஆரம்பித்தது.

அந்தக் கப்பலில் ஆயிரம் தொன் கழிவு இரும்பு ஏற்றப்பட்டிருந்தது. மேற்கு ஜப்பானில் ஒசாகா கடற்பகுதியில் வந்துகொண்டிருந்த போது அந்த கப்பல் திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியது. தகவல் அறிந்து அங்கு சென்ற ஜப்பான் கடலோரக் காவல் படை கப்பல், சரக்குக் கப்பல் மீது தண்ணீர் பீய்ச்சி அடித்து அதில் இருந்த ஊழியர்களை மீட்டது.

கடந்த சில மாதங்களாக சர்ச்சைக்குரிய தீவு விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே கசப்புணர்வு அதிகரித்து வரும் நிலையில், இந்தச் சம்பவத்தால் இரு நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள் ஓரளவுக்கு தணிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

2012 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களாகிய



தேவ ஈஸ்வரன் சோபிதன் 154 புள்ளிகள்

நாகராசா செந்துஜா 152 புள்ளிகள்

ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. ரி. கநர்வா | - | 143 | 02. க. பிரசீன் | - | 141 |
| 03. ஜி. விதுரன் | - | 139 | 04. ரி. நிரஞ்சன் | - | 128 |
| 05. யோ. பிந்துசன் | - | 124 | 06. லோ. மோகேன் | - | 116 |
| 07. க. விதுர்ஷனா | - | 103 | | | |

ஆகியோரையும் வழிப்படுத்திய அதிபர் திரு. வி. கணபதிப்பிள்ளை அவர்களையும் ஆசிரியை செல்வி க. தங்கமலர் மற்றும் வழிப்படுத்திய அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், மிருசுவில்.

(23431)(45.6.7)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ இடைக்காடு மகாவித்தியாலயம் 2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்


இறஞ்சன் தான்சன் 156 புள்ளிகள்


ஸ்ரீகாந்தராசா கஜரூபன் 155 புள்ளிகள்


வேணுஜா நந்தகுமார் 153 புள்ளிகள்


நிலுக்சியா ஜெயதரன் 151 புள்ளிகள்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. சிவகாந்தன் சோபிகன் – 135 புள்ளிகள்
2. கோகுலபாலினி சிறிக்குமார் – 134 புள்ளிகள்
3. சிவநேசன் மதுசாந் – 131 புள்ளிகள்
4. லக்ஷ்சி சிவம் – 129 புள்ளிகள்
5. வினோதினி சசீந்திரன் – 120 புள்ளிகள்
6. யதுர்சா ரகுநாதன் – 119 புள்ளிகள்
7. பரமேஸ்வரன் தனுஜன் – 105 புள்ளிகள்
8. பிருந்தா மகேந்திரம் – 105 புள்ளிகள்
9. லதனிகா சிவராசா – 103 புள்ளிகள்
10. டக்சாயினி சக்திவேல் – 101 புள்ளிகள்

Best Wishes

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த இம் மாணவர்களுக்கு பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். இவர்களை கற்பித்த ஆசிரியர்களும் வழிப்படுத்திய அதிபரும் என்றும் எம் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.

வாழ்க அவர்தம் சேவை! வளர்க நம் கல்விச்சாலை! [23184](6.7.8)

பழைய மாணவர் சங்கம், யா/இடைக்காடு மகாவித்தியாலயம்.



2012 - தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையின் சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.


ம. கோபிதன் 188 புள்ளிகள்


சி. அபிசன் 179 புள்ளிகள்


ந. சரண்யா 171 புள்ளிகள்


உ. மிதுலா 165 புள்ளிகள்


சி. ஆதிரை 162 புள்ளிகள்


க. தனஞ்சயன் 161 புள்ளிகள்


பி. துஷாந்த் 156 புள்ளிகள்


அ. கபிலன் 150 புள்ளிகள்


சு. ஜெஷிபன் 148 புள்ளிகள்

100 க்கு மேற் புள்ளிகள் பெற்றோர்

சூ. சோபிதா - 135
யோ. கோபீசாந் - 132
அ. மேனகா - 116
வி. யதுசன் - 116
தி. சாருஜன் - 110
செ. கீர்த்தனா - 109
நா. அஜானா - 110
ஜெ. சிந்துஜா - 115
சி. சிறிரமணா - 107
பு. வதனரூபி - 105
நா. கிருஷிகா - 103
ச. லோஜினி - 103
சு. வானுப்பிரியா - 102
அ. கீரத்திகன் - 102

Best Wishes

மேற்படி மழலைச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், வகுப்பாசிரியர் திருமதி ...ராணி சிவநேசன் அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: பெற்றோர், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(c/9372)(6.7.8)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# பயத்தை விரட்டுங்கள்

(20)

வாசனின் துணிச்சல் அந்த வீட்டில் குடியிருந்த பேயை விரட்டி விட்டது என்று சொல்லலாமா?

பேய்கள் என்பது வெறும் மனக் கற்பனையே. மனிதர்களின் பயத்தை மூலதனமாக வைத்து தங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் பல வியாபாரிகள் இருக்கிறார்கள். சிலர் மந்திரம் என்பார்கள். மாயம் என்பார்கள். தாயத்து என்பார்கள். இன்னும் என்னென்னவோ சொல்லுவார்கள். மனித பலவீனத்தைக் கருவியாகப் பயன்படுத்தி இவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

இதன் விளைவு என்னவென்றால் சமூகத்தில் மக்களிடையே தேவையற்ற பயம் தோற்றுவிக்கப்படுகிறது.



இதனால் நம்முடைய நாட்டில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலோர் மூட நம்பிக்கைக்கு பலியாகிப் போனவர்களாக, வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்களாக, சுய முயற்சியில் நம்பிக்கை அற்றவர்களாக, தங்கள் எதிர்காலம் தங்களுடைய கையில் இல்லை, ஜோசியர்களின் கையில் தான் இருக்கிறது என்று எண்ணுகிறவர்களாக பேய் பிசாசுகள் என்கிற பயத்தில் வாழ்க்கையைக் கழிக்கின்றவர்களாக இருக்கிறார்கள்.

இதனால் யாருக்கு லாபம்? மூடத்தனத்தின் மொத்த வியாபாரிகள் நாட்டில் மலிந்து விட்டார்கள். சுலபத்தில் விற்பனையாகும் சரக்காக பயம் இருந்து கொண்டிருக்கிறது.

துரதிஷ்ட வசமாக அன்பின் உருவமான ஆண்டவனைக் கூட, பழிவாங்கும் பாதகனாக சித்தரிக்கின்ற போலிச் சாமியார்கள் நாட்டில் மலிந்து விட்டார்கள். இவர்களால் சமுதாயத்திற்கு விளைந்துள்ள கேடுகள் அதிகம்.

பயத்தை விரட்ட விரும்புகின்றவர்கள் மூட நம்பிக்கைகளுக்கு முதலில் விடை கொடுத்து அனுப்பக் கற்றுக்கொள்ள வேண்டும். எவருடைய உள்ளத்தில் பயம் குடியேறுகிறதோ அவருடைய உள்ளம் துணிச்சலுக்கு பகைவனாகி விடுகிறது.

நீங்கள் எந்தப் பக்கம் இருக்கப் போகிறீர்கள்? பயத்தின் பக்கமிருந்து வாழ்க்கையை சுமையாக்கிக் கொள்ளப் போகிறீர்களா? அல்லது துணிவின் பக்கமிருந்து வாழ்க்கையை வெற்றியாக்கிக் கொள்ளப் போகிறீர்களா?

முடிவு காண்பதில் சிரமம் இருக்க வழியில்லை.

### பழக்கங்கள் சுலபத்தில் மாறுவதில்லை

பயம் என்பது ஒரு பழக்கமும் கூட. எதைப் பார்த்தாலும் பயப்படுவது சிலருக்குப் பழக்கம். அதிலும் சிறு வயதிலிருந்து பயத்திற்கு பழகி விடுகிறவர்களால் அதிலிருந்து சுலபத்தில் விடுபட முடியாது.

அஞ்சி அஞ்சிச் சாவார் இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
என்று பாடுகிறார் பாரதி.

தங்களுடைய நிழலைப் பார்த்தே பயப்படுகிறவர்கள் இவர்கள். சில பெற்றோர்கள், புகட்டும் பாலுடன் பயத்தையும் சேர்த்து இவர்களுக்குப் புகட்டி விடுகிறார்கள். இதனால் பயம் குழந்தைகளின் ரத்தத்தோடு இரண்டறக் கலந்து விடுகிறது. இந்தப் பயம் பெரியவர்களாகும் பொழுது இவர்களை விட்டு நீங்காமலிருந்து, வாழ்க்கையில் இவர்கள் செய்யும் பல முயற்சிகளுக்கும் தடையாகி விடுகிறது.

பயத்தை விட்டொழிக்காத மனிதன் வாழ்க்கையில் முன்னேறப் போவதில்லை. ஒன்றிடம் ஏற்படும் பயம் நாளாவட்டத்தில் அனைத்திடமும் பயமாக மாறி மனிதனை மிரட்டத் தொடங்கி விடுகிறது. உங்கள் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு நீங்களே உண்டாக்கிக் கொள்ளும் பயம் தடையாகத்தான் இருக்க வேண்டுமா?

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

நம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள் குறுக்கிடவே செய்கின்றன. அந்தப் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு நமக்குத் துணிச்சல் தேவைப்படும் போது பயமே ஒரு பிரச்சினையாகி நம்மை மிரட்டினால் என்ன செய்வது?

அதனால் வாழ்க்கையின் எந்தக் கட்டத்திலும் பயத்தை அணுக விடாதீர்கள். அது நம்முடைய முதல் எதிரி.

பயத்திற்கு ஆளாகி வாய்ப்புகளை இழந்த பல மனிதர்களை நான் அறிவேன். பயம் ஒரு பழக்கமாகி விடுகிற பொழுது அதைக் களைவதில் சங்கடங்கள் இருக்கவே செய்யும். இடையறாத முயற்சிகளின் மூலமாகவும், அவ்வப்போது மனதைத் திடமாக வைத்துக் கொள்ளுவதன் மூலமாகவும் பய உணர்வை நம்மை விட்டு விலகச் செய்துவிட முடியும்.

நீச்சல் வீரர் ஒருவர் தன்னுடைய குழந்தையை நீச்சல் வீரராக்க வேண்டும் என்கிற ஆசையில் அந்தக் குழந்தைக்கு ஒரு வயதாக இருக்கும் பொழுதே நீரில் மூழ்க வைத்து பயிற்சி அளிப்பதை டெலிவிஷன் படம் ஒன்றில் பார்த்தேன்.

-பி.சி.கணேசன்- (தொடரும்)

# வலி.கிழக்கு கல்வி அபிவிருத்தியில் தனிப்பட்டவர் பங்கு காத்திரமானது

## பிரதேச செயலர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஒக்.1

வலிகாமம் கிழக்கின் கல்வி அபிவிருத்தியில் தனிப்பட்ட பிரமுகர்களின் பங்களிப்பு காத்திரமானது. அந்த வகையில் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியின் ஸ்தாபகர் மழவராயர் கந்தையாவின் பணிகள் தீர்க்கதரிசனமான சிந்தனையோடு கூடியவை; என்றும் நின்று நிலைக்கத்தக்கன. கல்வி, சமயம், சமூகம் என அவை விரிந்து செல்கின்றன.

இவ்வாறு கூறினார் வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன்.

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியின் ''சோமாஸ்கந்தன்'' சஞ்சிகை வெளியீடும், கல்லூரியின் பழைய மாணவர் செ.விசுவலிங்கம் எழுதிய ''புத்தூர் பிரதேச கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு'' ஆய்வுநூல் வெளியீடும் கல்லூரி அதிபர் ஆர்.இராசமனோகரன் தலைமையில் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பிரதேச செயலர் ம.பிரதீபன் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இலங்கையில் இலவசக் கல்வி முறைமை அறிமுகமாவதற்கு முன்னரே வலி.கிழக்கு பிரதேசத்தில் தனிப்பட்ட பிரமுகர்கள், வள்ளல்களினால் கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டு இலவசக் கல்வி வழங்கப்பட்டது.

கிராமிய மட்டத்தில் கல்விப் பணியோடு சமய மேம்பாட்டுக்கான ஆலயத்தையும் அமைத்து, அதனோடு அன்ன சத்திரமும் அமைத்து பன்முகப்பட்ட பணிகளை மேற்கொண்ட மழவராயர் கந்தையாவின் பங்கு, பணிகள் சமூகத்தினரால் நினைவுகூரப்படவேண்டும்.

வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு பொருளாதார வளமுள்ளவர்கள் உதவ முன்வர வேண்டும். பாடசாலைகளின் வளர்ச்சியில் பாடசாலைச்சமூகம் விழிப்புணர்வோடு ஒத்துழைக்க வேண்டும்.

கோப்பாய் பிரதேசம் கல்வியில் பின்தங்கியது என்று மேலோட்டமாக கூறிவிடமுடியாது. அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் 170 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள், பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இந்தப் பிரதேசத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள்.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளின் பரீட்சை பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டுக்கும், வலிகாமம் கிழக்கில் பட்டம் பெற்றவர்களின் தகவல்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டுக்கும் இடையே நிறைய இடைவெளி உண்டு.

பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும் மதிப்பீடு, வலி.கிழக்கை கல்வியில் குறைவு என்ற மேலோட்டமான எண்ணப்பாட்டுக்கு உள்ளாக்கி விடுகின்றது. உண்மை நிலை அப்படியல்ல.

கல்வி தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கு எதிர்மாறான சமூகச்சூழல் சமகாலத்தில் காணப்படுகின்றது. இந்த விடயத்தில் பெற்றோரும், ஆசிரியர்களும் மிகக்கூடிய கவனம் செலுத்த வேண்டும். கல்வியால் நிலைநாட்டப்பட்ட எமது சமூகத்தின் பெருமை தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்-எனக் கூறினார்.

சோமாஸ்கந்தன் நூலின் ஆய்வுரையை யாழ்.கல்வி வலய மாணவர் கல்வி மேம்பாட்டுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் ஆற்றினார். ''புத்தூர் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு'' நூலின் ஆய்வு உரையை மனித உரிமைகள் கண்காணிப்பாளர் த.சண்முகநாதன் ஆற்றினார். (ம-11)



யாழ்.அருணோதயாக் கல்லூரி மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிரேஷ்ட மாணவ தலைவர் ஒருவருக்கு கல்லூரி முதல்வர் சின்னம் சூட்டுகிறார். (எ-36)

## பதவி உயர்வு

தென்மராட்சி,ஒக்.1

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாடசாலை பற்சிகிச்சையாளராகக் கடமையாற்றிய திருமதி சோபனா தயாபரன் பற்சிகிச்சையாளர் வகுப்பு I இற்கு சுகாதார அமைச்சினால் பதவி உயர்வு பெற்றுள்ளார். (எ-9)

## புதிய அதிபர்

வடமராட்சி,ஒக்.1

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் புதிய அதிபராக கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் க.கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அமெரிக்கமிஷன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய கே.தர்மலிங்கம் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்தே கிருஷ்ணகுமார் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-8)

# குடும்ப வாழ்வாதாரத்தை உயர்த்த பெண்கள் கைத்தொழிலில் தேர்ச்சிபெற வேண்டும்

அச்சுவேலி, ஒக்.1

குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பெண்கள் கைத்தொழில் முயற்சியில் தேர்ச்சி பெற வேண்டும். கைத்தொழிலில் தேர்ச்சி பெறுவதன் மூலம் சுயதேவையைப் பூர்த்தி செய்வதோடு, பணப்புழக்கம் உள்ளவர்களாகவும் வாழ முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் ஆவரங்கால் வி.ரி. நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயலாளர் வே.கந்தசாமி.

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப வி.ரி. அறக்கட்டளையால் மாதாந்த உதவு தொகை மற்றும் வாழ்வாதார கைத்தொழில் முயற்சிக்கான தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த அறக்கட்டளையின் செயலாளர் [illegible] தெரிவித்ததாவது:-

உடல் உழைப்பின் மூலம் நாளாந்த வாழ்வை நல்லமுறையில் பேணிக் கொள்வதற்கும், குடும்ப வளத்தைப் பாதுகாத்து குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் பெண்கள் குடிசைக் கைத்தொழில் முயற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

நிவாரணத்தையும், பிறரது உதவியையும் நம்பி வாழ்வது வாழ்க்கையில் திருப்தியை தரமாட்டாது. நாங்களே உழைத்து எமது தேவையை நிறைவு செய்வதும், சுற்றாடலில் உள்ளவர்களுக்கு உதவுவதும் மேலான மனநிறைவைத் தரும்.

சிவசக்தி மணிமண்டபத்தில் தேறிய வருமானம் முழுவதும் வி.ரி. அறக்கட்டளை மூலம் சமூக மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையில் 50 இற்கு மேற்பட்டவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம், மாதாந்த உதவு தொகையாக வழங்கப்படுவதோடு, கல்வி மற்றும் அறப்பணிகளுக்கும் செலவு செய்யப்படுகின்றது.

மாதாந்த உதவுதொகை பெறுபவர்கள் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடமுன்வரும் இடத்து அதற்கான முழுச் செலவையும் அறக்கட்டளை மூலம் வழங்க முடிவு செய்துள்ளோம். இந்த வகையிலேயே தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் விரும்பும் கைத்தொழில் முயற்சியையும் அதற்கான உத்தேச செலவையும் தெரிவித்து விண்ணப்பிக்கலாம்.

குடும்பப்பெண்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் தமது குடும்பச் செலவை ஈடு செய்வதோடு, மனநிறைவான வாழ்க்கையையும் வாழ முடியும். சுற்றுச்சூழலில் உள்ளவர்களுக்கு உதவ முடியும். பிள்ளைகளின் கல்விச் செலவை ஈடுசெய்ய முடியும். அத்துடன் உடல் ஆரோக்கியத்தையும் பேணமுடியும் எனத் தெரிவித்தார். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

**விளம்பர முகவர்கள்:** 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# நெஞ்சில் உரத்தோடு செயலாற்ற வாருங்கள்

"**நீதிமன்றத்** தீர்ப்புகளுக்குப் பின்னர் தான் நியாயமாக நடக்கவேண்டும் என்ற எண்ணம் எங்கள் அதிகாரிகளுக்கு ஏற்பட்டுவிட்டது. அத்தகைய சிந்தனையை விடுத்து தமது மனச்சாட்சிப் படி நியாயமாக நடக்க அதிகாரிகள் முன்வரவேண்டும்". இவ்வாறு வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் விவகார இழுபறி முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

**அவர்** கல்வித் திணைக்கள அதிகாரிகளையே இதன் போது மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தாலும் உண்மையில் வடக்குக் கிழக்கில் உள்ள ஏனைய திணைக்கள அதிகாரிகளும் அவருடைய கோரிக்கையை கவனத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் அரசியல் வாதிகளுக்கு வால் பிடிக்கும் பணியையே தமது முதன்மையான கடமையாகக் கொள்ளும் அதிகாரிகளையே அதிகமாகக் காணமுடிகிறது. அரசியல் தலையீடுகளை நிராகரித்து விட்டு தமது மனச்சாட்சியின்படி மக்கள் பணி செய்ய முனையும் அதிகாரிகள் பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற விடயங்களால் பந்தாடப்படுகின்றனர். எனவே தாமும் அவ்வாறு பந்தாடப்பட்டுவிடுவோமோ என்ற பயத்திலும் நேர்மையாக நடக்க முனையும் பலர் தமது மனச்சாட்சியை அடகு வைத்துவிட்டு, அதிகாரத்துக்கு சாமரம் வீசும் கூட்டத்தோடு தாமும் ஐக்கியமாகிவிடுகின்றனர்.

**இத்தகைய** இயல்பின் பெருக்கத்தாலேயே அரச நிர்வாகம் தமிழர் பகுதிகளில் செயற்திறன் இன்றி முடமாக மாறியிருக்கின்றது. வெறுமனே காகிதங்களில் மட்டுமே திட்டங்கள் இருக்கின்றனவே தவிர செயற்பாடுகள் எதுவுமே நடப்பதாகத் தெரியவில்லை. கேப்பாபிலவில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் யாவும் தாராளமாகச் செய்து கொடுக்கப்பட்டதாக முல்லைத்தீவு அரச அதிபர் கூறியிருந்தார். ஆனால் அதனை அங்குள்ள மக்கள் அடியோடு மறுத்திருந்தார்கள். மர நிழலின் கீழ் , மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து, விலங்குகள்போல தாம் தவிக்க விடப்பட்டுள்ளதாக அந்த மக்கள் தீனக் குரலில் கூறுகிறார்கள். அப்படியாயின் முல்லைத்தீவு அரச அதிபர் தனக்கு கீழ் உள்ள அதிகாரிகளால் – குறிப்பாக புனர்வாழ்வுக்குப் பொறுப்பானவர்களால் –வழங்கப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டே கேப்பாபிலவு மக்களுக்குரிய வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டுவிட்டதாக கூறியிருக்க வேண்டும். ஆனால் அவர் அந்த மக்கள் தவிக்கும் நிலத்துக்குச் சென்றால் உண்மையை நேரில் கண்டு உணர முடியும்.

**ஒரு பானை** சோற்றுக்கு ஒரு சோறு பதம் . மேற்குறித்த விடயமும் அதைப் போன்றது தான். இவற்றைப் போல ஏராளமான சம்பவங்களை பட்டியல் இட்டுக் கொண்டே போக முடியும். தீவகத்தில் கூட வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரண்டு மதகுகள் குறித்த காலத்துக்குள் அமைத்து முடிக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில் இப்போது தான் கல்லும் மண்ணும் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு மக்கள் நலனை விடவும், அதிகாரத்துக்கு வாலாட்டும் வேலையையே நம் அதிகாரிகள் சிரமேற்கொண்டுள்ளார்கள்.

**அரசியல்வாதிகள்** வருவார்கள்; போவார்கள். ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தால் இப்போது செல்வாக்குள்ளவர்களாக இருக்கும் அரசியல் வாதிகள் செல்லாக் காசாகிவிடுவார்கள். ஆனால் அதிகாரிகள் தமது கதிரையில் ஓய்வு பெறும் வரை இருப்பார்கள். ஆகவே அவர்கள் யாருக்கும், எந்தவொரு அரசியல் வாதிக்கும் அடிபணிய வேண்டிய அவசியம் ஏதுமில்லை. ஏன் எனில் அவர்கள் வேதனம் பெறுவது அரசியல் வாதிகளின் எச்சில் பணத்தில் அல்ல. மக்களின் வரிப் பணத்தில் தான்.

**எனவே** நீதிமன்றத் தீர்ப்புகளுக்குப் பின்னரே சுரணை வந்து செயற்படாமல், நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனும் கொண்டு மக்களுக்குப் பணியாற்ற அதிகாரிகள் முன்வரவேண்டும்.

# சிறுவர்உலகம் சிறுவர்களுக்கானதே .....

ஒக்ரோபர் முதலாம் திகதி 'சர்வ தேச சிறுவர் தினமாகும் ' சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகள், தேவைகள் என்பவற்றை சிறுவர்கள் சரியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே சர்வதேச சிறுவர் தினம்' உணர்த்தி நிற்கின்றது. 1979 ஆம் ஆண்டு "சர்வதேச சிறுவர் ஆண்டாக " முதன்முதல்பிரகடனமானது. இதனைப் பின்பற்றியே 'சர்வதேச சிறுவர் தினம்' இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சிறுவர்கள் சமாதானம், கண்ணியம், சகிப்புத்தன்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இலட்சிய உணர்வுடன் வளர்க்கப்படவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, முதன்முறையாக உலகமே சிறுவர்கள் மீது அக்கறை கொண்டு 1924 ஆம் ஆண்டு சிறுவர்உரிமைகள் தொடர்பான ஜெனிவாப் பிரகடனத்தினை முன்வைத்தனர்.



'சிறுவர் உரிமைச் சாசனத்தில்' 54 உறுப்புரிமைகள் கூறப்பட்டுள்ள போதும், எல்லாப்பிள்ளைகளும் உயிர் வாழ, விருத்தியடைய, பாதுகாப்புப் பெற, சமூகநடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமையுடையவர்களெனச் சொல்லப்படுகின்றது.

அந்த வகையில் 18 வயதுக்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களே ஆவர். அவர்கள் சகல உரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும். அடுத்து "பாகுபாடு காட்டாமை" எல்லாப் பிள்ளைகளும் வயது, பால்,நிறம், சாதி, மதம், மொழி, ஆகியவற்றால் வேறுபட்டிருப்பினும் சகலஉரிமைகளையும் அனுபவிக்கு[ம்] உரிமை சிறுவர்களுக்கு உண்டு. மேலு[ம்] "சிறுவர்களின் சிறந்த நலன்" சிறுவர்[களுடன்] தொடர்பான சகலசெயற்[பா]டுகளு[ம்] முடிவுகளும் பிள்ளையின் சிறந்த ந[ல]னைக் கருத்தில் கொள்ளும் [முதன்]மையை கொண்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தையும் பி[றப்]பின் போது பெயரையும், இ[ன]அடையாளத்தையும் பெற்றுக் கொ[ள்]ளும் உரிமை, பெற்றோரை தெரி[ந்து] கொள்வதற்கும் , அவர்களது பா[து]காப்பைப் பெற்றுக்கொள்வதற்கு[ம்] பெற்றோரில் ஒருவரை அல்ல[து] இருவரையும் பிரிந்து வாழுமானா[ல்] இரு பெற்றோருடனும் தொட[ர்]பினைப் பேணிக்கொள்ளும் உரி[மை] என்பன உண்டு. இவற்றைவி[ட] சிறுவர்கள் வாழ்வதற்கும் மேம்பா[ட்]டுக்குமான உரிமை, தமது கருத்து[க்]களை வெளியிடும் உரிமை, த[ம]னைப் பாதிக்கக்கூடிய விடயங்க[ள்] தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடும் உரிமை, மற்றவர்களுடன்

# குழந்தைகள் எதிர்கால சிற்பிகள்...




இன்றைய சிறார்களே எதிர்காலத்தின் தலைவர்கள். எனவே எதிர்கால உலகு எவ்வாறு அமையவேண்டும் என எதிர்பார்க்கும் அனைவரும் இன்றைய சிறார்களுக்கு அத்தகைய திறன்களையும், தேர்ச்சிகளையும் வழங்கி முழு ஆளுமைமிக்க பிரஜைகளாக உருவாவதற்கு அடித்தளமிடப்பட வேண்டும். இன்றைய நாளில் நாம் அனைவரும் சிறுவர்களை உலகின் சொத்துக்களாக கருதி அவர்களின் விருப்பு, வெறுப்பு, திறன்களைக் கண்டு அதற்கேற்ப நேர்மனப்பாங்குடன் அவர்களை அணுகி அவர்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொண்டு வர சந்தர்ப்பம் வழங்கவேண்டும்

உலக சிறுவர் தினம் கொண்டாடுவதற்கான காரணம் 1ஆம், 2ஆம் உலக மகாயுத்தத்தின் போது இறந்தவர்கள் பெரும்பாலானோர் சிறுவர்களே. அது மட்டுமன்றி ஜப்பானில் கிரோசிமா, நாகசாஜி பிரதேசங்கள் மீது வீசப்பட்ட அணுகுண்டு மூலம் பிற்காலத்தில் பிறந்த பிள்ளைகளில் பெரும்பாலானோர் அங்கவீனமுடையவர்களாகப் பிறந்தனர். இதன் காரணமாகவே சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு சர்வதேச சிறுவர் தினம் ஒக்ரோபர் 1ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் நாளாந்தம் நடைபெறும் வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் பற்றி ஆய்வு செய்த 'யுனிசெப் நிறுவனம்' இலங்கைப் பிள்ளைகளில் 14- 16 சதவீதத்துக்கு இடைப்பட்டோர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதாக குறிப்பிட்டுள்ளனர்.அத்தோடு உடல்ரீதியான, மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகத்தின் வீதம் மிக உயர்வாக உள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. உடல் சார்ந்த துஷ்பிரயோகம் என்பது யாதேனும் வகையில் வலிமையான நிலையில் இருக்கும் ஒருவர் அல்லது நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவர், வேண்டுமென்றே பிள்ளைகளுக்கு காயம் விளைவித்தல், அல்லது காயம் விளைவிக்கப்போவதாக அச்சுறுத்தலே உடல்சார்ந்த துஷ்பிரயோகமாகும்.

பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் என்பது வளர்ந்தவர் ஒருவரால் அல்லது கூடிய வலிமையுடைய ஒருவரால் பிள்ளையொன்றை பாலியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தலாகும். இது தொடுகையுடனோ தொடுகை அற்ற வகையிலோ நிகழ இடமுண்டு

மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகம் மூலம் பிள்ளையின் சுயமதிப்பு மீண்டும் தாக்கப்படும். அது பிள்ளையின் சுயஉணர்வை நசுக்கிவிடக்கூடியதாக பல்வேறு வழிகளில் இடம்பெறும். குறிப்பாக உலகில் உள்ள அனைத்து சிறுவர்களும் இவ்வாறான துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுத்து வருகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகங்களை நீக்கி சுதந்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு உலகில் பல அரசுகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக மற்றும் சமய நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1990 செப்ரெம்பர் 20 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது . இதில் இலங்கை 12.07.1991 அன்று அங்கத்துவ நாடாக இணைந்து கொண்டது. சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 54 உறுப்புரைகளைக் கொண்டது அவற்றுள் 40 உறுப்புரைகள் சிறுவர்கள் பற்றியும், ஏனையவை நடைமுறைப் படுத்தப்படலுடனும் தொடர்புபட்டவை. கல்வி உளவியலாளர்கள், கல்வித்தத்துவவியலாளர்களின் கருத்துப்படி பிள்ளை வாழும் சூழல், பிள்ளையின் வளர்ச்சி விருத்தியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதாக கூறியுள்ளனர். அந்த வகையில்

- ★ கேலிக்கு உட்படும் குழந்தை வெறுக்கக் கற்றுக்கொள்கின்றது.
- ★ சமாதான சூழ்நிலையில் வளராத குழந்தை சண்டையிடக்கற்றுக்கொள்கின்றது.
- ★ விமர்சனங்களுக்கிடையே வளரும் குழந்தை வெட்கப்படக்கற்றுக்கொள்கின்றது.
- ★ அவமானங்களுக்கிடையே வளரும் குழந்தை குற்றமனப்பான்மையுடன் வளரக் கற்றுக்கொள்கின்றது
- ★ சகிப்புத்தன்மையுடன் வளரும் குழந்தை பொறுமையுடன் வாழக்கற்றுக்கொள்கின்றது
- ★ ஊக்குவிக்கப்படும் குழந்தை தன்னம்பிக்கையுடன் வாழக் கற்றுக்கொள்கின்றது
- ★ புகழ்ச்சிகளுக்கிடையே வளரும் குழந்தை பிறரைப் பாராட்டக் கற்றுக்கொள்கின்றது
- ★ நேர்மையான சூழலில் வளரும் குழந்தை நீதி நியாயங்களைக் கற்றுக்கொள்கின்றது
- ★ பாதுகாப்பான சூழ்நிலையில் வளரும் குழந்தை நேர்மையாக வாழக்கற்றுக்கொள்கின்றது
- ★ விரும்பி ஏற்றுக்கொள்ளப்படும் குழந்தை தன்னையே விரும்பக் கற்றுக்கொள்கின்றது.
- ★ எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் நட்பு இவற்றினிடையே வளரும் குழந்தை இவ்வுலகில் அன்பு [illegible] கற்றுக்கொள்கின்றது. [illegible] நாட்டின் சொத்துக்கள். நாம் அனைவரும் அவர்களைப் [illegible] ஆதாரத்திலே அவர்களை ஒளிபெறச் செய்வோம்

த. சிவகுமார், விரிவுரையாளர் விசேட கல்வித்துறை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.




# ஆளுமைய

இன்று சர்வதேச
காக வளர்த்தெடுக்க
உணர்வும், கலாசாரத்
களும் சமூகத்தில் தே
செயற்படப்போகின்ற
றைய சிறுவர்கள் தா
அவர்களுக்கு முக்கி
உரிமைகளை முழு
வழங்கப்படுவதுடன்
களைந்தெறிந்து மகி
கொண்டாடப்படவே

சிறந்த சிறுவர்கள
மிகவும் முக்கியமான
லும், இயல்பிலும், அ
ஆளுமைச் சிதை
அளவும் தங்கியுள்
பிள்ளைக்கும் பெற்
தொடர்பு ஆரோக்கியம
வேண்டும். குடும்
சுமுகமான நிலை சி
மையை விருத்தி செ
லிங்கன் பெற்றோரக
காலத்தில் தனது மச
சேர்த்த பின், பள்ளி ஆ
கடிதத்தில் எனது ம
வும், வெற்றியைக் கெ
கேட்டுக்கொண்டார்.
உதவும். பள்ளிப்பருவ
வீட்டில் உருவாக்கிக்
கற்றல் சிறுவர்கள்
சிந்தனை இல்லாத ப
நடைமுறை வாழ்க்கை
சிறுவர்கள் எப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடும் உரிமை, உரிமைகள், இம்சைகள், புறக்கணிப்பு ஆகிய வற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, ஒரு பிள்ளை அகதியானால் அந்தப்பிள்ளைக்கு விசேட பாதுகாப்பும், ஆதரவும்பெறும்உரிமை, ஊனமுற்ற பிள்ளைகளுக்கு விசேட பராமரிப்பு, பயிற்சி பெறும் உரிமை, சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, தரமான வாழ்க்கையை அனுபவிக்கும் உரிமை, எல்லாச் சிறுவர்களும் கல்வி கற்கும் உரிமை, சிறுபான்மையினப் பிள்ளைகள் தமது சொந்த மதம், மொழி ஆகியவற்றைப் பின்பற்றும் உரிமை, பொழுதுபோக்கு கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை, பாரதூரமான வேலைகளில் இருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, போதைவஸ்துகள் பாவனை, விநியோகம் போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடவோ, ஆயுதப்பிணக்குகளுக்கு சேர்த்துக் கொள்ளவோ கூடாது அவற்றிலிருந்து பாதுகாக்கும் உரிமை இவ்வாறாக பல உரிமைகள் இருக்கின்றன.

இத்தனை உரிமைகள் இருந்தும் அதனை மீறி 'சிறுவர் துஷ்பிரயோகங்கள்' இன்று கட்டுக்கடங்காத அளவிலே அரங்கேறி வருகின்றன. பாடசாலை சென்று கற்கவேண்டிய வயதிலே பெற்றோர்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், கடுமையாக வேலை வாங்குதல், சிறுவர்களை கடத்துதல், விற்றல், பாலியல் ரீதியான சுரண்டல், சிறுவர்கள் தனித்து விடப்படல் போன்ற சிறுவர் துஷ்பிரயோகங்களால் சிறுவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இவ்வாறான பாதிப்புக்களை சிறுவர்களுக்கு உருவாக்குவது யார்? இந்தநிலையில் ''சிறுவர்களுக்கான சிறுவர் உலகம் '' எப்படி உருவாகும்?

அன்பான சமூக உறவுகளே! சிறுவர்கள் எமதுநாட்டை அலங்கரிக்கப் போகின்ற 'அலங்காரபுருஷர்கள் ' அவர்களை மேலும் அழகுபடுத்திப் பார்ப்பதை விடுத்து , கசக்கிப் பிழியும் எண்ணத்தை கைவிடுங்கள். சிறுவர்கள் எமது நாட்டின் சொத்துக்கள். சிறுவர்களது எதிர்காலம் சிறப்பானதாக அமைய வேண்டுமானால் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். சிறுவர் உரிமைகளை ஒவ்வொருவரும் பேணிப்பாதுகாக்கின்றபோது 'சிறுவர் உலகம் சிறுவர்களுக்கானதாகவே' அமையும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

**கிருபாலினி சோமசுந்தரம் , ஆசிரியர்**




# பெற்றோர்களைப் பிள்ளைகளே பராமரிக்க வேண்டும்.... 01

இன்று ஐப்பசி முதலாம் நாள், மூத்த பிரஜைகளின் முகவரிகளை முனைப்பாக்கிக் கொள்ளும் நாள். முதியோர் வாரத்தின் முதல்நாள். முதியோர் இல்லங்களில் முதியோர்களைப் பராமரிப்பது என்பது சாத்தியமல்ல. முதியவர்கள் சமூகத்தில் வைத்தே பிள்ளைகளால் அல்லது உறவினர்களால் பராமரிக்கப்பட வேண்டும். இலங்கையில் 278 முதியோர் இல்லங்களில் 6705 பேர் வாழ்கிறார்கள். வடக்கு மாகாணத்தில் 13 முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன.

இவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். கைதடி அரச முதியோர் இல்லத்தின் இறுதிப்பயணங்களின் நினைவலைகளை சிந்தைக்கு மீட்கும் வகையில் முதியோர் வார 7 நாள்களிலும் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆடி மாதத்தின் இறுதிநாட்களை 2012 நாட்காட்டி மரணிக்கச்செய்த நாள் இன்று! அமைதியின் சாயல் ஆங்காங்கே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. பக்திப் பாடல்கள் ஒலிபெருக்கி வழியே மெல்லெனத் தவழ்ந்து வந்து செவிகளினுள் குடியமர்ந்து கொண்டது. எனது மேசையில் கிடந்த கோவையின் பக்கங்கள் சுழன்றடித்த காற்றாடியின் விசையில் திறந்து கொண்டன.

திருமணம் செய்யாது தனிமையில் வாழ்ந்தவர். முதுமையில் இல்லத்தில் அடைக்கலமானவர். உடல்வலுவுள்ள போது உறவுகளை இணைத்துக்கொண்ட சமூகம், நுகர்வுகளுக்குப் பின் உறவு என்று சொல்லவே வெட்கித்து ஓடி ஒளிந்து கொண்டு விட்டது. உன்னதமான உறவின் மகத்துவம் கூட இன்று கொஞ்சமும் இல்லாத நிலையில் சமூகம் மரணித்துக்கிடப்பது நெருடலை ஏற்படுத்தியது.

தனது நோய்களைப் பற்றியே இரண்டுவருடமாகக் கூறிக்களைத்துப் போன அந்த மனிதனது இருதயம் இன்று தனது செயற்பாட்டை நிறுத்திக் கொண்டது. உறவுகள் எல்லாம் தூரமாகி, நோயின் கொடுமை தாராளமாகியதால் அந்த மனிதனின் உயிர் இன்று அகன்றுவிட்டது. இங்கு வாழ்ந்த காலத்தில் கடந்தகால நினைவுகளை ஒருகணம்கூட இவர் மீட்டுப்பார்க்கவில்லை. ஏதும் கேட்டால் கூட அவரது வறண்ட வாழ்க்கையின் பக்கங்களிலிருந்து ஒரு சொட்டுக்கண்ணீர் கூட வரவில்லை. பதிலுக்கு ஏக்கப் பெருமூச்சு மட்டும் பறந்து மடிந்திருந்தது.

கோவைக்குள் சிறைப்பட்டுக்கிடந்த எனது நினைவுகளை கலைப்பதற்கு, தொலைபேசியின் அலறல் பறந்து வந்தது. காதின் அருகில் ''ஹலோ!'' என்ற குரல் கரகரப்பாக ஒலித்தது.

''ஐயா! நான் பாலகிருஷ்ணனின் நண்பன் பேசுகிறேன், அவரைக்கடைசியா ஒருக்கா பாக்கலாமா? உங்கட அனுமதியை தாருங்கோ ஐயா, நான் நேரில் வந்து எல்லாத்தையும் சொல்லுறன்.'' கூறி முடித்தார்.

''சரி வாருங்கள்''.. கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டு ஒரு நிமிட மௌன அஞ்சலிக்காக அனைவருடனும் எழுகின்றேன். உயிர்த்துடிப்பான எண்ணங்கள் ஊர்ந்துகொண்டன. அனைவரது கண்களும் ஈரமாகின. கண்ணீர்த்துளிகள் கூட பூமியைத் தொட மறுத்து இடைநடுவில் ஆவியாகின. இல்லத்துள் உயிர்வாழும் நாய்களும், பூனைகளும் அங்குமிங்குமாக நின்று ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டன. ஏ-9 வீதியின் போக்குவரத்து வாகனங்களின் இரைச்சல் ஒலிகள் மீண்டும் அனைவரையும் பூலோக வாழ்வியலுக்குள் நுழைத்துக்கொண்டன. சுழன்றடித்த காற்றும் ஒருகணம் தனது செயற்பாட்டை நிறுத்தி ஓய்வெடுத்துக்கொண்டது.

பூர்வீகங்களின் முகவரிகள் தொலைந்தநிலையில் வாழ்ந்துவிட்ட மனிதனைத் தேடி அவரது நண்பன் வந்தமர்கின்றார்.

''ஐயா வணக்கம்''

''வணக்கம்'' இருங்கள். வரவேற்றுக்கொள்கின்றேன். சம்பிரதாயமான வரவேற்புடன் அமர்ந்தவருக்கு வார்த்தைகளையும் மீறி வந்த கண்ணீர் சிந்திச் சிதறியது. தன்னைச் சமாதானப்படுத்தியபடி நிமிர்ந்து அமர்கின்றார். முதுமையின் கோலங்கள் அவரினுள்ளும் அமர்ந்து கொண்டதை நரைமுடிகள் பறைசாற்றி நின்றன.

''நான் மிகவும் கஷ்டமான நிலையில் இயலுமான சின்ன, சின்ன வேலைகளைச் செய்து உழைத்து சாப்பிடுறன். எனக்கும் ஒருவரும் இல்லை. நானும் இவரும் சின்ன வயதிலிருந்தே நண்பர்கள். இளமையிலும் கஷ்டம்தான், தினமும் என்னைச் சந்தித்துக் கதைப்பார். எனக்கு உதவமுடியவில்லை என்ற ஆதங்கத்திலையும் வெட்கத்திலையும் இங்க வரேல்ல. அவரைப் பற்றி அறிந்து கொண்டே இருப்பன். இண்டைக்கும் அவர் இறந்ததை உடனேயே அறிஞ்சு தான் வாறன். உண்மையான மனிதன். சமூகம் அவருக்கு மனிதாபிமானமாக



எதையும் செய்யேல்ல, நானும் செய்யேல்ல..'' கூறிக்கொண்டே அழுதபடி எழுந்தார். ''ஐயா ! போய்ப்பார்க்கிறன்''.. கூறியபடி மரணித்த மனிதனுக்காக இறுதியிலேனும் ஒரு உறவு, உணரமுடியாத நிலையிலுள்ள உடலை நோக்கி நகர்கின்றது.

நேற்று மாலை ''தாகமாயிருக்கு சோடா தாருங்கள்'' என கூறும்போது உத்தியோகத்தர் ஒருவர் கொடுத்த சோடாவைக் குடித்துவிட்டு, கண்களை மூடித்திறந்து, பறந்த கண்ணீரை காணிக்கையாக்கிய மனிதன் இன்று இறுதியாத்திரைக்குத் தயாராகிக் கிடக்கின்றான்.

அனைவரும் எழுந்து நின்று அணிசேர்கின்றனர். அமைதியாக மரண ஊர்வலம் நகர்கின்றது. வேப்பமரக்கிளையில் தனிமையில் நின்ற காகம் ஒன்று ஊர்வலம் மறையும் வரையில் கரைந்து தீர்த்தது. ஆட்காட்டிக் குருவிகள் தங்களது பணிகளைச் செய்வதற்காக எதிர்த்திசையில் பறந்து சென்றன.

முதுமையில் உழன்று கொண்டிருந்த உயிர்கள் தமது ஆதங்கங்களை ஆர்ப்பரித்த உணர்வுகளாக வெளிப்படுத்தி நின்றன. முதியவர்களை சமூகத்தில் வைத்தே பராமரிக்க வேண்டும் என்ற பதாகை கம்பீரமாக காற்றில் அசைந்து கொண்டிருந்தது. இறுதிப்பயணத்தின் இறுதி வாசகம் சமூகத்தின் முகவரிகளாக மாறிக்கொள்வதற்காக முனைந்து கொண்டிருந்தது என்ற நினைப்பில் எனது உள்ளமும் உருமாறிக்கொள்கின்றது.

(தொடரும்)

**த.கிருபாகரன், அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி.**

## ...மயுள்ள சிறுவர்களை உருவாக்க ஒன்றிணைவோம்

...தேச சிறுவர் தினமாகும். சிறுவர்களை ஒழுங்...டுக்காத பட்சத்தில் சமூகப் பொறுப்பற்ற ...சாரத்துக்கு மாறுபாடான நடத்தைக் கோலங்...ல் தோற்றம் பெறும். எதிர்கால சமூகமாக ...கின்றவர்கள் இன்றைய சிறுவர்களே. 'இன்...ர் நாளைய தலைவர்கள்' என்ற வகையில் ...க்கியத்துவம் கொடுத்து, அவர்கள் தம் ...ழுமையாக பயன்படுத்த சந்தர்ப்பங்கள் ...துடன், சிறுவர் துஷ்பிரயோகங்களையும் ... மகிழ்வாக வாழ சர்வதேச சிறுவர் தினம் ...டவேண்டிய ஒன்றாகும்.

...ர்களை உருவாக்க பெற்றோர்கள் பங்களிப்பு ...மானதாகும்.பெற்றோருடனான தொடர்பி...ம், அளவிலும் சிறுவர் ...தையின் இயல்பும், ...றியுள்ளது. எனவே ... பெற்றோருக்குமான ...கியமானதாக அமைதல் ...டும்பத்தில் நிலவும் ...ல சிறார்களின் ஆளு...தி செய்யும். ஆபிரகாம் ...ாக (தந்தையாக) இருந்த ...து மகனை பள்ளியில் ...ரி ஆசிரியருக்கு எழுதிய ...ய மகனுக்கு தோல்வியை ஏற்றுக்கொள்ள...க் கொண்டாடவும் கற்றுக்கொடுங்கள் எனக்...டார். இது ஆளுமையை விருத்தி செய்ய ...ருவத்திலேயே பெற்றோர் கற்றலுக்கான சூழலை ...க்கிக் கொடுக்கவேண்டும். மகிழ்ச்சிகரமான ...ர்களின் ஆளுமையை செழிப்பூட்டும். ...த படிப்பும், படிப்பு இல்லாத சிந்தனையும் ...ழ்க்கைக்கு உதவாது என்பர்.

...எப்போதும் பெற்றோரின் அரவணைப்பில் வாழவேண்டியவர்கள். சிறுவர்களின் பாதுகாப்பு கவசம் பெற்றோரே ஆகும். சிறுவர்கள் குறிப்பிட்ட ஒரு கட்டமைப்புக்குள் வளர்க்கப்படவேண்டியவர்கள். சிறுவர்களுக்கு உயர் விழுமிய சமூக நடத்தை உருவாக்கத்துக்கான வாய்ப்பு வசதிகள் பாடசாலைகளிலும் வழங்கப்படல் வேண்டும். எதிர்கால சமூக வாழ்வுக்குத் தேவையான மனப்பாங்குகளையும், நடத்தைக்கோலங்களையும் பயில வேண்டியவர்கள் சிறுவர்களே. மிகச் சிறிய பொய் பேசும் பிள்ளைகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். மிகவும் சிறிய பொய் பேசும் குழந்தைகள் எதிர்காலத்தில் புத்திசாதுர்யமானவர்களாக வருவர் என ஆய்வுகள் கூறுகின்றன.



சமவாயத்தில் குறிப்பிட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் ஒவ்வொரு பிள்ளையும் அனுபவித்தல் வேண்டும். பிள்ளைகள் தம் உரிமைகளைத்தாமே அறிந்தும் புரிந்தும் கொள்ளுதல் அவசியம்.

சமூகப் பொருத்தப்பாடுள்ள பூரண மனிதனாக்கல் எனும் கல்வி இலக்கை சிறுவயது முதலே சிந்தித்து கல்வி உரிமைகளைப் பயன்படுத்த வேண்டும். கல்வியுடன் இணைபாடவிதான செயற்பாடுகளையும் இணைத்து, ஆன்மிகத்துடன் பிள்ளைவளருமானால், ஆளுமைப் பண்பு சிறுவயது முதலே விருத்தி அடைந்து செல்லும். சிறந்த மனப்பாங்குகள் உருவாகும். மனத் தைரியம் வளர்த்தெடுக்கப்படும். 2011 ஆம் ஆண்டு 16 வயதுக்கு குறைந்த 41 ஆண் சிறுவர்களும், 77 சிறுமிகளும் தற்கொலை செய்துகொண்ட தகவல் உள்ளது. இது மன தைரியம் இல்லாமையைக் காட்டுகின்றது. ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமான பிள்ளையே. அவர்களது தனித்துவமான ஆற்றல்களை உச்ச அளவில் விருத்தி செய்து, நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான மனித வளங்களை விருத்தி செய்து நாட்டுக்கு பங்களிப்பு செய்யும் வகையில் சிறுவர்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு எல்லோரையும் சாரும்.

**சி. நற்குணலிங்கம் M.A கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைகால் புரியாமல் ஆட வேண்டாம்

கபீர்தாஸர் வடக்கில் வாழ்ந்த மகாஞானி. ஒருமுறை அவர் வீதியில் நடந்து வரும்போது ஒரு காட்சியைக்கண்டார். ஒரு பெண், கோதுமையைக் கல்லில் போட்டு திரித்துக்கொண்டிருந்தாள். இரண்டு வட்டக் கற்கள் கீழ் மேலாக இருக்கும். மேல் கல்லில் நடுவில் உள்ள தூவாரம் வழியே கோதுமையைப் போடுவார்கள். மேற் கல் சுழல வசதியாக ஒரு கம்பி அல்லது ஒரு கட்டை கீழ்க்கல்லில் இருந்து நீட்டிக்கொண்டிருக்கும். இதற்கு இது முளை என்று பெயர். ஒரு கைப்பிடி மேல் கல்லில் இருக்கும். அதைப் பிடித்துச் சுழற்றுவார்கள். பழைய காலத்தில் இப்படித்தான் கல் இயந்திரத்தைச் சுற்றிப் பெண்கள் மா திரிப்பார்கள். கோதுமை கல்லுக்கு நடுவே கரபுர என்று அரைபடுவதைக் கண்ட கபீர் நடுங்கினார்.கண்ணீர் விட்டார்.

வீட்டிற்கு வந்ததும் அவரது அருமை மகன் கமாலைப் பார்த்த, 'கோதுமை இயந்திரத்தின் இரண்டு வட்டக் கற்களுக்கு இடையில் அரைபடுகிற மாதிரி எமது வாழ்க்கை இன்ப, துன்பம், பாவ, புண்ணியம், துக்க சந்தோஷத்திற்கு மத்தியில் அரைபடுகிறது. இதிலிருந்து தப்பிக்கவே முடியாது என்று தோன்றுகிறது. எனக்கு வருத்தமாக இருக்கிறது, கமால்....' என்று வாழ்க்கைப் பாடம் நடத்தினார்.

கமால் சிரித்துக் கொண்டே "அந்தக் கல் இயந்திரங்களுக்குள் மாட்டாமல் தப்பிக்கின்ற கோதுமையை நீங்கள் பார்தத்தில்லையா? நடுவில் உள்ள முளைக் கம்பைச் சுற்றிச் சுற்றி வந்து ஒரு சில கோதுமை மணிகள் மட்டும் கல்லுக்குள் போகாது. எந்திரத்தைச் சுற்றுகிற வேகத்தில் நடுவில் உள்ள துவாரம் வழியாக மேலே வந்து வெளியே தெறித்து விடும். இன்ப துன்பங்களுக்குச் சிக்காமல், நடுநிலையில் நின்றால் தப்பிக்கலாம். முளையைப் பற்றி மேலே வருகிற கோதுமை மாதிரி இறைவனைப் பற்றிக் கொண்டு தப்பிக்கலாம்." என்றார் கமால். கபீர் புன்னகைத்தார்.

இந்து மதத்தின் பலப்பல ஞானியர் இதைத்தான் சொல்கிறார்கள். இறைவன் திருவடியைப் பற்றி நின்றால் பாவ, புண்ணியத்தில் சிக்கமாட்டார்கள் என்கிறார்கள். திருக்குறள் "வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல" என்று இதையே அறிவிக்கிறது. அது மட்டுமா? "பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவன் அடி சேராதார்" என்று எச்சரிக்கை வேறு விடுகிறது.

ஞானிகளுக்கும் எமக்கும் இதுதான் வித்தியாசம். அவர்களும் உலகத்தில் எம்மைப் போலவே காலை எழுந்து பல் துலக்கி, காபி சாப்பிட்டுக் கொண்டு அலுவலகம் போய் வந்து சராசரி போலவே இருப்பார்கள். ஒரே வித்தியாசம் அவர்கள் மனம் இறைவன் அடியில் லயித்திருக்கும். அதனால் பாவ, புண்ணியங்கள் அவர்கள் கணக்கில் ஏறாது. இறைவன் கணக்காகி விடும்.

கள்ளக்கடத்தல்காரர்களும் , கொள்ளைக் கூட்டத்தாரும் பார்டிக்குப் போவார்கள். சீட்டாடுவார்கள்...கிளப் டான்ஸ் பார்ப்பார்கள். அவர்களைப் பிடிக்க அந்தக் கூட்டத்தில் ஒரு புலனாய்வு உத்தியோகத்தர் இருந்தால் அவரும் அவர்களோடு சேர்ந்து அத்தனை தவறுகளும் செய்வார். ஆனால் இறுதியில் சட்டம் அந்த புலனாய்வு உத்தியோகத்தரை தண்டிக்காது. காரணம்.. இத்தனையும் செய்தாலும் அவர் கவர்மெண்ட் வேலையில் இருப்பதால் அந்தப் பாவங்கள் அவரைச் சேராது.

எனவே உலக வாழ்வில் ஈடுபட நேர்ந்தாலும் கடவுள் திருவடியில் லயித்தவர்கள் உலகியலில் மயங்குவதே இல்லை. உதாரணம் சொல்லுகிறேன் !

நிறைய குழந்தைகள் கோயில் திருவிழாவுக்கு வருகிறார்கள். பந்தல் போட்டு விழா ஜாம் ஜாமென்று நடக்கிறது. குழந்தைகளுக்கு ஒரு வேடிக்கையான இயல்பு உண்டு. பந்தல் கால்களைப் பார்த்தால் அதை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மணிக்கணக்காகச் சுற்றிச் சுற்றி வருவார்கள்... அப்படி குழந்தைகள் ஆளுக்கொரு பந்தல் காலைப் பிடித்துக் கொண்டு சுற்றும் போது ஒரு சிறுவனுக்கு மட்டும் பந்தல் கால் கிடைக்கவில்லை. அவன் சுற்றுவதற்கு பந்தல் கால் தர எவரும் சம்மதிக்கவில்லை.

" போடா.. பந்தல் கால் இல்லாட்டி என்ன காலைப்பிடிக்காமலேயே சுற்றுவேன்" என்று கரகர என்று சுற்றினான் சிறுவன். அப்படிச் சுற்றினால் என்ன நடக்கும்?

ஐந்து நிமிடங்களில் மயங்கி விழுந்தான். இதுதான் உண்மை. பற்றுவதற்கு ஒரு கால் கிடைத்தால் எவ்வளவு சுற்றினாலும் எத்தனை ஆடினாலும் மயக்கம் வராது. பந்தல் காலைப் பிடிக்காமல் சுற்றினால் மயக்கம் வருகிறது.

பந்தல் கால் மாதிரி பகவான் கால். அந்தக் காலைப் பற்றிக் கொண்டு உலகத்தில் என்ன சுற்றினாலும் என்ன ஆடினாலும் உலக விடயத்தில் மயக்கம் வருவதே இல்லை. ஆட்டமாய் ஆடுகிற நபரை "தலைகால் புரியாமல் ஆடாதே" என்று எச்சரிப்போம். இறைவனே தலை. பற்ற வேண்டியது அவன் கால். தலைகால் புரிந்து ஆடுகிற ஆட்டத்தில் ஆபத்து இல்லை. ஆனந்தம் மட்டும் தான் இருக்கிறது. "எந்தத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப்பட்டாலும் முத்தர் மனமிருக்க மோனத்தே" என்று பட்டினத்தாரும் இதையே பாடியுள்ளார்.



வடக்கே இருந்த கபீருக்கும் தெற்கே இருந்த பட்டினத்தாருக்கும் அனுபவம் ஒன்றுதான். அரசியலில் தான் வடக்கும் தெற்கும் பகையாக இருக்கும். ஆன்மிகத்தில் அப்படி இருக்க முடியாது. திசை தெரியாத ஜென்மங்களுக்கு என்றைக்கு இது புரியப் போகிறது.

சுகி.சிவம்

# திசை திரும்பிய பெருமையுடைய கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர்



தென்னவன்

ஆலயமொன்றில்வைத்து வணங்கிய விநாயகர் விக்கிரகம் ஆலய மகாகும்பாபிஷேகத்தின் போது புதிய விக்கிரகம் வைப்பதற்காக அகற்றப்பட்டு கேணியொன்றில் இடப்பட்டது. பல வருடங்களின் பின் மீட்கப்பட்டு புதிய இடத்தில் வைக்கப்பட்டு வழிபட்டதில் பல அற்புதங்களைக் காட்டி இன்று பல வசதிகளுடன் செயற்பட்டு வரும் சாவகச்சேரி கல்வயல்புலுட்டையன் பிள்ளையார் கோயில் என அழைக்கப்படும் கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

கல்வயல் கிராம மக்களில் பெரும்பாலானோர் சைவர்களாக இருந்தால் முன்னைய காலங்களில் இந்திய திருத்தல யாத்திரைகளை அடிக்கடி மேற்கொண்டு வந்தனர். அந்த வேளையில் தமிழ்நாடு வேதாரணியத்தில் உள்ள விநாயகர் ஆலயத்திலிருந்து விநாயகர் விக்கிரகங்களைப் பெற்று வந்து ஸ்தாபிக்கப்பட்டது வேதனப் பிள்ளையார் ஆலயமாகும். அதே போன்று பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயமும் சித்தன் மாவடிப் பிள்ளையார் ஆலயமும் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாட்டுக்குரியதாயின.

பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மூல மூர்த்தியான விநாயகர் விக்கிரகம் நீண்ட காலம் மக்களால் வழிபடப்பட்டு வந்தது. இந்த ஆலயத்தில் இடம்பெற்ற மகா கும்பாபிஷேகத்தின் போது புதிய விநாயகர் விக்கிரகம் வைப்பதற்காக காலம் காலமாக வழிபட்டு வந்த விநாயகர் விக்கிரகம் அகற்றப்பட்டு அயற் காணியொன்றில் இருந்த கேணியொன்றில் வைக்கப்பட்டது.

பல வருடங்களின் பின்னர் கல்வயலில் வாழ்ந்த பிரசித்தி பெற்ற தர்மவானும் தனவந்தருமான காசிநாதர் என்ற அடியார் விநாயகரின் வேண்டுகோளுக்கிணங்க கேணியில் இடப்பட்ட விநாயகர் விக்கிரத்தினை எடுத்து வந்து தமது புலுட்டையன் வளவு என்னும் காணியில் விக்கிரகத்தை கிழக்கு முகமாக பிரதிட்டை செய்து சிறிய திருக்கோயிலை அமைத்தார்.

> **பல வருடங்களின் பின்னர் கல்வயலில் வாழ்ந்த பிரசித்தி பெற்ற தர்மவானும் தன வந்தருமான காசிநாதர் என்ற அடியார் விநாயகரின் வேண்டு கோளுக்கிணங்க கேணியில் இடப்பட்ட விநாயகர் விக்கிரத்தினை எடுத்து வந்த தமது புலுட்டையன் வளவு என்னும் காணியில் விக்கிரகத்தை கிழக்கு முகதாக பிரதிஸ்டை செய்து சிறய திருக்கோயிலை அமைத்தார்.**

மறுநாள் சென்று பார்த்த போது விநாயகர் விக்கிரகம் மேற்கு திசை நோக்கிப் பார்த்த வண்ணம் இருந்தது. சிறுபிள்ளைகள் யாரோ விநாயகரை திருப்பி வைத்து விட்டதாக நினைத்து சிறுபிள்ளைகளின் செயலை மன்னிக்குமாறு வேண்டி மீண்டும் கிழக்குப் புறமாக வைத்து வழிப்பட்டார். மறுநாள் சென்று பார்த்த போதும் மேற்குத் திசையை நோக்கி விக்கிரகம் திரும்பியிருந்தமையைக் கண்டு விநாயகரின் விருப்பம் அது தான் என உணர்ந்து நீற்றுச் சுண்ணாம்பும் கற்களும் கொண்டு நான்கு மண்டபங்களை அமைத்து மேற்கு வாசல் நோக்கிய ஆலயமாக அமைத்தார்.

இந்தக் கோயிலுக்கு நித்திய நைமித்திய கருமங்களுக்காக இயக்கச்சியில் உள்ள பேரவில் விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான சைவக்குடும்பத்தை அழைத்து வந்து கோயிலுக்கு சொந்தமான காணியில் குடியமர்த்தி அவர்களுக்குத் தேவையான உதவிகளை காசிநாதர் வழங்கினார். ஆலய நித்திய, நைமித்திய கருமங்களை மேற்கொண்ட குடும்பம் ஐந்து தலைமுறைகளாக இந்த ஆலயத்தில் விநாயகருக்குப் பணியாற்றி வந்தது.

ஆலயத்தின் காசித்தம்பி என்பவர் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டு அவரைத் தொடர்ந்து அவரது சகோதரரான கதிரவேலு சின்னத்தம்பியும் அவரின் பின்னர் அவரது ஏக புதல்வரான சி.விவேகானந்தனும் இயங்கி வந்தனர். இவருக்கு உதவியாக சின்னத்தம்பியின் சகோதரர் கதிர்காமர், கவிஞர் முருகையர் ஆகியோர் செயற்பட்டனர். இந்தக் காலத்தில் அபிஷேகங்கள் மற்றும் விசேட தினங்களில் மட்டும் பூசை வழிபாடுகள் பிரம்மஸ்ரீ பரமசாமிக் குருக்களால் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆலயத்தின் பரிபாலகர்கள் பூஜை வழிபாடுகள் செய்[illegible] பின்னர் பிராமணக் குருமார்களால் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. [illegible] சி.விவேகானந்தன் தமது குடும்பத்துடன் வெளிநாடு செல்ல வேண்டியிருந்தமையால் திருக்கணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்களிடம் நித்திய, நைமித்திய பொறுப்புக்களை ஒப்படைத்தார். இவர் இந்தப் பணிகளை மட்டுவில் கிருஷ்ணசாமி குருக்களின் மகன்களான கி.சோமசுந்தரக் குருக்கள், சதாசிவசர்மா ஆகியோரிடம் ஒப்படைத்தார்.

இந்த ஆலயம் ஏறத்தாழ 1935 ஆம் ஆண்டுக்கும் பின்னர் க.சங்கரப்பிள்ளை உபாத்தியாயரின் ஒத்துழைப்புடன் முகாமையாளர் காசித்தம்பி ஆலயத்திற்குச் சுற்றுமதில் அமைத்துள்ளார். 1939 ஆம் ஆண்டு சி.சின்னையாவினால் மணிக்கோபுரமும், ஆ.கணபதிப்பிள்ளையினால் பிரதான நுழைவாயிலும் கட்டப்பட்டன. 1985 ஆம் ஆண்டு துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்புக்குட்டியினால் வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நட்டப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பாலஸ்தாபனஞ்செய்யப்பட்டு போர் நெருக்கடியினால் 8 ஆண்டுகள் வேலைகள் நடைபெறாமல் இருந்தன. பின்னர் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பூர்வாங்கக் கிரியைகளின் பின்னர் 1997 ஆம் ஆண்டு ஆவணி 6 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் அவரது புதல்வர்களும் சிவஸ்ரீ இ.சோமசுந்தரக் குருக்கள், சமஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ சி.சதாசிவ சர்மா ஆகியோரால் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது. தற்போது ஆலய நித்திய, நைமித்திய கிரியைகளை சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

2000 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற கொடிய போரினால் ஆலயக் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. க.சங்கரப்பிள்ளை மேலும் சுற்றுப் பிரகாரம், வாயிற்கோபுரத் திருப்பணிகளை நிறைவு செய்தார். அதன் பின் 2003 ஆம் ஆண்டு ஆனி உத்தர நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் சி.சோமசுந்தரக் குருக்கள் ஆகியோரால் நடத்தப்பட்டது.

அந்த வருடம் ஆடிப்பிறப்பு தினத்தன்று முதலாவது பெருந்திருவிழாவும் ஆரம்பமானது. தற்போது ஆலயத்தில் இரண்டு காலப் பூசைகள் நடைபெற்று வருவதுடன் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகள் நடத்தப்படுகின்றன. மாதத்தில் வரும் சதுர்த்தி மற்றும் கந்தசஷ்டி, பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை போன்றவையும் இடம் பெற்று வருகின்றன.

ஆலயப்பரிபாலன ஸ்தாபகர் பெரியார் காசிநாதர் பரம்பரையினால் நடத்தப்பட்டு வருகின்றன. அவரைத் தொடர்ந்து இவரது சகோதரன் கதி[illegible]வேலுவும் அதனைத் தொடர்ந்து அவரது மூத்த மக[illegible] சின்னத்தம்பியும் பின்னர் அவரது மகனான விவே[illegible]கானந்தனும் நடத்தி வருகின்றனர். சி.விவேகாந்தன் [illegible]வளிநாட்டில் வசித்தாலும் காலத்துக்குக் காலம் வ[illegible]து ஆலயப் பணிகளை கவனிப்பதுடன் அதன் தே[illegible]வைகளையும் நிறைவேற்றி வருகின்றார்.

ஆலயத்துக்கென காணி கொள்வனவு செய்து திருமண மண்டபம் அமைக்கப்பட்டு கடந்த 12.07.2010 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பெருந்திருவிழா ஆரம்பிக்கப்பட்ட போது கட்டுத் தேரில் எழுந்தருளிய விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் பவனி வரும் காட்சியைக் காண வேண்டுமென தர்மபரிபாலகரின் மனதில் தோன்றிய எண்ணம் இந்த வருடம் ஈடேறவுள்ளது. பாரம்பரிய கலை அமைப்புடன் நவீன வடிவங்களுடன் கூடிய சித்திரத்தேர் மட்டுவில் சிற்பக் கலாபதி கி.கலாமோகன் குழுவினரின் கைவண்ணத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சபை கன்னி அமர்வு இன்று

## பாதுகாப்பு வழங்காத போதும் கூட்டமைப்பு பங்குபற்ற முடிவு

திருகோணமலை,ஒக்.1

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்ற போதிலும், தெரிவான மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் திருகோணமலைக்குச் செல்லவுள்ளனர். இன்று நடைபெறும் அமர்வு தொடர்பாக சபைச் செயலாளரினால் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் உரை, சபைத் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் தெரிவு ஆகியன இன்றைய அமர்வின் நிகழ்ச்சி நிரல் என்று தெரிவிக்கப்படுகின்றது.

**மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொலிஸ் பாதுகாப்பு தேர்தல் முடிந்து மூன்று வாரங்கள் கடந்தும் இதுவரை வழங்கப்படவில்லை.**

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்ததாவது:-

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொலிஸ் பாதுகாப்பு தேர்தல் முடிந்து மூன்று வாரங்கள் கடந்தும் இதுவரை வழங்கப்படவில்லை.

நாங்கள் பொலிஸ் பாதுகாப்பு இன்றியே இன்று நடைபெறும் மாகாண சபை அமர்வுக்குச் செல்லவுள்ளளோம்.

எமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய நிலையில், பாதுகாப்பின் நிமித்தம் வேறு இடங்களில் சில நாள்கள் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியும் எமது பாதுகாப்புக் குறித்து உரிய தரப்பு கவனம் செலுத்துவதாக இல்லை.

நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பதனாலே இந்தப் பாகுபாடு காட்டப்படுகின்றது.

இதனை எமது கட்சித் தலைவர்கள் பொலிஸ் உயர் மட்டத்தின் கவனத்துக்கு அறிவித்தும் கூட இதுவரை பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது குறித்து சாதகமான முடிவுகள் எதுவும் கிடைக்கவில்லை- என்றார். (ச)

# மாற்றுக் காணி வழங்காமல் காணியை சுவீகரிக்க வேண்டாம்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

அம்பாறை,ஒக்.1

அம்பாறை மாவட்டத்தில், ஒலுவில் பிரதேசத்திலுள்ள கேசன்கேணி கிராம மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்காமல் அவர்களின் காணிகளை இராணுவ முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நடவடிக்கையை நிறுத்துமாறு உயர் நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

கேசன்கேணி கிராமத்தைச் சேர்ந்த மக்களில் சிலர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தமது குடியிருப்புப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் அந்தப் பிரதேசத்தில் இராணுவ முகாம் அமைக்க வேண்டியிருப்பதால் அங்கிருந்து தம்மை வெளியேறுமாறு உத்தரவிட்டதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

இந்த அறிவித்தலை அடுத்து பல குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும், இன்னும் 50 குடும்பங்கள் வரை தமது இருப்பிடங்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கேசன்கேணி மக்கள் வழக்கில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இராணுவமுகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்குப் பதிலாக மாற்றிடங்களை மக்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளதால் அவர்களுக்கு அந்தத் தொழிலை மேற்கொள்ளக்கூடிய விதத்திலான மாற்றுக்காணிகளே வழங்கப்பட வேண்டும் என்று மனுதாரர்கள் சார்பான சட்டத்தரணி நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டி வாதாடினார்.

எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்த உயர்நீதிமன்றம், மாற்றுக் காணிகளை வழங்குவது தொடர்பான அரசின் நிலைப்பாட்டை அன்றைய தினம் அறிவிக்கவேண்டும் என்று சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. (ச)

## தேசத்துக்கு மகுடம்; அட்டாளைச்சேனையில் தெளிவூட்டும் கருத்தரங்கு இன்று

மட்டக்களப்பு,ஒக்.1

2013 தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு அமைவாக அட்டாளைச் சேனை பிரதேச செயலகப் பிரிவில் நடமாடும் சேவையை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என்று பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.எம். அஸ்லம் தெரிவித்தார்.

பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் த சில்வா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, அபிவிருத்தி வாரம் மற்றும் நடமாடும் சேவை தொடர்பாக அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் அடிப்படைக் கலந்துரையாடலை நிகழ்த்தவுள்ளார். (ச)



கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினர்களாகத் தெரிவான எ.எம்.ஜெமீல் மற்றும் ஆர்.எம்.அன்வர் ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். மத்தியில் கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்கிரம காணப்படுகின்றார்.

## முஸ்லிம்களின் தொகை அதிகரிப்பு: திருமலையில் கணக்கெடுப்பு மீளாய்வு

திருகோணமலை,செப்.1

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் குடியிருப்புகள் தொடர்பான கணக்கெடுப்பின்போது திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளை மீளாய்வு செய்ய புள்ளிவிவரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் தொகையானது 29 வீதத்தில் இருந்து 33 வீதமாக அதிகரித்துள்ளதாக கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மீளாய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மீளாய்வுப் பணிக்கு அதிகாரிகள் குறித்த மாவட்டத்துக்குச் சென்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் மக்கள் தொகை தொடர்பான சரியான புள்ளி விவரங்கள் ஆய்வு செய்யப்பட்ட பின்னர், 2011 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை தொடர்பான முழுமையான விவரம் வெளியிடப்படும் என்று குறித்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## மட்டு.சிறையில் இரத்ததானம்



மட்டக்களப்பு,ஒக்.1

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்குவதற்காக மட்டக்களப்பு சிறைச்சாலையின் உத்தியோகத்தர்களின் இரத்ததான நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு சிறைச்சாலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் ஏ.கித்சிறி பண்டார தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் எம்.கஜநாயக்க, உதவி ஜெயிலர் இ.மோகன்ராஜா, சிரேஷ்ட நலன்புரி உத்தியோகத்தர் ஸ்ரீனிவாசன் மற்றும் நலன்புரி உத்தியோகத்தர்களான எம்.முபாறக், ஏ.சபீனா, விமலச்சந்திரன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர் ஜனாபா முஸம்மில் உட் [illegible] கொண்டனர். (ச)

## பொத்துவில் பிரதேச சபைக்கு 3 மாடிக் கட்டடம்

அம்பாறை,ஒக்.1

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச சபைக்கு புதிய நிரந்தர நிர்வாகக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

பொத்துவில் பிரதேச சபைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாத பிரச்சினை நீண்டகாலமாக இருந்துவந்தது. இந்த நிலையில், பொத்துவில் பிரதேசசபையின் தவிசாளர் எஸ்.எம்.வாசீத்தின் வேண்டுகோளுக்கமைய இந்தக் கட்டடப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. (ச)

# களங்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார் மஜீத்

## தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பில்லை என்கிறார் அஸாம்

அம்பாறை,ஒக்.1

எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே அப்துல் மஜீத், தனது வீட்டின் மீதான குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் என்னை தொடர்புபடுத்தி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் சாய்ந்தமருது இளைஞர் காங்கிரஸிஸ் அமைப்பாளரான அஸாம் மௌலவி தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருதில் முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் இருவரின் உறுப்பினர்களின் வீடுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கு மு.கா.மாகாண சபை உறுப்பினர் [illegible] ஜெமீலின் ஆதரவாளர்களே காரணம் என்று குற்றம் சாட்டியிருந்த முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.எல்.அப்துல் மஜீட், தனது மகனுக்கு சாய்ந்தமருது இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளரான அஸாம் என்பவர் தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இது குறித்து சாய்ந்தமருது இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளரான அஸாம் மௌலவி ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தச் சம்பவத்துக்கும் எனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. சம்பவ தினம் நான் கொழும்பில் இருந்தேன். அப்துல் மஜீத்துடைய மகனுடன் நான் தொலைபேசியில் பேசவும் இல்லை. அவரது தொலைபேசி இலக்கமும் எனக்குத் தெரியாது.

தற்போது மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட ஜெமீலுக்கு ஆதரவாக வேலை செய்ததன் காரணமாக மஜீத் இந்தக் குற்றச்சாட்டை என் மீது சாட்டியுள்ளார்.

இச் சந்தர்ப்பத்தில் அவரது வீட்டை அவரே தாக்கிவிட்டு, இதன் மூலம் தலைவர் ஹக்கீமின் அனுதாபத்தை பெற முயற்சிக்கிறார். இதற்காக எங்களுடைய பெயரைப் பயன்படுத்துவது கீழ்த்தரமான செயலாகும். அதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மஜீத்தின் மகனுக்கு நான் தொலைபேசியில் மிரட்டியதாக சொல்லும் குற்றச்சாட்டை முடிந்தால் சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில் வைத்து சத்தியம் செய்து நிரூபிக்க முடியுமா? என்று மஜீத்திடம் நான் சவால் விடுக்கின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிலரது விமர்சனத்தால் மன வருத்தம் ஏற்படலாம். லட்சியங்களை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். கூடுதல் உழைப்பால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பணியாளர் நிர்வாகத்தின் எண்ணங்களைப் புரிந்து செயற்பட வேண்டும்.

**இடபம்:** உங்களின் செயல் வெற்றி பெற சான்றோரின் ஆசி கிடைக்கும். மனதில் புதிய நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரம் வளர அக்கறையுடன் பணிபுரிவீர்கள். பணவரவு திருப்திகரமாக கிடைக்கும்.

**மிதுனம்:** சுயதிறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். கடினம் என நினைத்து ஒதுக்கி வைத்த பணி இனிதாக நிறைவேறும். தொழில் வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். உத்தியோகத்தர் பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**கடகம்:** உங்கள் பேச்சு, செயலில் கூடுதல் நிதானம் பின்பற்றுவது அவசியம். சிலரது நடவடிக்கை உங்களை கவலையடையச் செய்யலாம். தொழிலில் பணிச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும். விலை குறைந்த பொருளை வீண் கௌரவத்தினால் அதிக விலைக்கு வாங்கும் நிலை ஏற்படலாம்.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை சிலர் அவமரியாதை செய்யும் விதத்தில் பேசுவர். இருப்பினும், நியாய தர்மம் அதிகளவில் பின்பற்றுவீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தி உதவும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** உங்கள் வாழ்வில் கூடுதல் வளம் பெற அனுகூலம் உருவாகும். உறவினர் நல்லமதிப்பு மரியாதை தருவர். தொழில் வளர்ச்சி இலக்கு சிறப்பாக நிறைவேறும். தேவையான பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும்.

**நாளை**

புரட்டாதி - 16 செவ்வாய்க்கிழமை 02.10.2012
திதி: துதியை மு.ப. 11.42 வரை
நட்சத்திரம்: அச்சுவினி மு.இ.08.15 வரை அமிர்தசித்தம்
சுபநேரம்: 10.32- 12.02 வரை
ராகுகாலம்: 03.02- 04.32 வரை

**துலாம்:** உங்கள் எதிர்கால நலன் பற்றிய அக்கறை வளரும். புதிய யுக்திகளைப் பயன்படுத்தி நன்மை பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி இருக்கும். உறவினர்களிடம் இருந்த மனக்கிலேசம் சரியாகும்.

**விருச்சிகம்:** நிதானம், புத்திசாலித்தனம் நிறைந்த செயல்களால் மட்டுமே எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். குறுக்கிடும் புதிய பணியை ஒதுக்கி வைத்து தொழில் வளர தேவையான பணிபுரிவீர்கள். பிறர் பொருளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க கூடாது.

**தனுசு:** உங்கள் செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்திற்கு குறையேதும் வராது. சராசரி பணவரவை சிக்கனமாகப் பயன்படுத்துவீர்கள். அறிமுகம் இல்லாதவர் தரும் உணவுப் பண்டங்களை உண்ணக்கூடாது.

**மகரம்:** நீங்கள் இளமைக்கால நினைவுகளில் மகிழ்வீர்கள். புதியவர்களின் நட்புக் கிடைத்து மனதில் நம்பிக்கை வளரும். சிறப்பான செயலால் தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். அதிர்ஷ்டவசமாக கூடுதல் சொத்து சேர்க்கை உண்டாகும்.

**கும்பம்:** சிலரது பேச்சு உங்களுக்கு தர்மசங்கட சூழ்நிலையை ஏற்படுத்தலாம். சொந்தப் பணியில் தேவையான கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். முக்கிய தேவைக்கு சிறியளவில் பணக்கடன் பெறுவீர்கள்.

**மீனம்:** உங்கள் எண்ணத்திலும் செயலிலும் உறுதி வளரும். புதிய நடைமுறையைப் பின்பற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த தடை விலகும். உபரி பணவருமானம் உண்டு. வழக்கு விவகாரத்தில் சாதக தீர்வு கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 8 | | 6 | 7 | 4 | 1 |
| | 8 | 1 | | | | | 9 | |
| 5 | | | 1 | | | 2 | | |
| 8 | | | 4 | 2 | | 1 | | 9 |
| | | | | | | | | |
| 4 | | 5 | | 3 | 1 | | | 2 |
| | | 4 | | | 2 | | | 7 |
| | 1 | | | | | 6 | 2 | |
| 9 | 6 | 2 | 3 | | 7 | | 5 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 6 | 5 | 9 | 1 | 4 | 7 | 2 |
| 1 | 4 | 7 | 3 | 8 | 2 | 9 | 6 | 5 |
| 2 | 5 | 9 | 4 | 7 | 6 | 1 | 8 | 3 |
| 3 | 8 | 5 | 2 | 4 | 7 | 6 | 9 | 1 |
| 9 | 1 | 4 | 8 | 6 | 3 | 5 | 2 | 7 |
| 7 | 6 | 2 | 1 | 5 | 9 | 3 | 4 | 8 |
| 4 | 9 | 1 | 7 | 2 | 5 | 8 | 3 | 6 |
| 6 | 7 | 3 | 9 | 1 | 8 | 2 | 5 | 4 |
| 5 | 2 | 8 | 6 | 3 | 4 | 7 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## விஜயகுமார் கின்சிகா

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற கிளி/ அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவி கின்சிகா அவர்களை மேன் மேலும் பல பட்டங்களையும் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள்,
கிளி/அ.ம.வி. கிளிநொச்சி.

(20902)(6.7.8)


## அறிவித்தல்
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
## ஆதன பெயர் மாற்றம்

வட்டாரம்: 08
யாழ். மானிப்பாய் வீதி,
ஆதன இல. 02 A

வட்டாரம் 08, முருகமூர்த்தி வீதி, ஆதன இலக்கம் 02 A இல் அமைந்துள்ள (உறுதிப்படி: வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று, ஆனைக்கோட்டை இறை: "மந்திப் புலம்" எனும் பெயருள்ள, உத்தரவு பெற்ற நில அளவையாளர் என். இராமச்சந்திரன் அவர்களால் 3816 ஆம் இலக்கத்தில், 2010.09.10 ஆம் திகதியில் அளந்து விவரித்த படத்தில் 1 இல் இருந்து 6 வரையான துண்டுகளாகச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 9 குளி 12.00 இதில் 4 ஆம் துண்டாகச் சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு (1) ஒன்று குளி (16.85) பதினாறு தசம் எட்டு ஐந்து விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம்) ஆதனமானது யாழ்ப்பாணம் தொல்புரம் மேற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த இராசையா ஜெயகோபால் என்பவரால், அறுதியாக விற்கப்பட்டு, நவாலி கிழக்கு, சின்னப்பாய் வீதி, மானிப்பாய், சின்னத்துரை மோகன்ராஜ்சும் பெண் இராஜேஸ்வரியும் ஆகிய இவர்களால் குறித்த ஆதனம், பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 12494 ஆம் இலக்கம், 22.09.2010 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம், குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி, எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால், அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து, இவ்வாதனம் சின்னத்துரை மோகன்ராஜ்சும் பெண் இராஜேஸ்வரியும் ஆகியவர்களின் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(23457)(45-6-7)


# ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
Media Resources & Training centre (MRTC)

# இதழியல் டிப்ளோமா
(முழுநேரம் - (இரண்டு ஆண்டுகள்)
கல்வியாண்டு - 2013/2014
Diploma in Journalism - 2013/2014

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான, 2013/2014 ஆண்டுக்கான, புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

1. அச்சு ஊடகம் (Print Media)
2. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
3. இணைய ஊடகம் (New Media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**

1. செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
2. றேடியோ மற்றும் ரி.வி நிகழ்ச்சிகள் தயாரிப்பு
3. ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
4. சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
5. ஆவணப்பட தயாரிப்பு
6. சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான பயிற்சிகள்



**அனுமதிக்கான தெரிவுமுறை**

1. எழுத்துத் தேர்வு
(எழுத்தாற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு)
2. நேர்முகத் தேர்வு

**கற்கைக் காலம்** – 2 ஆண்டுகள் (முழுநேரம்)

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி–30.10.2012**

**கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூ. | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. | 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூ. | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூ. | 1000.00 |
| மொத்தம் | ரூ. | 22,500.00 |

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல.84 ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.100/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ மற்றும் பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட்ட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்
0212229873

பதிவாளர்

(சி/3709)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைநகரில் விஷ்ணு பகவான் தேர்ப் பவனி...



கொழும்பு, தெஹிவளை ஸ்ரீ நெடுமால் வெங்கடேஸ்வரர் பெருமான் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, சுவாமி பக்தர்கள் புடைசூழ வெள்ளவத்தை, காலி வீதி வழியாக வலம் வருகிறார்.

# தமிழர் தெரிவு இல்லாமைக்கு சம்பந்தனே முழுப் பொறுப்பு

### அமைச்சர் பஸில் காட்டம்

கொழும்பு,ஒக்.1

கிழக்கு மாகாண சபையில் தமிழர் ஒருவர் அமைச்சராக நியமனம் பெறாமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே காரணம். அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்தான் ஏற்கவேண்டும். கிழக்குத் தமிழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது அதனால்தான் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அமைச்சரவையில் தமிழர் ஒருவர் கூட இல்லாதமை தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்துக்காகத் தமிழர் ஒருவரையே முதலமைச்சராக நியமித்தவர்கள் நாங்கள். இப்போது தமிழர் ஒருவர் முதலமைச்சராக நியமிக்கப்படாமைக்கு நாங்கள் காரணமல்ல. தேர்தல் காலங்களில் முழுக்க முழுக்க இனவாதம் பேசி செயற்பட்டார் சம்பந்தன். தமிழர் ஒருவர்கூட ஆளுங் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டுவிடக்கூடாதென்று அவர் கூறினார்.

இப்போது தமிழர்களுக்குச் சேவை செய்யப்போவது யார்? தேர்தல் காலத்தில் போன்று நேரடியாகச் சென்று மக்களின் குறைகளைக் கேட்பாரா அவர். தமிழ் அமைச்சர் ஒருவர் இல்லாவிட்டாலும், கிழக்கில் தமிழர்களின் எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராகவே இருக்கிறார். நாங்கள் சம்பந்தன் போல் இனவாதம் பேசி மக்களைப் பிரித்துப் பார்க்க விரும்பவில்லை- என்றார். (ச-சி)

### விஞ்ஞான பீடத்தின் கல்வி நடவடிக்கை நாளை ஆரம்பம்

கொழும்பு,ஒக்.1

கொழும்பு பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தின் இறுதி ஆண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நாளை 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாணவர்கள் விடுத்த வேண்டுகோளை கவனத்தில்கொண்டு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஷனிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.

விஞ்ஞான பீட விரிவுரையாளர்களில் அதிகமானவர்கள் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்கமைய குறித்த விரிவுரையாளர்களுக்குச் சம்பளத்தை வழங்க தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (ச)

# 21 ஆயிரத்தால் உயர்ந்தது நாட்டின் வாழ்க்கைச் செலவு

### சம்பள உயர்வு இன்றேல் போராட்டம் தவிர்க்க முடியாதது என்கிறார் லால்காந்த

கொழும்பு,ஒக்.1

இலங்கையில் வாழ்க்கைச் செலவு 21ஆயிரத்து 52 ரூபாவால் அதிகரித்துள்ளது.

2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழிற் சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி லால்காந்த தெரிவித்தார்.

நாட்டில் 4 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கான வாழ்க்கைச் செலவு 21 ஆயிரத்தால் உயர்ந்துள்ள



போது, 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை அரச ஊழியர்களுக்கு 7,609 ரூபா 50 சத சம்பள அதிகரிப்பே வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் அரச ஊழியர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்க அரசு முன்வராவிட்டால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தவிர்க்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

> சம்பளத்தை அதிகரிக்காவிட்டால் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபடுவர்.

# கிழக்கு அமைச்சரவையில் தமிழர் எவரும் இல்லை

### அரசே காரணம் என்கிறார் முன்னாள் நீதியரசர்

கொழும்பு,ஒக்.1

தமிழர்களுக்குத் தீர்வாகத்தான் மாகாணசபை முறைமை ஏற்படுத்தப்பட்டது. இப்போது அந்த மாகாணசபை நிர்வாகத்தில் ஒரு தமிழர் கூட அமைச்சராக இல்லை. இதனை என்னவென்று சொல்வது? என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.



கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவையில் தமிழர் ஒருவர் இல்லாதது குறித்துக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபை முறையானது தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தரும் முயற்சிகளின்போது முக்கியமான ஓர் இடத்தை வகிக்கின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தமும் இதனடிப்படையில் தான் செய்யப்பட்டது. ஆனால், இப்போதுள்ள நிலைமையைப் பார்க்கும்போது எல்லாம் தலைகீழாகவே இருக்கிறது.

மாகாண சபைகளுக்கான இந்த அதிகாரப்பகிர்வை முஸ்லிம் மக்களோ, முஸ்லிம் அரசியல் தலைவர்களோ ஒருபோதும் கேட்கவில்லை. தமிழர்களுக்குரிய வகையில்தான் இது ஏற்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு பின்னணியில் இந்த கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவையில் தமிழர் ஒருவர் இல்லாதமைக்கான பொறுப்பை அரசு ஏற்க வேண்டும். இதற்கு அரசுதான் பதில்கூற வேண்டும் - என்றார் . (ச-சி)

> கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவையில் தமிழர் ஒருவர் இல்லாதமைக்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டும்.

# அரசு— மு.காங். புரிந்துணர்வு மூலம் முதலமைச்சர் பதவியைப் பங்கிடலாம்

### அரசியலமைப்பில் இடமில்லைத்தான் என்கிறார் கெஹலிய

மட்டக்களப்பு,ஒக்.1

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தலா இரண்டரை வருடங்களுக்கு பங்கு போட்டுக்கொள்ள அரசியலமைப்பில் இடமில்லாத போதும் இந்த இரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக இது சாத்தியமாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஐந்து வருடகால முதலமைச்சர் பதவியை இரண்டரை வருடங்களுக்கு இருவர் பகிர்ந்து கொள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் இடமில்லை. ஆனால் முதலமைச்சராக நியமிக்கப்பட்ட ஒருவரை இடையில் பதவியில் இருந்து நீக்குவதற்கு சட்டத்தில் இடமுண்டு என்று அவர் கூறினார்.



இரு கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டால் அதன் மூலம் முதலமைச்சர் பதவியை பகிர்ந்து கொள்ளலாம். அதில் பிரச்சினை ஒன்றும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

> இரு கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டால் அதன் மூலம் முதலமைச்சர் பதவியை பகிர்ந்து கொள்ளலாம்

### 2015 இல் மலேரியா நோய் முற்றாக ஒழிப்பு



கொழும்பு,ஒக்.1

நாட்டில் இதுவரையில் மலேரியா நோய்த் தாக்கம் நூற்றுக்கு 95 வீதமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்து மலேரியா நோய் முழுமையாக ஒழிக்கப்பட்டு விடும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பயணிப்பவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் மலேரியா நோய்த் தாக்கத்துக்கு உள்ளான 20 நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 50 பில்லியன் ரூபா நட்டம்

கொழும்பு,ஒக்.1

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இந்த ஆண்டின் 7 மாத காலப் பகுதியில் 50 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் கடந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்துக்கு 90 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த நட்டங்கள், மின்சார உற்பத்தி, குறைந்த விலைக்கு எரிபொருளை விற்பனை செய்தல் போன்றவற்றால் ஏற்பட்டது என்று கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலை தொடருமானால் அரசு பெற்றோலியத்துறையில் நட்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பில் ஏற்பட்டுள்ள சிரமங்களும் இந்த நட்டங்களுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் நட்டங்களை சமாளிப்பதற்காக எரிபொருள் விலையேற்றத்தை தவிர்க்க முடியாதிருக்கும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# கிராண்ட்பாஸில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு,கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் இனங்காண முடியாதவாறு அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## வயிரவநாதர் சிவபாலன்

நேற்று (30.09.2012) ஞாயிற்றுக்கிழமை பக்கம் 9 இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் 31 ஆம் நாள் நினைவஞ்சலி தவறுதலாக 31 ஆம் ஆண்டு என பிரசுரமாகியுள்ளது அதனைத் திருத்தி வாசிக்கவும்.

(c/3643)(6.7.8)

# அறிவித்தல்

## V.S.P.

மூலப் பொருளின் விலை அதிகரிப்பால் V.S.P. நல்லெண்ணை இன்று (01.10.2012) திங்கட்கிழமை தொடக்கம் ஆகக் கூடிய சில்லறை விலை 450/= ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்,

பரிமளா ஸ்ரோர்
26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. 021 222 9165


யாழ் மாவட்டத்தில் தலை சிறந்த ஆங்கிலக் கல்லூரி

FEEL THE BRILLIANT FUTURE

E-CITY

COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

தற்போது புதிய அம்சங்களுடன் 6 மாத டிப்ளோமா ஆங்கில பாடநெறி

SPOKEN ENGLISH COURSE

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச்சந்தி அருகில்,யாழ்.
"குருகுலம்" 0774924166 /0777364362

New Batch: 06.10.2012 @ 9.00 A.M

சனி/ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 10.00 மணி வரை இடம்பெறும்

அர்ப்பணிப்பு தியாகம் உன்னதசேவை நவீனம்


# 9 ஆம் ஆண்டு நினைவலைகள்





பிறப்பு:
1974 . 09. 06

இறப்பு:
2003 . 10. 01

## கிறிஸ்ரியன் ஸ்ரனிஸ் ஜெயகானந்தன்

காலன் உன்னைக் கவர்ந்து சென்று
ஆண்டுகள் ஒன்பது விரைந்தோடி தீர்ந்தனவோ
அழுத விழிகளில் நித்தமும் உன் நினைவலைகள்தான்
நீ பதித்த கால் தடங்கள் ஜெயகானம் இசைக்கின்றன
என்றும் நீர் எமக்கு ஒளிவிளக்காய் வாருமைய்யா
இரக்கமுள்ள இறை தந்தையே நீர் உம்மிடம் அழைத்துக்கொண்ட
அடியானுக்கு உமது பிரசன்னத்தை கட்டளையிட்டருளும்.

985/13, மலரகம்
வளன்புரம், கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

(23193)(6.7.8)

இவரின் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தங்கை.

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு
18
08
1933



இறப்பு
04
09
2012

கடந்த 04.09.2012 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## *அமரர் சின்னையா கந்தையா (P.M)*

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 02.10.2012 செவ்வாய்க்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கேணியிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 04.10.2012 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

இல.137, திருநகர்,
கிளிநொச்சி.

(19336)(3.6)

குடும்பத்தினர்.

## நற்பணிமன்றம் அங்குரார்ப்பணம்

அச்சுவேலி,ஒக்.1

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னிய சிங்கத்தின் நினைவான சமூக சமய அரசியல் பணிகளை கோப்பாய்த் தொகுதியில் மேற்கொள்வதற்கு வசதியாக நற்பணிமன்றம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளது.

நற்பணி மன்ற அங்குரார்ப்பண வைபவத்தில் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டோர் பெயர் விவரம் வருமாறு:-

தலைவராக இ.சந்திரனும், உப தலைவராக த.ரவீந்திரனும் செயலாளராக சி.லட்சுமிகாந்தனும் உப செயலாளராக க.தர்மலிங்கமும் பொருளாளராக ஆ.பரஞ்சோதியும் நிர்வாக உறுப்பினர்களாக இ.திருநாவுக்கரசு, க.சந்திரசேகரம், வை.சுப்பிரமணியம், த.திரு நாவுக்கரசு, க.வைரவநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

(எ-11)

## கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

அச்சுவேலி,ஒக்.1

நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கான முதியோர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டமும், நிர்வாக உறுப்பினர் தெரிவும் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில்தலைவராக சுந்தரம் சுப்பிரமணியமும் உப தலைவராக கதிரித்தம்பி காசிநாதரும் செயலாளராக கந்தையா நாகரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(எ-11)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

2012 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளை பெற்ற மாணவர்களையும் அந்தப் பெறுபேறுபெற உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி மகிழ்கின்றோம்.



ப. தவரூபன் – 177
மா.நிலை – 67
வலய நிலை – 01



ஹ. ஜிகாசினி – 151



ர. கிருபாகரன் – 147

100 புள்ளிகளுக்கு மேற்பெற்றோர்.

சி. றானுசா – 137, ச. பிறின்சியன் – 132
ஜெ. மேரிறெபேக்கா – 129, அ. டிலக்ஷன் – 111
கெ. யேசுஎஸ்தர் – 109, ஜெ. செமிதா – 106
சு. விறணிஸ்ரன் – 105, வி. கெவினா – 105

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது பாடசாலைத் தினமாகிய 01.10.2012 இன்று அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

Best Wishes

யா/கரம் பொன் சிறிய புஷ்பபாடசாலைசமூகம்,
கரம்பொன், ஊர்காவற்றுறை.

(சி/8746)(6.7.8)

# மனமுவந்த நன்றிகளும் பாராட்டுக்களும்

கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுபாடசாலை விஸ்தரிப்புக்கான காணியை கோண்டாவில் வாழ் பாடசாலையின் பழைய மாணவி *திருமதி றஞ்சினிதேவி குவேந்திரநாதன்* அவர்கள் அவர்தம் மாமியார் *அமரர் திருமதி இராசையா சரஸ்வதி* அவர்களின் ஞாபகார்த்தமாக இல.21, இராமகிருஷ்ண வீதியில் அமைந்துள்ள 4 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியை மனம் உவந்து பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவர்களது இச் சேவையை பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் பாராட்டுவதுடன் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழையமாணவர் சங்கம்.

(23434)(3.6.7)

# ஆரம்ப பாடசாலைக்கான காணிக்கொள்வனவு

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஆரம்பபிரிவு விஸ்தீரணத்திற்கான காணியை அதிபர், ஆசிரியர்களின் முயற்சியினாலும் வெளிநாட்டு வாழ் பழைய மாணவர்களினாலும் ஊர்மக்களின் பங்களிப்பினாலும் நாற்பது லட்சத்து இருபத்தைந்து ஆயிரம் ரூபா பெறுமதியான 2½ பரப்பு காணியினை பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினரால் கொள்வனவு செய்யப் பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்வுடனும் பெருமையுடனும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

யா /கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்.

(23433)(6.7.8)


பாராட்டி வாழ்த்துகிறோம்

2012 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளை பெற்ற மாணவர்களையும் அந்தப் பெறுபேறுபெற உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி மகிழ்கின்றோம்.



ப. தவரூபன் – 177
மா.நிலை – 67
வலய நிலை – 01



ஹ. ஜிகாசினி – 151



ர. கிருபாகரன் – 147

100 புள்ளிகளுக்கு மேற்பெற்றோர்.

சி. றானுசா – 137, ச. பிறின்சியன் – 132
ஜெ. மேரிறெபேக்கா – 129, அ. டிலக்ஷன் – 111
கெ. யேசுஎஸ்தர் – 109, ஜெ. செமிதா – 106
சு. விறணிஸ்ரன் – 105, வி. கெவினா – 105

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது பாடசாலைத் தினமாகிய 01.10.2012 இன்று அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

யா/கரம் பொன் சிறிய புஷ்பபாடசாலைசமூகம்,
கரம்பொன், ஊர்காவற்றுறை.

(சி/8746)(6.7.8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும்பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இடர் பாதுகாப்பு தொடர்பான பாடசாலை மட்டப் போட்டிகள்

தென்மராட்சி, ஒக்.1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கான இடர் பாதுகாப்பு கல்வி தொடர்பான கோட்ட நிலை வினாவிடைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜீஐசற்/ ஈஎஸ்சி நிறுவனத்தினரின் அனுசரணையுடன் மாகாண ரீதியில் நடத்தப்படவுள்ள மாணவர்களுக்கான இடர் பாதுகாப்பு கல்வி தொடர்பான அறிவை மேம்படுத்தும் முகமாக இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது. பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாணவர்களை இந்தப் போட்டிக்கு பாடசாலை சமூக விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருவருடன் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கோட்ட மட்டப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கான வலய மட்டப் போட்டி ஒக்ரோபர் 10 ஆம் திகதி மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படுமெனவும் அறிவித்துள்ளார். (3-9)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக்.1

மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் கைதடி அரச முதியோர் இல்லமும் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர் வார நிகழ்வுகள் கைதடி முதியோர் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஏழாம் திகதி வரை நடைபெறவுள்ளன. முதல்நாள் நிகழ்வுகள் மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந. இன்பராஜ் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஷும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் அஞ்சலிதேவி சாந்தசீலனும் கலந்துகொள்வர். இன்றைய தினம் கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்படும். (3-9-51-14)

* * *

இன்று நடைபெறும் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளில் விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த கல்வி அமைச்சு பணித்துள்ளது. அன்றைய தினம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ''சிறுவர் உலகம் சிறுவர்களுக்கே'' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, சர்வதேச சிறுவர் தின முக்கியத்துவம் தொடர்பாக சிறுவர்களையும், ஆசிரியர்களையும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8)

* * *

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் தலை மையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. இரகுநாதன் கலந்து கொள்வார். (3-8)

* * *

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர் தின விழா, இன்று காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கமும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.பி. சிவ பாதமும், சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி ச. சிவானந்தராசாவும் மானிப்பாய் பிரதேச பொலிஸ் பொறுப் பதிகாரி ஈ.மல்க்கம்பேர் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-100)

* * *

சர்வதேச சிறுவர் தின விழா இன்று காலை 10மணிக்கு வதிரி வடக்கு மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் த. சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந் தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் கலந்துகொள்கின்றார். (3-253)

* * *

சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு இன்று மக்கள் வங்கியினால் சிறுவர்களுக்கு சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை மட்டத்தில் கணக்குகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் மூத்த பிரஜைகளும் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 13 மக்கள் வங்கிக் கிளைகளிலும் இந்நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன. காலையில் பாடசாலை ரீதியாக மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்படுவதுடன் கணக்கு ஆரம்பிப்பவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. பிற்பகல் மூத்த பிரஜைகள் மக்கள் வங்கிக்கிளைகளில் வைத்து கௌர விக்கப்படவுள்ளார்கள்.இந்த ஏற்பாடுகளை யாழ். மாவட்ட மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரின் ஏற்பாட்டின் கீழ் மக்கள் வங்கிக் கிளைகள் மேற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (3-86)

* * *

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இன்று தேசிய சேமிப்பு வங்கியின் சாவ கச்சேரி கிளையினால் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. (3-9)

# தும்பளை சிவப்பிரகாச ம.வி மைதானத்துக்கு காணி கொள்வனவு

## 50 லட்சம் ரூபா செலவில்

வடமராட்சி, ஒக்.1

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்துக்கென 9 பரப்புக் காணி 50 லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து மேற்கொண்ட முயற்சியினால் வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள காணி விளையாட்டு மைதானத்துக்கென இரு கட்டங்களாகக் கொள்வனவு செய்யப்பட்டதாக பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்டமாக 30 லட்சம் ரூபா செலவில் 5 பரப்புக் காணியும், இரண்டாம் கட்டமாக 20 லட்சம் ரூபா செலவில் 4 பரப்புக் காணியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் இருகாணிகளையும் ஒன்றாக்கி நவீன விளையாட்டு மைதானத்தை வித்தியாலயத்துக்கென விரை வில் உருவாக்குவதென பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் ஒருவர் மேலும் தெரிவித்தார். (3-8)

# திருத்தியமைக்கப்பட்டது வீதி நெருக்கடிக்குள் மக்கள்

குருநகர்.ஒகக்.1

குருநகர் மத்திய கிழக்கு வீதி யாழ்.மாநகர சபையால் திருத்தியமைக்கப்பட்டு தார்க் கலவை மூலம் திருத்தப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதி சிறிய வீதியாக உள்ளதுடன் திருத்தியமைக்கப்பட்ட வீதியில் சில குடியிருப்பாளர்கள் மாலை நேரங்களில் கதிரைகளில் இருந்து தமது பொழுதைக் கழிப்பதனால் இந்த வீதி யூடாக வாகனங்களில் பய ணிப்போர் மிகுந்த போக்குவரத்து நெருக் கடிகளை அனுபவிப்பதாக பயணிக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர். (3-51)

## வெற்றித்தேர்வு நாயகனை வாழ்த்துகின்றோம்



வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தால் 01.08.2012 அன்று யாழ். நகரின் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்ட மாபெரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு வெற்றித்தேர்வு பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றித்தேர்வு வளவாளர்களால் முதன்மைநிலை மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்ட

செல்வன் பா. அபிராம் அவர்கள்

தேசிய பரீட்சையிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று தமிழ்மொழிமூலம் தேசிய மட்டத்தில் முதன்மைநிலை மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டமையை மனதார வாழ்த்துவதுடன்

2012ஆம் ஆண்டிற்கான "வெற்றித்தேர்வு நாயகன்" விருதினையும் வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம். இதேபோல் மாவட்ட மட்டத்தில் முதல் ஐந்து இடங்களையும் பெற்று சாதனை படைத்த ஏனைய வெற்றித்தேர்வு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

முகாமைத்துவப் பணிப்பாளர், ஆசிரியர்கள், வளவாளர்கள், இணைப்பாளர்கள்

வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

## சிவமணி ஜோதிடம்

9, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 7368

(அ/3022) (45.6.7)

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி A 9 வீதியில் நீதிமன்றம் முன்பாக 15 அடி அகலமும் 55 அடி நீளமும் உடைய கிணறு, மலசல கூட வசதியுடன் கூடிய கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 3752 930

(23394) (45.6.7)

## வேலையாள் தேவை

கணினி அனுபவமுள்ள அல்லது பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. யூஸ் கொம்பனியில் வேலை செய்வதற்கும்

அம்மா ஸ்ருடியோ
28, வேம்படி வீதி

077 7111 530

(23453) (45.6.7)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி - பால் பண்ணைக்கு அருகில் இரண்டு பரப்பு காணியில் அமைந்துள்ள சிறிய வீடு விற்பனைக்குண்டு.

விலை. 3500000/= தரகர் தேவையில்லை. நேரடியாக பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 1952 574, 021 300 1177.

## தவறிவிட்டது

கடந்த 24.09.2012 அன்று குமாரசாமி பாலமுருகன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (751263473V), வேலை அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளடங்கிய பேர்ஸ் கிளிநொச்சிக்கும் - யாழ்ப்பாணம் - சுழிபுரத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 3145 655 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## வாழ்த்துகின்றோம்



யா/ வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம் ஆறுகால்மடம்

சுரேஸ்குமார் பானுசன்

2012ல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரீட்சையில் 151 (நூற்றம்பத்திஒன்று) புள்ளிகள் பெற்றுள்ளார். இவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர் (23451)(3.6.7) பெற்றோர்

## மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



எங்களது தீவகக் கல்வி வலயத்தில் புதிய வலயக் கல்விப்பணிப்பாளராகப் பதவி ஏற்றுள்ள

உயர்திரு. திருஞானம்ஜோன்குயின்ரஸ்

அவர்களை மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். தாங்கள் மேன் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று மிக உயர்ந்த சேவையை செய்து நீண்ட காலம் பொலாற்ற எல்லாம் வல்ல ஆண்டவனை பிரார்த்தித்து மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம்.

யா/ கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்.

(23195) (45.6.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவராசா கஜன்

(அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர்)

காரைநகர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளராக கடமையாற்றி 01.10.2012 ஆம் திகதி முதல் தமிழ்தேசிய கூட்டமைப்பின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் ஆய்வு உதவியாளராக கடமையினைப் பொறுப்பேற்கும் சிவராசா கஜன் அவர்களைப் பாராட்டுவதோடு மேன் மேலும் பதவி உயர்வுகளைப் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

"வாய்ச் சொல்லில் மட்டுமல்ல செயலிலும் வீரன்
நெஞ்சிலே உரங் கொண்டவன்
தமிழ் மண் மீது பற்றுக் கொண்டு
தளராமல் தன் கடமையாற்ற
பயணத்தைத் தொடங்கியுள்ளான்
வெற்றிநோக்கிய அவன் பயணம் வாழ்க
என்று மனதார வாழ்த்தும்"

(23440)(3.6) காரை நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி துஷ்யந்தி ரகுநாதன்

(12 ஆம் கட்டை, விஸ்வமடு)

மு/ விசுவமடு மகா வித்தியாலயத்தில் 2012- தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று எமக்கு பெருமை சேர்த்த செல்வி துஷ்யந்தி ரகுநாதன் அவர்களையும், கற்பித்த ஆசிரியர் ப.சுதர்சன் அவர்களையும் அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

மாமாமார், சித்திமார், சித்தப்பாமார், அத்தைமார், மச்சான், மச்சாள்மார், அப்பப்பா, அம்மம்மா, நண்பர்கள்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகள் பெற்ற

நந்தகுமாரன் புருசோத்தமன்

(யா/ பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை) அவர்களைப் பாராட்டுவதுடன் ... சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

அப்பப்பா, அப்பம்மா, அப்பா, அம்மா, தம்பி தங்கை, மாமிமார், மச்சாள்மார்.

மூளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கைதான் வாழ்க்கை

சு.சிவாஜினி.



நித்தம் நித்தம் மாறுகின்றது எத்தனையோ? நெஞ்சில் நினைப்பதிலே நடந்ததுதான் எத்தனையோ? நம் வாழ்க்கையின் நிஜமான நிலைகளும் இதுவேதான். நாம் தாயின் கருவறைவிட்டு இந்தப் பூமியைத் தொட்ட நாள் முதல், எம் இறப்பு வரை எம் நெஞ்சாங்கூட்டில் எத்தனை ஆயிரம் கனவுகள், கற்பனைகள், எதிர்பார்ப்புக்கள். அத்தனையும் நிறைவேறுகின்றதா? இல்லை. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை. இதுவே இயற்கை எமக்குக் கற்றுத் தந்த அனுபவப்பாடம்.

இதனை எம் மனம் ஏற்றுக்கொள்ளாதவரை எம் வாழ்வு என்றும் துன்பமே. அதனை ஏற்றுக் கொள்ளும்போது எமக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களும் ஏணிப்படிகளே. அந்த ஏணிப்படிகள் நடந்து முடிந்த ஏமாற்றங்களுக்கு புதிய அத்தியாயம் கொடுத்து வெற்றிப்படியாக்கிவிடுகின்றன. ஒரு முடிவு புதுப் பிறப்பின் கரு என்பதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நினைத்தது நடக்கவில்லை. என் வாழ்வில் அனைத்தும் ஏமாற்றமே என்று வாடிச் சோர்ந்து விரக்தியுற்று, மீண்டெழுந்து கொள்ளாமல் முடங்கிக் கிடந்து எம் வாழ்வை நரகமாக்கினால் எதுவுமே நடைபெறப் போவதில்லை.

நடப்பவை யாவும் நன்மைக்கே, எமக்கு நடப்பவை யாவும் காரணம் இல்லாமல் நடைபெறாது. காரணம் இல்லாமல் தோரணம் ஆடாது என்பார்கள். அதுபோலவே இன்று நடக்கும் செயற்பாடுகள் யாவும் நன்மையோ, தீமையோ அனைத்தும் எமது பலத்துக்கான பலப் பரீட்சையே. எப்படியோ அதனை எதிர்கொண்டு தேர்ச்சிபெறத்தான் வேண்டும். தோல்விக்குப் பயந்தால் சோதனைகளில் பங்குகொள்ள முடியாது.

உண்மையில் நாம் நினைப்பவை ஒன்றுமே நடப்பதில்லை. இறைவனை வணங்கி என்ன பயன் என்று கடவுள் மீதே நம்பிக்கையற்ற தம்மை சில மனித மனங்களில் எழும். அந்த நிலையிலும் நாம் இறை நம்பிக்கையைக் கைவிடக் கூடாது. கெட்டவர்களுக்கு இறைவன் நிறையவே கொடுப்பான். ஆனால் கைவிட்டு விடுவான். ஆனால் நல்லவர்களை அதிகம் சோதிப்பான். கைவிடமாட்டான். இதுதான் உண்மை. படிப்படியாக எம்மை சோதித்து நல்ல பண்பட்ட மனிதனாக்கவே அதிகமான சோதனைகளை இறைவன் எமக்குத் தருகின்றான். இறையருள் சோதனையில் வென்றுவிட்டவன் எந்த நிலை வந்த போதும் கலங்கமாட்டான். மாறாக அவன் தெய்வீக நிலைக்குச் சென்றுவிடுகின்றான்.

எனவே இன்றைய ஏமாற்றமும், இறந்த கால துன்பமும் எமக்கு நிரந்தரமல்ல. இனி நடப்பவை யாவும் நன்மையாக இருக்க எமது மனங்களை ஒரு நிலைப்படுத்தி மகிழ்வாக செயற்படுவோம். ஏமாற்றங்களை, ஏணிப்படிகளாக்கிவிட்டால் எதிலுமே நாம் ஏமாறமுடியாது. இரும்பை யொத்த வைராக்கியம் கொண்ட மனம் மங்கையரான எமக்கு வேண்டும்.

எம் உறவுகளை நம்பி, வாழ்க்கைத் துணையை நம்பி, ஏன் பிள்ளைகளை நம்பி எத்தனையோ சந்தர்ப்பங்களில் ஏமாந்திருப்போம். ஆனால் எம் தன்நம்பிக்கையை நம்பிய நாம் ஏமாந்து போக மாட்டோம். முறிந்து விழுந்து சுக்குநூறாகிப் போனாலும், வலுக்கொண்டு மீண்டும் எழுந்து நிமிரும் நாளை எம் தன்நம்பிக்கை உருவாக்கும். வாழ்வில் அடுத்தவரின் கையை எதிர்பார்த்திருந்தால் ஏமாற்றமே மிஞ்சும். எப்போதும் தன்நம்பிக்கை என்ற எம் முழுவீச்சான கை எம்மை ஏமாற்றிவிடாது.

# மற்றவரிடத்தில் நன்மதிப்பைப்பெற.......



தேவையான இடத்தில் தேவையான
விடயங்களை மட்டும் பேசுங்கள்
எந்த விடயத்திலும் பொறுமையைக்
கடைப்பிடியுங்கள்.
பெரியவர்களிடத்தில்
மரியாதையுள்ளவராக இருங்கள்.
உங்களுக்குப் பொருத்தமான
நிறங்களிலும் செல்லும் இடத்துக்குப்
பொருத்தமான வகையிலும்
அடக்கமுள்ள உடைகளை அணியுங்கள்.
எல்லாம் எனக்குத்தான் தெரியும் என்று
அலட்டிக் கொள்ளாதீர்கள். சமயம்
வரும்போது அறிவுபூர்வமாக உங்கள்
திறமையை வெளிக்காட்டுங்கள்
உங்கள் கடமைகள் பொறுப்புக்களை
நல்ல முறையில் நிறைவேற்றுவதில்
ஆர்வமுடையவராக இருங்கள்.
கோபமாக இருந்தால் அதை
மற்றவரிடத்தில் வெளிக்காட்டாதீர்கள்.
கூடியவரை கோபப்படுவதைக்
குறையுங்கள்.
மற்றவருடைய தனிப்பட்ட
விடயங்களில் அவசியமில்லாமல்
தலையிடாதீர்கள்.
மற்றவர்களுடைய கோபத்துக்கு
ஆளாகாத வகையில்
நடந்துகொள்ளுங்கள்.
பிறரைப் பற்றி குறைகூறுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்
மற்றவரைப் பழிவாங்கும் எண்ணங்களை மனதிலிருந்து அகற்றி
விடுங்கள்
சக நண்பர்களின் முன்னேற்றத்துக்கு இயன்றவரை உறுதுணையாக
இருங்கள்.
நீங்கள் அறியும் நல்ல விடயங்களை, தேவையேற்படின்
மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

பே.மேரிசுமித்திரா, யூலனூர்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப
விரும்புவோர் "திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள் .

# கூண்டுக்கிளி



சாலைக்குச் சென்ற தலைவனை வேண்டி
ஓலைக் குடிசையிலே ஒய்யாரமாய் வீட்டு
வேலை முடித்து காத்திருந்தாள் அன்னை
தலையற்று வந்து சேர்ந்தான் தந்தை

வெள்ளை உடையுடனும் வெள்ளைக் காலணியுடனும்
உள்ளத்தில் என்றும் கொள்ளை இன்பத்துடன்
பள்ளி செல்லும் பருவத்தில் எந்தைக்கு
கொள்ளி வைத்ததால் மனம் உடைந்தேன்

அம்மா என்ற தெய்வத்தை ஏமாற்றி
சிம்மாசனம் இல்லாத ராணியாய் என்றும்
கும்மாளங்கள் பல செய்த நான்
சும்மாய் இருக்கும் நிலை அடைந்தேன்

தெருக்கோலம் பூண்டு தெருவினிலே
உருக்குலைந்து போன நிலையினிலும்
உடல் விற்கும் விபசாரியாய் மாறவில்லை
உடல் துறக்கும் போராளியாத் தேறவில்லை

அம்மாடி சும்மா இருக்காதே
வெளிநாட்டு வேலைக்குச் சென்றுவிடு
அம்மாவின் உறவினர் எடுத்துரைக்க
களிப்புடனே வெளிநாடு புறப்பட்டேன்

வெடிவெடிக்க பயத்துடன் நடுநடுங்கி
துடிதுடித்து போகுமென் நிலைக்கு
முடிவொன்று வந்ததாய் களிப்புற்றேன்.
விழாவொன்று வந்ததாய் விழிப்புற்றேன்


வீட்டுப் பணிப்பெண்ணாய் வேலை எனக்கு
தொட்டுப் பார்த்திட எண்ணும் எஜமானன்
வாட்டியென்னை வருத்தும் எஜமானி
கூட்டில் வருந்தும் கிளியின் நிலையெனக்கு

ஆறாத அழுகையுமாய் ஆயிரம் கவலையுமாய்
தேறாத மனமுமாய் தேம்பியழும் நிலையுமாய்
மாறாத காயமுமாய் தீராத துயரமுமாய்
ஊறாத நீர் போல் என் துயரங்கள்

க.பிரவினி,
கரவெட்டி.

# கோலங்கள்

நித்தம் நித்தம்
என் வீட்டு வாசலில்
நான் போட்டது மாக்கோலம்
என் மனம் கவர்ந்தவனே
மணாளனாக வேண்டுமென
நான் போட்டது மணக்கோலம்
நான் போட்டது திருமணக் கோலம்
என் திருமணத்துக்கு ஊரே
திரண்டிருந்தது விழாக்கோலம்
எதிர்பாராத விபத்தொன்றில்
என்னவன் பிணக்கோலம்
அதனால் நான் இன்று
ஆகிவிட்டேன் அலங்கோலம்



[illegible]
இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஒக். 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் 300 பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. குறிப்பிடப்படும் அனைவரையும் நாளை ... முல்லைத்தீவு அரச செயலகத்தில் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| AbiramySivapalasundaram | 878213971V |
| Abitha Janahan | 856173933V |
| AinkaranYoganathan | 820434439V |
| Ajantha Kathirkaran | 827662267V |
| Ajantha Kapilan | 828351990V |
| Ajitha Yoganathan | 845414491V |
| Akilakumar Selvavinayagam | 823604815V |
| Akilan Krishnan | 851881930V |
| Akilesan Vamadevan | 840964531V |
| Albert Regan Soundaranayagam | 813063867V |
| Amalraj Arulanantham | 841752007V |
| Ambalika Thambapillai | 855612720V |
| Anesa Mahalingam | 818241550V |
| Anisteena Suhirthini Thilagarajah | 865723466V |
| Anitta Ananthini Rajendram | 876752069v |
| Anjana Thevakumar | 838531237V |
| Anoja Kubenthiran | 855572079V |
| Anojan Sritharan | 853304247V |
| Anojan Sriskantharajah | 870030274V |
| Anton Emmanuel Mariyathasan | 820720440V |
| Anton Suthakaran Siluvairaja | 791653100v |
| Antonyz Jegajeevan Jacob | 720581906V |
| Anusuyah Tharmendra | 815983726V |
| Aravinthan Annalingam | 853173061V |
| Archana Ehamaparanathan | 857543815V |
| Arththy Sutharsan | 835321541V |
| Arudkumaran Mahadeva | 862121848V |
| Arulkaran Balasubramaniam | 782783912V |
| Arunan Srignananathan | 761513729V |
| Asoktha Panchardcharam | 836941624v |
| Aumshakthy Justin Jashothan | 758051749V |
| Bahiratha Muralitharan | 855200848V |
| Balaruban Visvanathar | 790912748V |
| Bamithra Nithiyanarmathan | 828252186V |
| Barathy Nagendrarasa | 835621260V |
| Branavan Krishnakumar | 871823499V |
| Caraline Veronika Kularajasingam | 848611158V |
| Carmalitta Madutheen | 856722988V |
| Cyril Amalan Saravanamuttu | 801131107V |
| Darshitha Raveendrakumar | 886752814V |
| Dasayini Poobalasingam | 818270658V |
| Deneshkumar Pathmarasan | 833603663V |
| Easwary Theivamanohar | 858103487V |
| Florida Rasanayagam | 767945370V |
| Gairegan Sebastian Kularatnam | 841523121V |
| Gayathiri Katheeswaran | 846633723V |
| Gayathri Rrasaiah | 827001805V |
| Gengasuthan Navarathinam | 740494007V |
| Gnaneswary Sureshkumar | 755013048V |
| Gobie Balasubramaniam | 811872997V |
| Gobika Sivasubramaniam | 856862399V |
| Guberan Gunaratnam | 850611971V |
| Gunalan Kuddithamby | 850944148V |
| Hamsajini Sundaralingam | 848180599V |
| Isveniya Uthayasankar | 818594569V |
| Iynkaran Srikantha | 851591257V |
| Janaki Kamalanathan | 855174812V |
| Janaraj Balasubramaniam | 880443771V |
| Jayapiratha Kannan | 827981206V |
| Jedin Selvaratnam | 862132696V |
| Jegathas Santhirasegaram | 831123133V |
| Jenthini Alfred Nallaia | 856802361V |
| Jerena Thushjanthan | 857401824V |
| Jeyahobi Thambiappah | 851284230V |
| Jeyakirija Kathirkamanathan | 816690765V |
| Jeyamalar Kanagaratnam | 806852554V |
| Jeyamalini Tharmalingam | 856172481V |
| Jeyananthan Selvarajah | 800141427V |
| Jeyanthan Sivapatharajah | 743263154V |
| Jeyanthy Kandasamy | 825252878V |
| Jeyapava Tharmalingam | 806981060V |
| Jeyarajintha Bahavathsingam | 887861218V |
| Jeyaruby Yoganathar | 848393720V |
| Jeyaseelan Kanagasabapathy | 853330337V |
| Jeyatharmini Theivendram | 856373606v |
| John Alphonse Gunaratnam | 812091646V |
| Judy Kumaran Mariyanayakam | 862552318V |
| Kajakumar Murugesu | 830431098V |
| Kajeetha Vijayaratnam | 865803524V |
| Kajeethan Thangarasa | 870681020V |
| Kajendran Balasubramaniam | 843071481V |
| Kajenthini Sivaruban | 786170842V |
| Kajenthirasarma Sanmuganatha | 863142270V |
| Kurukkal Kamala Jeyaram | 837193273V |
| Kamalaveni Arumugam | 877312445V |
| Kansukan Arasarathinam | 872591818V |
| Karthiga Mathiyalagan | 825102914V |
| Karthika Kanthasamy | 865481772V |
| Karunapathy Rajakumar | 817381146V |
| Kathiga Lenin | 846983511V |
| Kavitha Nitharshan | 827571539V |
| Kavitha Kunarajah | 855804093V |
| Kavitha Tharaneetharan | 775423838V |
| Kayalvili Sujeevan | 867732020V |
| Kayalvily Rameshkumar | 828121472v |
| Kayaththiri Jeganathan | 878590180V |
| Keerthana Thanarajah | 818362536V |
| Kemakuna Thavotharan | 846692541V |
| Ketheeswaran Arunasalam | 772052804V |
| Kirija Kathiramalai | 867862625V |
| Kiruba Sasikumar | 758622037V |
| Kobalakirushnan Ponniah | 821024498V |
| Kohila Paramanathan | 856342760V |
| Kokilatharan Sathasivam | 821511437V |
| Komathy Jenit Camilas | 775200847V |
| Koneswara Murugiah | 801023584V |
| Kowriesan Karalasingam | 851722530V |
| Krishnakuruparan Ganesan | 811189738V |
| Krishnashanthi Subramaniam | 825533672V |
| Kuganathan Subramaniam | 830442081V |
| Kugathas Yogendran | 843312039V |
| Kukan Rajaratnam | 871953317V |
| Kumaresan Mylvaganam | 792765823V |
| Kunakeetha Kunasingam | 775401761V |
| Kunanesan Muthukrishnan | 791782660V |
| Kurinchi Sinnarasa | 856612996V |
| Kurumathy Anandanadarajah | 855121409V |
| Lajitha Uthayakumar | 856401014V |
| Latha Puvanenthirarasa | 835504131V |
| Lathankini Raveendran | 857584171V |
| Logitha Alagadurai | 866842116V |
| Luxiny Rubananthan | 877832783V |
| Malarvili Kailainathan | 856202720V |
| Malini Vannakumar | 795193030V |
| Maria Vijayaharan Karunainayagam | 850582262V |
| Mary AruliniA.C Sister Mary Arulini | 727562516V |
| Mary Judes Kamilda Leoginus | 857522141V |
| Mary Lathiska Syril | 826262036V |
| Mathanarooban Selvarajah | 840850412V |
| Mathivathanan Panchalingam | 823204663V |
| Mathura Ganeshalingam | 846262768V |
| Mathuranthini Sritharan | 866653542V |
| Mathuri Sandrasekaram | 866792976V |
| Mathusoothanan Yogeswaran | 881892979V |
| Mathyalagi Jesuthasan | 828190474V |
| Mayura Rasiah | 867213520V |
| Mayuran Arunmoli | 862273656V |
| Mehala Sivagnanasundaram | 826230339V |
| Menagha Pararasasingam | 868020873V |
| Mohanathas Subramaniam | 793460180V |
| Mohanya Pararajasingam | 848221767V |
| Mr.K.Kamalraj Kathirkamanathan | 861343120 V |
| Muralitharan Subramaniam | 832281050V |
| Myfawny Renald Reagan | 806563730V |
| NagaJothy Kogulan | 768520186V |
| Nalasini Suyanthan | 808222221V |
| Nanthini Rolindon | 768271100V |
| Nanthini Arumugasami | 777623354V |
| Narmatha Krirushanthan | 857062337V |
| Nayalini Ponnampalam | 805831944V |
| Neelaya Rajan | 845552452V |
| Neerajan Sithamparanathan | 841313267V |
| Nilani Kanesharatnam | 846863346V |
| Nimalini Selvakumaran | 837741009V |
| Nirmalan Ramachandran | 871632391V |
| Nirupan Sampulingam | 851933204V |
| Nirusha Muthukrishnan | 857951875V |
| Nirusharani Nadarajah | 876072300V |
| Nirushiya Anandarajah | 875142321v |
| Nishanthan Thiyagarajah | 841422856V |
| Nishanthi Yogaratnam | 838241964V |
| Nishath Kanagaraja | 881793873V |
| Nitharsan Vanniyasingan | 860623420V |
| Nithiya Thevarasa | 885011519V |
| Nivethika Sriskantharajah | 885052096V |
| Paheetharan Thangarajah | 811220701V |
| Pamila Sivakanthan | 817201636V |
| Pathmaranjini Sivakumaran | 816920973V |
| Paulanton Gnanachandran | 863062934V |
| Pavithira Thayaparan | 865923465V |
| Pavithiran Amirthalingam | 850250308V |
| Pirabalini Nakanathan | 815633733V |
| Pirasanna Balachandran | 860613719V |
| Pirasanna Somaskanthakurukkal | 820353501V |
| Pirathaban Sithamparanathan | 852222778v |
| Prabakaran Kailayapillai | 813060361V |
| Prabalinee Sathalan | 768171351v |
| Prapaharan Sivasubramaniam | 792382487V |
| Prarthena Mahalingam | 856023125v |
| Prasanth Thayaparanathan | 881954443V |
| Pratheeban Panchalingam | 851074046V |
| Pratheepa K[illegible] | 816[illegible]V |
| Pratheepan Thiruvasan | 840792757V |
| Pratheepan Jeyabalan | 832543837V |
| Pratheepan Kengasuthan | 812992775V |
| Premeni Balasingam | 836682300V |
| Priyanka Panchanathan | 857064569V |
| Priyatharshiny StephenSelvarajah | 818354827V |
| Priyatharsiny Ponraveenrarajah | 815523229V |
| Pushpalogini Kulasegaram | 857231970V |
| Pushpan Yogaratnam | 831504137V |
| Ragavan Nadarajasuntharam | 721400450V |
| Rajani Puvirajasingam | 758383385V |
| Rajeenthini Rasaiah | 857881540V |
| Rajeevan Ramanathan | 853312070V |
| Rajeevbabu Shanmugalingam | 852493480V |
| Rajeswary Kanthasamy | 865072384V |
| Rajhkumar Rasanayagam | 810075120V |
| Rajini Sothynathan | 796552190V |
| Rajkumar Thirugnanasampanthar | 861782379V |
| Rajkumar Paramalingam | 841331273V |
| Rajkumar Indrathas | 742241360V |
| Ramanan Ratnasamy | 861934225V |
| Ramanarajah Sinnarasa | 812743562V |
| Ramani Sabesan | 743161984V |
| Rameskumar Thavarasa | 823185464V |
| Rammiya Rajeivan | 856593967V |
| Ranjithkumar Thavalingam | 811620750V |
| Rasikaran Velautham | 820844289V |
| Ratheeswaran Shanmugam | 750864732V |
| Rathika Kulenthiram | 878223144V |
| Ratnarajini Santhanbavan | 797402222V |
| Raveena Rajathurai | 818142064V |
| Regan Rasiah | 840814530V |
| Rohini Subramaniam | 877583414V |
| Rohiny Visvalingam | 856691713V |
| Rubika Harindran | 866163065V |
| Sahayamary Jesuthasan | 837162734V |
| Sairuban Balasubramaniam | 882990397V |
| Sajitha Velnampy | 725501765V |
| Sakthiyakiri Tharmakeerthy | 840662616V |
| Salini Shyamalan | 875461923V |
| Saneevan Jeganathan | 863603480V |
| Sandralaila Rangan | 847871580V |
| Sanseevannath Kanapathypillai | 790992717V |
| Santhirakumar Sachchithanantham | 852553405V |
| Santhiravathani Gajendra | 808040646V |
| Sanyutha Balachandran | 855103168V |
| Sarmila Vasanthan | 846483667V |
| Sarmila Mayuran | 857732685V |
| Sarmila Jothikaran | 836553780V |
| Sarmilan Mahendrarajah | 863452066V |
| Saseela Jeyaseelan | 808251167V |
| Sasiharan Paramanathan | 833270583V |
| Sasikaran Sabaratnam | 851100067V |
| Sasitha Shanmuganathan | 856742067V |
| Satheeswaran Shanmugam | 823574134V |
| Sathiyan Sivakadadchanyam | 880180207V |
| Satkunanesan Manokaran | 861822095V |
| Sejohn Ramachandran | 841303607V |
| Selvakumar Anthony Yogarajah | 790864204V |
| Selvarani Muralitharan | 766224288V |
| Selvathashan Selvanathan | 803651094v |
| Senthilmathavan Kanapathipillai | 742510549V |
| Shalini Aarulraja | 818461933V |
| Shanthini Kanapathypillai | 788463740V |
| Sharmila Sivaganesan | 877131807V |
| Shinthujaa Sivarajasundaram | 855541220V |
| Shobarna Rajaguru | 846382378V |
| Shyamala Thangarajah | 867181580V |
| Sinthusha Ramachandran | 878622294V |
| Sivagowri Sivashanmugamoorthy | 765173590V |
| Sivagowri Shanmugathasan | 788453884V |
| Sivakajani Sivagnanam | 856182819v |
| Sivakaran Sivayogam | 850022224V |
| Sivakumar Sinnathamby | 731543119V |
| Sivakumar Murugesu | 783282887V |
| Sivamathan Sivapiragasam | 772861338V |
| Sivananthini Jeyanthan | 836060105V |
| Sivanayani Sarveswara | 846353259V |
| Sivanesan Sivalingam | 761600320V |
| Sivaranjini Sivaguru | 836943570V |
| Sivaranjini Sivanantharajah | 835484270v |
| Sivatharsan Sithamparapillai | 821043204V |
| Sivatharshana Rajenra | 756053728V |
| Sivathayalini Yogar | 817753043V |
| Siyamala Pathmanathan | 857002296V |
| Siyamala Thevarajah | 835840697V |
| Siyani Satkunanathan | 868162929V |
| Sobana Vithyatharan | 785441176V |
| Soruban Selvarasa | 850623139V |
| Sowkiya Thirunavukkarasu | 835483134V |
| Sri Ramani Rajendran | 846104194V |
| Srigowri Kandasamy | 848542997v |
| Srivarnan Ponnampalam | 872112871V |
| Subagini Sivasuntharalingam | 828230727V |
| Subajini Sellathurai | 806553905V |
| Subasinee Ananthakrishnan | 778511088V |
| Subasini Partheepan | 796083638V |
| Subaskaran Subramaniam | 840363287V |
| Subhajini Vinayakamoorthy | 828272756V |
| Subothini Jeahnandhan | 745413242V |
| Suganja Srisankar | 877692574V |
| Suganthan Sivagnanasingam | 782214713V |
| Suganthan Kanaganathan | 820924924v |
| Suganthini Anthonippillai | 826144149V |
| Suganthini Kugan | 815162595V |
| Suganthini Kandasamy | 796732555V |
| Suganthiny Visuvalingam | 785452860V |
| Suganya Jevababu | 817551378V |
| Suhirtha Vinotharan | 808043254V |
| Sujatha Subramaniam | 857701585V |
| SujeepanSoosainathar | 872171959V |
| Sukanthan Rajaratnam | 881074508V |
| Sumalda Masilamany | 846261990V |
| Sumanraj Vekavanam | 812333615V |
| Sunitra Sujanthini Joseph | 868481196V |
| Sureka Paramsothy | 827202819V |
| Surenthiran Subramaniam | 751633416V |
| Sureshadevi Ratnam | 795843477V |
| Sureshkumar Baskaralingam | 820864123V |
| Suthakar Kunasingam | 811293601V |
| Suthakaran Sithambaranathan | 791610664V |
| Suthamathy Rajaratnam | 836313801V |
| Suthanithy Sivasambu | 856070360V |
| Sutharjini Thamotharampillai | 876103192V |
| Sutharsan Sothynathan | 832482587V |
| Sutharsan Mahendran | 870633246V |
| Sutharsan Nadarajah | 772701144V |
| Sutharshini Jesuthasan | 857162838V |
| Sutharsini Kanapathippillai | 828233874V |
| Suthrsan Balachaandran | 781462900V |
| Suvarna Kandeepan | 825872892V |
| Swarna Nagenthiran | 815210670V |
| Sweety Arokiyanathar | 805463821V |
| Thadchajini Ruthirakumar | 847722924V |
| Thadchajini Suthakaran | 828550659V |
| Thadsajini Balasubramaniam | 827731188V |
| Thanikaikkumaran Sinnathurai | 842471745v |
| Thano Antanisa Antonythas | 876332612V |
| Thanushiga Sivabalasatkunam | 865983522V |
| Thanusiya Sivapatham | 867902813V |
| Tharani Jeyakanthan | 826132205V |
| Tharani Luckanton | 857942965v |
| Tharany Sinnathurai | 856543153V |
| Tharmatha Tharmasegaram | 867621024V |
| Tharmith Kanagalingam | 842302153V |
| Tharshan Ramajeyam | 843162061V |
| Tharshan Kanagaraja | 860931516V |
| Tharshini Kanapathipillai | 807904574V |
| Tharsika Navaneethakumaran | 857442946V |
| Thavakokulan Mahalingam | 861501256V |
| Thavaluxmy Kajaruban | 825912096V |
| Thavarajini Sathasivam | 777703978V |
| Thayanthini Thayanithy | 867521569V |
| Thevaky Soundararajah | 855830477V |
| Thibakar Nagaratnam | 852992530V |
| Thilipan Selvarajah | 831291230V |
| Thiruchelvi Menanparamathas | 786001722V |
| Thirumalini Thirunavukkarasu | 855692295V |
| Thirumaran Panchadcharam | 813644622V |
| Thirumaran Shanmuganathan | 823390203V |
| Thiruvakini Sasikumar | 775284030V |
| Thisajini Janarthanan | 866683107V |
| Thishanthini Nadarajah | 877252892V |
| Thulasiga Mahesan | 875131273V |
| Thunuja Pakeerathan | 808393786V |
| Thusanthamala Suganthan | 847952440V |
| Thushanthy Ponniah | 857952936V |
| Thushayene Vivekananthan | 876822300V |
| Thusyanthan Sripushpanathan | 840542769v |
| Ushanthy Suthan | 845140359V |
| Uthayakumari Sujan | 797101370V |
| Uthayarahini Thanikasalam | 848153052V |
| Uthayaranjani Ketharanathan | 795922237V |
| Vahini Sivakadadcham | 867812210V |
| Vajeenth Vasanthakumar | 842543495V |
| Vakeesan Ratnam | 850040338V |
| Vaksalakumari Premkumar | 796472286V |
| Valarmathy Senathirajah | 865582889V |
| Vanaja Paskaran | 857741595V |
| Vanasa Ranganathan | 857862694V |
| Vannarajah Thiyagarajah Lesly | 801114164V |
| Vasanthy Suganthan | 817624197V |
| Vasuki Kanagaratnam | 848392073V |
| Vathanareka Nanthakopalan | 876882477V |
| Velllalakan Sripalan | 880021281V |
| Vengadesan Thangavelu | 831083654V |
| Victor Joseph David | 790172680V |
| Vigneswary Ampalavanar | 867281908V |
| Vijitharan Mahendrarajah | 853062944V |
| Vimal Thadshanamoorthy | 872463305V |
| Vimalaveni Vilvamangalam | 878170148V |
| Vinothan Sivalingam | 833023845V |
| Vinothan Ramalingam | 852794445V |
| Vinothinni Kanagasingam | 818451849V |
| Vinuja Sutharsan | 828360230V |
| Viththiyarani Sivakurunathan | 877051790V |
| Vithyasangar Kanagabavan | 773644616V |
| Yasothara Pugalenthy | 817191339V |
| Yohampihai Pushparasa | 847482001V |
| Sujitha Theiveganathan | 776603775V |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பிரதேச செயலக உதைபந்து இறுதியாட்டம்

# அசத்தியது அல்மதார்

யாழ்ப்பாணம், ஒக்.1

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான முதற்கட்டப் போட்டிகளை பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்மதார் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இரு அணிகளும் ஆரம்பம் முதலே சம பலத்தோடு மோதிக் கொண்டன. ஓர் அணி வீரர்கள் எதிரணியின் கோல் கம்பத்தை நோக்கி பந்தைக் கொண்டு செல்வதும், அந்த முயற்சி எதிரணி வீரர்களின் பின் கள வீரர்களால் தடுத்து நிறுத்தப்படுவதுமாக ஆட்டம் தொடர்ந்து கொண்டே இருந்தது. எனினும் ஒரு கட்டத்தில் ஊடுருவித் தாக்கிய இரு அணியினதும் முன்கள வீரர்கள் தத் தம் அணி சார்பாக ஒவ்வொரு கோல்களை அடித்து ஆட்டத்தின் விறுவிறுப்பை அதிகப் படுத்தினர். ஆட்ட நேர இறுதியில் மேலதிகமாக ஒரு கோலை அடித்து வெற்றியைத் தம் பக்கம் சுவீகரிக்க இரு அணியினரும் அனல் பறந்த ஆட்டத்தில் இறங்கினர். ஆயினும் அந்த முயற்சிகள் பயனளிக்காத நிலையில், ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

எனவே வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக தலா 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் இரு அணியினருக்கும் வழங்கப்பட்டன. எனினும் இந்த வாய்ப்பில் இரு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்றதனால் மீண்டும் சமநிலையே ஏற்பட்டது.

எனவே மேலதிகமாக தலா ஒரு உதை வீதம் இரு அணியினருக்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலும் இரு அணியினரும் தலா ஒவ்வொருகோலை அடிக்க மீண்டும் முடிவு சமநிலையானது. இவ்வாறு இரு அணியினரும் விட்டுக் கொடுக்காத தன்மையோடு போட்டியின் இறுதிக் கட்டத்தில் மோதிக் கொண்டதால் பார்வையாளர் பகுதியில் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

போட்டியின் முடிவு சமநிலையாகிக் கொண்டே சென்றதால் மீண்டும் ஒருமுறை இரு அணிகளுக்கும் தலா இரண்டு சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தை யங்ஸ்ரார் அணி தவறவிட, அல்மதார் அணியினர் ஒரு கோலை அடித்து வெற்றியைத் தமதாக்கினர்.

இதனால் இறுதியில் அல்மதார் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டு சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. (ங-23)



## அரையிறுதியில் சென். ஜோன்ஸ் தோல்வி

யாழ்ப்பாணம், ஒக்.1

இலங்கை உதைபந்தாட்டச் சம்ளேனம் தேசிய ரீதியில்நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு பாடசாலை அணியினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை காலியில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றியைப் பறிகொடுத்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறும் சந்தர்ப்பத்தை தவறவிட்டது.


முதலில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் எக்கலை ஜீ.பி. சேனநாயக்க அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அனுராதபுரம் சென். ஜோசப் கல்லூரி அணியுடன் மோதிக்கொண்டது.

இதில் அனுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. (ங-23)

## யாழ்ப்பாணக் கல்லூரி மூன்றாமிடம்



சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக இலங்கை வங்கி, மற்றும் "சீமா" ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் 19 வயதுக்குட்பட்ட பாடசாலைஅணிகளுக்கு இடையிலான அணிக்கு 6 வீரர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணித்தலைவரிடம் பிரதம விருந்தினர் வி.கே.சண்முகலிங்கம் வெற்றிக் கிண்ணத்தை வழங்குகிறார். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.1

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள்-

பி.ப.3.30

பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம்.

பி.ப.4.30

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கலைமதி விளையாட்டுக் கழகம். (ங-23)

## சென்.மேரிஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக்.1



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகளை பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையேநடத்தி வருகின்றன.

இந்த வகையில் யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 1: 0 என்ற கணக்கில் குருநகர் பாடுமீன் அணியை வீழ்த்திச் சம்பியனாகியது. (ங-23)

## கரவெட்டிப் பிரதேச செயலக உதைபந்து முடிவுகள் சில

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 21 வயதுப் பிரிவு அணிகளுக்கான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலும், கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் சில வருமாறு-

**இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில்...**

அண்ணாசிலையடி விளையாட்டுக்கழகத்துக்கும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றீட்டியது.

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்கும், நவஜீவன் விளையாட்டுக் கழத்துக்கும் இடையேயான ஆட்டத்தில் நவஜீவன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வாகைசூடியது.

மனோகரா விளையாட்டுக்கழகத்துக்கும் நியூட்டன் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையேயான ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் எதிரணியை வீழ்த்தியது.

றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும், நித்தி விளையாட்டுக்கழகத்தும் இடையேயான ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் அபார வெற்றி பெற்றது.

உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகத்துக்கும் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி1:0 என்ற கோல்கணக்கில் வெற்றீட்டியது.

**கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில்...**

உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகத்துக்கும், சுடர் ஒளிவிளையாட்டுக்கழகத்துக்கும் இடையேயான ஆட்டத்தில் சுடர்ஒளி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் கரவைச் சுடர் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையேயான ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் கரவைச் சுடரை வீழ்த்தியது.

கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும், சுடர் ஒளி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையேயான ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)

## நெடுந்தீவு கபடி வீரர் ஜெனற் தேசிய இளைஞர் அணிக்கு

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய கபடி அணிக்கு நெடுந்தீவு வீரரான சென். அன்ரனிஸ் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த நோ.ஜெனற் றஜீவன் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



நோ. ஜெனற் றஜீவன்

கடந்த 16 ஆம் திகதி நெடுந்தீவில் இடம்பெற்ற இளைஞர் தின விழாவின் போது நடைபெற்ற கபடிப் போட்டியில் இவர் தனது திறமையை வெளிக்காட்டியிருந்தார். இதன் மூலமே குறித்த வீரர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய கபடி அணிக்கு தெரிவாகியுள்ளார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கைக் கிரிக்கெட் அணி ஒரு நாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இறுதியாட்டத்துக்கு எத்தனை தடவைகள் தகுதி பெற்றது?

..................................

பெயர்– ..................................

முகவரி–..................................

..................................

■ உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து 02.10.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

■ உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி, சாவகச்சேரி, கரடிப்போக் குச் சந்தி, வவுனியா, மன்னார் ஜோதி புத்தகசாலை, சிவசாந்தி தேநீர்ச்சாலை- தாழ்வுப்பாடு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கூப்பனை இடலாம்.


## கிருபா லேணர்ஸ்

**அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை**

வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (டெக்ரர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியும்.
கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக்லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.



தலைமைக்காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2224353, 021 4923200,
071 4546952, 077 7225292



| கிளிநொச்சி | சாவகச்சேரி | பருத்தித்துறை | விசுவமடு | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| 021 2285505 | 021 4923202 | 021 4923201 | 021 3201515 | 021 3006550 | 021 2242022 |
| 071 4546955 | 021 2270700 | 071 4546958 | 071 4546955 | 021 4923201 | 071 4546956 |


உதயன்
தினமும் வெல்லுங்கள்
ரூபா. 2000
கேள்வி 13



# தொடரும் வொட்ஸனின் அதிரடி வெற்றிகளைக் குவிக்கும் ஆஸி.

ஆஸ்திரேலிய அணியின் வொட்ஸன் சகலதுறை ஆட்டங்களை வெளிப்படுத்தி கலக்க தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி அரையிறுதி வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொண்டது. நேற்றைய ஆட்டத்திலும் தோல்வியைத் தழுவிய தென்னாபிரிக்க அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

இலங்கையில் நான்காவது 'ரி-20' உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது. அதில் ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகள் மோதின. பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் மயிரிழையில் தோற்றிருந்த தென்னாபிரிக்க அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

ஆஸி. அணி இந்தத் தொடரில் இதுவரை களமிறக்காத டொஹேட்டியை நேற்றுக் களமிறக்கியது. முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே, 'ரி-20'யின் சிறந்த வீரராக ஐ.சி.சியினால் தெரிவு செய்யப்பட்ட லெவியை 'டக் அவுட்டாக்கினார்'. தொடர்ந்தும் மிரட்டிய டொஹேட்டி தென்னாபிரிக்காவின் முன்வரிசையை சொற்ப ஓட்டங்களுக்குள் போட்டுத் தாக்கினார். ஆரம்பத்திலேயே இலக்குகளை இழந்து தடுமாறியதால் தென்னாபிரிக்க அணியால் 'பவர்பிளே' பந்துப் பரிமாற்றங்களில் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. நான்காவது இலக்குக்கு டுமினி ஓரளவு சிறப்பாக ஆடிக் கொடுத்தார். டுமினியை வேட் சிறப்பான ஸ்ரொம்பிங்கில் வெளியேற்றி வைத்தார்.

இருந்தும் தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் டீ வில்லியர்ஸ் பந்துகளை வீணடிக்க மீண்டும் தென்னாபிரிக்க அணி பாதாளத்துக்குள் தள்ளப்பட்டது. 86 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறிக் கொண்டிருந்த தென்னாபிரிக்க அணியை பெகார்டின், றொபின் பீற்றர்ஸன் ஜோடி மீட்டது. இவர்களது இறுதிக்கட்ட அதிரடித் தாக்குதலில் தென்னாபிரிக்க அணி மேலதிக இலக்கு இழப்பு ஏதுமின்றி ஓரளவு கௌரவ இலக்கை எட்டியது. இருபது பந்துப் பரிமாற்றங்களில் 146 ஓட்டங்களை 5 இலக்குகளை இழந்து பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணியை ஆரம்பத்திலேயே ஆட்டம் காணச் செய்தது தென்னாபிரிக்கா. மோர்னி மோர்கலின் வேகத்தில் அதிரடி வீரர் வோணர் வெளியேறினார். அதன் பின்னர் வொட்ஸன் - ஹஸி ஜோடி இணைந்தது. ஆரம்பத்தில் அடக்கி வாசித்த இந்த இணை போகப் போக தமது சுயரூபத்தைக் காட்டியது. வொட்ஸன் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை சங்காரம் செய்யத் தொடங்க ஆஸி.யின் வெற்றி உறுதியானது.

அதிரடி வேட்டை நடத்திய வொட்ஸன் 35 பந்துகளில் 'தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்தும் விடாத வொட்ஸன் தென்னாபிரிக்காவை போட்டுத் தாக்கினார். அத்துடன் தென்னாபிரிக்க அணி களத்தடுப்பில் மொத்தமாக சொதப்ப ஆஸி.யால் இலகுவாக ஓட்டங்களைப் பெற முடிந்தது. இரண்டாவது இலக்குக்கு 99 ஓட்டங்கள் இணைப்பாட்டம் பகிரப்பட்ட நிலையில் வொட்ஸனை தென்னாபிரிக்கா வெளியேற்றியது. அதன் பின்னர் மை ஹஸி அதிரடியாட்டத்தை தொடங்கினார். வந்த கம்ரான் வைட்டும் போட்டுத் தாக்க 14 பந்துகள் மீதமிருக்கையில் ஆஸ்திரேலிய அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக வொட்ஸன் தெரிவானார். (5)

**2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்**

ஆஸ்திரேலியா எதிர் தென்னாபிரிக்கா — நாணயச் சுழற்சி: ஆஸ்திரேலியா
முடிவு: ஆஸ்திரேலியா 8 இலக்குகளால் வெற்றி — ஆட்டநாயகன்: வொட்சன்

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| லெவி | b டொஹேட்டி | 00 | 03 | 0 | 0 |
| அம்லா | c வேட் b வொட்சன் | 17 | 15 | 1 | 1 |
| கலிஸ் | c வேட் b டொஹேட்டி | 06 | 07 | 1 | 0 |
| டுமினி | st வேட் b டொஹேட்டி | 30 | 25 | 4 | 0 |
| டீ வில்லியர்ஸ் | c பெய்லி b வொட்சன் | 21 | 24 | 0 | 0 |
| பெகார்டின் | ஆட்டமிழக்காமல் | 31 | 27 | 2 | 1 |
| றொபின் பீற்றர்சன் | ஆட்டமிழக்காமல் | 32 | 19 | 6 | 0 |
| ரிம் பார்னெல் | | | | | |
| போத்தா | | | | | |
| ஸ்ரெய்ன் | | | | | |
| மோர்னி மோர்கல | | | | | |
| உதிரிகள் | | 09 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| டொஹேட்டி | 4 | 20 | 3 | 0 |
| ஸ்ராக் | 4 | 30 | 0 | 0 |
| கமின்ஸ் | 4 | 33 | 0 | 0 |
| வொட்சன் | 4 | 29 | 2 | 0 |
| ஹொக் | 3 | 26 | 0 | 0 |
| மக்ஸ்வெல் | 1 | 07 | 0 | 0 |

TOTAL - 146/5 (20)
1-0 (லெவி), 2-8 (கலிஸ்), 3-33 (அம்லா), 4-64 (டுமினி), 5-86 (டீ வில்லியர்ஸ்)

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| டேவிட் வோணர் | b மோர்னி மோர்கல | 05 | 09 | 0 | 0 |
| வொட்சன் | c பார்னெல் b றொபின் பீற்றர்சன் | 70 | 47 | 6 | 2 |
| மைக் ஹஸி | ஆட்டமிழக்காமல் | 45 | 37 | 2 | 2 |
| கம்ரான் வைட் | ஆட்டமிழக்காமல் | 21 | 13 | 3 | 1 |
| மக்ஸ்வெல் | | | | | |
| பெய்லி | | | | | |
| வேட் | | | | | |
| கிறிஸ்ரெய்ன் | | | | | |
| ஹொக் | | | | | |
| கமின்ஸ் | | | | | |
| ஸ்ராக் | | | | | |
| உதிரிகள் | | 06 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெய்ன் | 3 | 15 | 0 | 0 |
| மோர்னி மோர்கல் | 3 | 23 | 1 | 0 |
| கலிஸ் | 1 | 08 | 0 | 0 |
| போத்தா | 3.4 | 31 | 0 | 0 |
| றொபின் பீற்றர்சன் | 4 | 41 | 1 | 0 |
| ரிம் பார்னெல் | 2 | 24 | 0 | 0 |
| டுமினி | 1 | 04 | 0 | 0 |

TOTAL - 147/2 (17.4)
1-10 (வோணர்), 2-109 (வொட்சன்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்



# இந்தியா வெற்றி



பரம எதிரிகளான இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆட்டம் எதிர்பார்த்தளவு பரபரப்பில்லாமல் முடிவடைந்தது. இந்த ஆட்டத்தில் சகலதுறையிலும் சிறப்பான திறமை வெளிப்பாட்டை வெளிக்காட்டிய இந்திய அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் ஆஸி. அணியிடம் 9 இலக்குகள் வித்தியாசத்தில் சந்தித்த தோல்விக்கு ஆறுதலை தேடிக் கொண்டது.

'ரி-20' உலகக் கிண்ண 'சுப்பர்-8' தொடரில், ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதிக் கொண்டன. இரு பரம எதிரிகளும் மோதிக் கொள்வதால் இந்த ஆட்டம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பத்திலேயே இந்திய அணித் தலைவர் டோனியின் சொதப்பலான களத்தடுப்பு உதிரி ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது. அதிரடியாக ஆரம்பமான பாகிஸ்தானின் ஆட்டத்தை இரண்டாவது பந்துப் பரிமாற்றத்திலே முட்டுக் கட்டை போட்டு நிறுத்தினார் இப்ரான் பதான். அதிரடி வீரர் இம்ரான் நஷீரை வெளியேற்றி பாகிஸ்தானுக்கு அடி கொடுத்தார்.

தொடர்ந்து 'பூம் பூம்' அப்ரிடி களமிறங்கினார். வழமைக்கு மாறாக முன்னதாக களமிறங்கிய அப்ரிடி அதிரடியாக ஆடினார். ஓட்ட வேகம் அதிகரித்தது. இருந்தும் அப்ரிடியை நீடித்து நிற்க பலாஜி விடவில்லை. அதன் பின்னர் பாகிஸ்தானின் துடுப்பாட்ட வரிசை ஆட்டம் காணத் தொடங்கியது. இந்திய அணியின் பகுதி நேரப் பந்து வீச்சாளர்களே பாகிஸ்தானின் மத்திய வரிசையின் இலக்குகளை இலகுவாகத் தகர்த்தெறிந்தனர். திணறிய பாகிஸ்தான் அணிக்கு மலிக் - உமர் அக்மல் ஜோடி ஆறுதலளித்தது. ஆறாவது இலக்குக்கு இந்த ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை பகிர்ந்தது. வேகமாகவும் மேலதிக இலக்குகள் எதனையும் இழக்காமலும் ஆடியது.

ஆட்டம் இறுதிக் கட்டத்தை நெருங்க அடித்தாட வேண்டி ஏற்பட இந்த ஜோடியின் இலக்கு பிரிக்கப்பட்டது. ஆறாவது இலக்குக்காக 47 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தது. அதன் பின்னர் பாகிஸ்தானின் பின்வரிசை வீரர்களும் சொதப்ப 19.4 பந்துப் பரிமாற்றங்களிலேயே 128 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. இது பாகிஸ்தான் அணி 'ரி-20' உலகக் கிண்ண அரங்கில் பெற்றுக் கொண்ட மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

மிக இலகுவான இலக்கை விரட்ட சேவாக் - கம்பீர் ஜோடி களமிறங்கியது. முதலாவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய ஹசன் இந்திய அணிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தார். கம்பீரை ஓட்டமெதனையும் பெறாத நிலையில் வெளியேற்றி இந்தியாவை ஆட்டம் காண வைத்தார்.

ஆனால் அதன் பின்னர் சேவாக் - ஹோக்கி ஜோடி இணைந்து ஆட்டத்தை தங்களது கையில் எடுத்தாடியது. பாகிஸ்தானின் சுழல் பந்து வீச்சு, வேகப் பந்து வீச்சு எல்லாவற்றையும் போட்டுத் தாக்கி ஓட்டங்களைக் குவித்தது. அத்துடன் பாகிஸ்தான் அணி களத்தடுப்பு வியூகங்களை ஒழுங்காக அமைக்காமலும், பிடியெடுப்புக்களையும் தவறவிட்டது. இதனை வாய்ப்பாக பயன்படுத்திய இந்த ஜோடி அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தது.

74 ஓட்டங்களை இணைப்பாக பகிர்ந்த நிலையில் சேவாக் ஓங்கி அடித்த பந்தை உமர் குல் எல்லையருகே வைத்து பிடியெடுத்தார். இந்தியா இரண்டாவது இலக்கை இழந்ததை பற்றிக் கவலைப்படாது தொடர்ந்தும் பாகிஸ்தான் பந்து வீச்சை பதம் பார்த்தது. ஹோக்லி 41 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். யுவராஜ் - ஹோக்கி இணை பாகிஸ்தானின் வெற்றியிலக்கை 18 பந்துகள் மீதமிருக்கையில் வெற்றிகொண்டது. ஆட்டநாயகனாக ஹோக்லி தெரிவானார்.

இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெற வேண்டுமாயின் தென்னாபிரிக்காவுடனான நாளைய ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். பாகிஸ்தான் அணி, ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில் வெற்றியைப் பெற்றால் அரையிறுதிக்கு தகுதி பெறும். (5)




**2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்**

பாகிஸ்தான் எதிர் இந்தியா — நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்
முடிவு: இந்தியா 8 இலக்குகளால் வெற்றி — ஆட்டநாயகன்: ஹோக்லி

பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | b ஹோக்லி | 15 | 28 | 1 | 0 |
| இம்ரான் நஷீர் | lbw b இர்பான் பதான் | 08 | 05 | 2 | 0 |
| அப்ரிடி | c ரெய்னா b பாலாஜி | 14 | 12 | 2 | 0 |
| ஜம்ஷெட் | c டோனி b யுவராஜ் சிங் | 04 | 05 | 0 | 0 |
| கம்ரான் அக்மல் | c டோனி b யுவராஜ் சிங் | 05 | 06 | 0 | 0 |
| சொயிப் மலிக் | c ரோகித் சர்மா b அஸ்வின் | 28 | 22 | 3 | 0 |
| உமர் அக்மல் | c [illegible] b அஸ்வின் | 21 | 18 | 0 | 1 |
| யஷிர் அரபாத் | run out ( யுவராஜ் சிங் ) | 08 | 11 | 1 | 0 |
| உமர் குல் | c டோனி b பாலாஜி | 12 | 10 | 1 | 1 |
| சயிட் அஜ்மல் | c டோனி b பாலாஜி | 01 | 02 | 0 | 0 |
| ஹசன் | ஆட்டமிழக்காமல் | 00 | 00 | 0 | 0 |
| உதிரிகள் | | 12 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சகீர்கான் | 3 | 22 | 0 | 0 |
| இர்பான் பதான் | 3 | 30 | 1 | 0 |
| பாலாஜி | 3.4 | 22 | 3 | 0 |
| அஸ்வின் | 4 | 16 | 2 | 0 |
| யுவராஜ் சிங் | 3 | 16 | 2 | 0 |
| ஹோக்லி | 3 | 21 | 1 | 0 |

TOTAL - 128/10 (19.4)
1-17, 2-35, 3-43, 4-49, 5-59, 6-106, 7-115, 8-115, 9-128, 10-128

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்பீர் | c & b ஹசன் | 00 | 02 | 0 | 0 |
| சேவாக் | c உமர் குல் b அப்ரிடி | 29 | 24 | 4 | 0 |
| ஹோக்லி | ஆட்டமிழக்கவில்லை | 78 | 61 | 8 | 2 |
| யுவராஜ்சிங் | ஆட்டமிழக்கவில்லை | 19 | 16 | 2 | 0 |
| இர்பான் பதான் | | | | | |
| ரோகித் சர்மா | | | | | |
| சுரேஷ் ரெய்னா | | | | | |
| டோனி | | | | | |
| அஸ்வின் | | | | | |
| சகீர்கான் | | | | | |
| பாலாஜி | | | | | |
| உதிரிகள் | | 03 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஹசன் | 4 | 22 | 1 | 0 |
| உமர் குல் | 3 | 30 | 0 | 0 |
| சயிட் அஜ்மல் | 4 | 25 | 0 | 0 |
| அப்ரிடி | 4 | 34 | 1 | 0 |
| யஷிர் அரபாத் | 1 | 11 | 0 | 0 |
| மொஹமட் ஹபீஸ் | 1 | 07 | 0 | 0 |

TOTAL - 129/2 (17)
1-1 (கம்பீர்), 2-75 (சேவாக்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவராஜை நீக்க வேண்டும்



இந்திய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான யுவராஜ்சிங் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். பின்னர் அதிலிருந்து மீண்டு 9 மாதங்களுக்கு பின்பு அணியில் இடம் பெற்றார்.

தற்போது நடைபெற்று வரும் 'ரி-20' உலகக் கிண்ணத்தில் ஆடிவருகிறார். இந்த நிலையில் யுவராஜ்சிங்கின் உடல் தகுதி குறித்து முன்னாள் வீரர்களும், தொலைக் காட்சி வர்ணனையாளர்களுமான சஞ்சய் மஞ்ரேக்கர், ரவி சாஸ்திரி கேள்வி எழுப்பி யுள்ளனர்.

யுவராஜ் முழு உடல் தகுதியுடன் இல்லை என்று இருவரும் கூறியுள்ளனர்.

இது குறித்து மஞ்ச்ரேக்கர் கூறுகையில், யுவராஜ்சிங் முழு உடல் தகுதியுடன் இல்லை. 70 முதல் 80 சதவிகிதம் வரை தான் தகுதியுடன் உள்ளார். ஆஸ்திரேலியாவுக்கெதிரான ஆட்டத்திலேயே அவரை நீக்கி இருக்க வேண்டும் என்றும் சேவாக்கையே தொடக்க வீரராக களமிறக்க வேண்டும் எனவும் கூறினார்.

இது குறித்து முன்னாள் அணித்தலைவர் ரவி சாஸ்திரி கூறுகையில், யுவராஜ் சிங் முழு உடல் தகுதியுடன் இல்லை. இதனால் அவருக்கு வாய்ப்பு வழங்கக் கூடாது. யாரும் யாருக்கும் பரிதாபம் காட்டக்கூடாது. சிறந்த வீரர்களை தான் தெரிவு செய்யவேண்டும்.

'ரி-20' ஆட்டத்தில் 3 சுழற்பந்து வீரர்கள் தேவை இல்லை என்றும் சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரருக்கு 'ரி-20' ஆட்டத்தில் வாய்ப்பு மறுக்கப்படுவது ஆச்சரியமானது எனவும் கூறியுள்ளார். (5)

# மைதானத்தில் மஹிந்த

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான 'ரி-20' ஆட்டத்தை பார்ப்பதற்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக ஆர்.பிரேமதாஸ மைதானத்துக்கு நேற்றுச் சென்றிருந்தார்.

இலங்கையில் 'ரி-20' உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 18ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. 18ஆம் திகதி ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையில் இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதிய பரபரப்பான ஆட்டத்தைப் பார்ப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகச் சென்றிருந்தார். அவருடன் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும் உடனிருந்தார்.

(5)


## வேலைவாய்ப்பு தேடுபவர்களின் கவனத்திற்கு!

புதியதுறை ,புதிய அனுபவம்,
திறமை அடிப்படையில் தொழில். கவர்ச்சியான சம்பளம்
எதிர்வரும் 3ம் திகதி யாழ்நகரில்
காலை 10.30க்கு ஆரம்பம்
இலக்கம் 72,பலாலிவீதி, இலுப்பையடி சந்தி,யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### செல்லையா பூபதி (குஞ்சு அக்கா)



உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பூபதி (குஞ்சு அக்கா) நேற்று முன்தினம் (29.09.2012) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், செல்லையாவின் (செல்லர்) அன்பு மனைவியும், இராசேந்திரன் (சந்தா - கனடா) சூரியகலா (வவுனியா), சித்திரகலா, காலஞ்சென்ற குகேந்திரன் ஆகியோரின் அன்பு தாயும், கோமதி (கனடா), சிவகுமாரன் (இளைப்பாறிய நில அளவையாளர் திருகோணமலை), உலகசேகரம் (திசைகாட்டி (Pvt)Ltd) ஆகியோரின் அன்பு மாமியும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற இரத்தினம் ஆகியோரின் சகோதரியும், சிந்துஜன் (கனடா), தனுசன் (கனடா), திருசன் (கனடா), யோகி (ஹட்டன் நஷனல் வங்கி முல்லைத்தீவு), சபேசன் - துசிதரா (லண்டன்), கயிலன், சுமன் (வணிக முகாமைத்துவ பீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளக்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பசிட்டி வீதி, உரும்பிராய்
கிழக்கு, உரும்பிராய். (23506)(3.14)

தகவல்:
த.உலகசேகரம் (மருமகன்)


## COLLEGE OF CHEMISTRY

பழம் றோட், கந்தர்மடம்.

### PHYSICS

| A/L 2013 | A/L 2014 |
|---|---|
| Day Class<br>Sat / Sun 7.30-9.00<br>Tue / Thu 3.00-4.30 | சுழற்சி இயக்கம்<br>ஆரம்பம்:-<br>02.10.2012 |

N:- Kapilan B.Sc (23489)(3.6)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(3.6.7)

## A/L தமிழ்

தனியாகவோ, குழுவாகவோ கற்பதற்கு பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்க. 0774535288 (23497)(3.14.6)

## சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

A1-Exam திருமணம் செய்து நிலந்தர விசாவில் Londan செல்பவர்க -ளுக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சை எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலே பரீட்சைக்கு இலகுவா தேற்றமுடியும். Rs. 6000 only
City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
B1-Exam Student Visa மூலம் London செல்வதற்கான ஆங்கில பரீட்சை. City & Guilds
IELTS 50% off on Total Course fee
veta Spoken English
SMS Your Name & Address get Schoolship - 777 577333
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel.: 021-2262470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-2270243
சுன்னாகம் K. K. S வீதி, NSB வங்கி அருகில் Tel.:021-224 1970

## திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களாகரமான நந்தன வருடம் புரட்டாதி மாதம் 15 ஆம் நாள் (01.10.2012) திங்கட்கிழமை மதியம் 12 மணி முதல் 01 மணி வரையுள்ள ரேவதி நட்சத்திரம், தனு லக்கினமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
டயஸ் லேணர்ஸ்
(சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
என்னும் ஸ்தாபனத்தை திறந்து வைக்க இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இன்று 01.10.2012 தொடக்கம் 31.10.2012 வரை பதிவு செய்யும் அனைவருக்கும் 10% கட்டனக்கழிவு தரப்படும்.
பதிவுகளுக்கு முந்துங்கள்.
நன்றி
LEARNER DRIVER
இல.189, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தங்கள் நல்வரவை நாடும்.
திரு.தி. டயஸ்
தொ.பே.இல. 0777942312

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் உள்ள தனியார் அலுவலகத்தில் பணியாற்றக்கூடியவர்கள் தேவை.
(பெண்கள்)
(23502)(3.14)
0775040714

## பணியாளர் தேவை

01. கணக்கு பதிவாளர்:-
முன்னனுபவம் உடையவர்கள் மட்டும்
02. கணினி இயக்குநர்:-
ஆகிய பதவிகளுக்கு தகமையுடையோர் பணி நாள்களில் (8.30 am - 5.30 pm) நேரில் வரவும்.
அஸ்வினி மல்ரி பிளாசா
இல. 74, பலாலி வீதி, ராஜா பிளாசா
கோண்டாவில் கிழக்கு. (சி/3741)(3.14)

## ANANDA HOMES AND CONSTRUCTIONS சாவகச்சேரி

* உங்கள் வீட்டிற்கு அழகாகவும் நேர்த்தியாகவும் மாபிள் (Tile) பதிப்பதற்கு (1 ச.அடி 39/=)
* நவீன குழியலறை (Morden Barthrooms) அமைப்பதற்கும்
* நவீன குசினி அமைப்பு - Morden Kitchen (Pantry System) அமைப்பதற்கும்

Note:- சகல வேலைகளுக்கும் கைதேர்ந்த (Skilled) வேலை ஆள்களால் நிர்மாணிக்கப்படும்.
அழையுங்கள் :- தேவா
0774163146, 0712287060 (23484)(3.6.14)

## CHEMISTRY

2014 A/L முதல் ஐந்து பரீட்சைகளின் சராசரிப் புள்ளிகள்
By: DIAS

| Name | School | Average | Rank | Meadium |
|---|---|---|---|---|
| S.Abiramy | J/VGHS | 97.4 | 1 | T |
| S.Sajithijan | J/HC | 97 | 2 | T |
| K.Umasuthan | J/HC | 95.6 | 3 | T |
| V.Kokulan | J/HC | 95.4 | 4 | T |
| P.Darukeesan | J/HC | 95.2 | 5 | E |
| B.Gunavaran | J/HC | 95.2 | 5 | T |
| T.Narmatha | J/VGHS | 95.2 | 5 | T |
| K.Piriyankan | J/HC | 94.8 | 8 | T |
| P.Denesan | J/HC | 94.6 | 9 | E |
| S.Saranga | J/VGHS | 94.6 | 9 | T |
| K.Abivarshi | J/VGHS | 94.4 | 11 | T |
| M.Sheetharan | J/HC | 93.8 | 12 | T |
| K.Kowsikanth | J/HC | 93.6 | 13 | E |
| M.Tharushikan | J/SJC | 93 | 14 | E |
| C.Thilaksi | J/VGHS | 92.6 | 15 | E |
| M.Mirohan | J/KHS | 92.6 | 15 | T |
| R.Mayoorethan | J/HC | 92.6 | 15 | T |
| M.Moganalakshan | J/HC | 92.4 | 18 | E |
| P.Kalaban | J/HC | 92 | 19 | T |
| B.Vishakaja | J/VGHS | 92 | 19 | T |
| K.Pavalajan | J/HC | 91.8 | 21 | T |
| T.Arunan | J/HC | 91.2 | 23 | T |
| T.Peranavi | J/VGHS | 91.2 | 23 | T |
| M.Anujan | J/HC | 91 | 25 | E |
| P.Rishanthini | J/VGHS | 90.6 | 26 | T |
| V.Yathusan | J/SJC | 90.6 | 26 | T |
| I.Anosha | J/VGHS | 90.4 | 28 | E |
| S.Kajenthini | J/VGHS | 90.4 | 28 | T |
| J.Shythaky | J/VGHS | 90.2 | 30 | T |
| S.Nirvika | J/JHLC | 90 | 31 | T |
| S.Thilakshan | J/HC | 89.8 | 32 | T |
| V.Tharmi | J/CGS | 89.6 | 33 | T |
| N.Mayooran | J/HC | 89.2 | 34 | T |
| J.Vinusha | J/KHC | 89 | 35 | T |
| J.Sarmija | J/VGHS | 88.4 | 36 | E |
| M.Mayuravaani | J/VGHS | 88.4 | 36 | T |
| S.Lathajini | J/VGHS | 88.2 | 38 | T |
| S.Subithra | J/VGHS | 88.2 | 38 | T |
| K.Kirshika | J/KHC | 88.2 | 38 | T |
| M.Buveenthiran | J/HC | 88 | 41 | E |
| A.Nithurshan | J/MHC | 88 | 41 | T |
| T.Tharshanthan | J/SJC | 87.2 | 43 | T |
| S.Niroji | J/VGHS | 87.2 | 43 | T |
| G.Nisakaran | J/HC | 87 | 45 | E |
| S.Shakila | J/VGHS | 87 | 45 | T |
| R.Panuwaran | J/HC | 86.8 | 47 | T |
| A.Yathusana | J/VGHS | 86.6 | 48 | T |
| T.Mathumai | J/VGHS | 86.5 | 49 | T |
| K.Thushyanthiny | J/VGHS | 86.2 | 50 | T |
| S.Sivanujan | J/HC | 86.2 | 50 | E |
| P.Pirathees | J/HC | 86 | 52 | T |
| M.Rasanya | J/VGHS | 86 | 52 | T |
| T.Anoja | J/KHC | 85.8 | 53 | T |
| S.Shanthatharani | J/VGHS | 85.7 | 54 | T |
| M.Aathmika | J/JHLC | 85.2 | 55 | E |
| K.Kobishanth | J/HC | 85.2 | 55 | E |
| S.Jeyakumar | J/HC | 85.2 | 55 | T |
| T.Geethangini | J/VGHS | 85.2 | 55 | T |
| R.Dakshajini | J/VGHS | 85 | 59 | T |

SCIENCE COLLEGE
கன்னாதிட்டி, யாழ்நகர். (23474)(3.14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org